# இஸ்லாமிய சிந்தனை

முத்திங்கள் வெளியீடு

الفكر الإسلامي

மலர் : 22 ஜனவரி - மார்ச் 2000: இதழ்: 2




நளீமிய்யா இஸ்லாமிய வெளியீட்டுப் பணியகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழக்கவழக்கங்களும் பாரம்பரியங்களும்

எமது அரபு, இஸ்லாமிய சமூகத்தினரிடையே பல பழக்கவழக்கங்களும் பாரம்பரிய அம்சங்களும் இடம்பிடித்துள்ளன. இவற்றில் பல இஸ்லாத்தின் உயிரோட்டத்தோடு இயைந்து செல்பவை; இஸ்லாத்தின் அடிப்படைப் போதனைகளுடன் அவை முரண்படுவதில்லை. இவ்வாறான அம்சங்களை இஸ்லாம் நெறிப்படுத்தி அவை பரவலடைய ஊக்கமளிக்கிறது.

தாராளத்தன்மை, மனித நேயம், பிறர் நலன் பேணுவது, பாதிக்கப்பட்டோருக்கு உதவ விரைந்து செல்வது என்பன அவற்றுட் சிலவாகும். இவ்வாறான பழக்கவழக்கங்களும், வழக்காறுகளும் முஸ்லிம் உம்மத்தில் நீண்ட காலமாக இருந்து வருகின்றன.

வேறு சில பழக்கவழக்கங்களும், பாரம்பரியங்களும் நீண்ட காலமாக எமது சமூகத் தில் நிலவி வருகின்றன. அவை மார்க்கத்தோடு முரண்பட்டு அதன் ஏவல்-விலக்கல்களுக்கு புறம்பாக அமைந்து விடுகின்றன. இத்தகு அம்சங்கள் எமது நாடுகளில் நிலை பெற்றுவிடக் கூடாது. இவை களைந்தெறியப்பட்டு அவ்விடத்தில் இஸ்லாத்தின் அடிப் படை களும் அதன் வழிகாட்டல்களும் இடம்பெற வேண்டும். அல்குர்ஆன், அஸ் ஸுன்னா, முஸ்லிம்களது வரலாறு, கடந்த 14 நூற்றாண்டுகளாக முஸ்லிம் அறிஞர்கள் வழங்கிய சட்டத்தீர்ப்புகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இவை நோக்கப் படல் வேண்டும். இதன் மூலம் எமது பழக்கவழக்கங்கள், ஒழுக்க விழுமியங்கள் இஸ்லாத்தின் அடிப்படைகளுடனும் அதன் மகத்தான போதனைகளுடனும் இணைந் திருக்கும்.

இவ்வாறான சம்பிரதாயங்களில் முஸ்லிம் யுவதி கல்விபெற தடை செய்யப்படுவது, தனது கணவனைத் தெரிவு செய்வதில் அவளது ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்று ஷரீஅத் வழங்கியுள்ள உரிமையை மறுப்பது, ஆண் பிள்ளைகளை பெண் பிள்ளைகளை விட மேலாகக் கருதி முதன்மைப்படுத்துவது, அதேபோல் திருமண வைபவங்களின் போது இஸ்லாத்தின் போதனைகளுக்கு ஒத்துவராத இஸ்லாமிய பண்பாட்டு விழுமியங்களுக்கு முரணான பல சம்பிரதாயங்களை கடைப்பிடிப்பது போன்றவற்றை உதாரணங்களாக கூற முடியும்.

இவ்வாறான சம்பிரதாயங்களையும் வழக்காறுகளையும் அமைதியாக, ஆரவாரமின்றி, குறிப்பிட்ட சடங்கின் தீங்கைவிட பெரியதொரு தீங்கு நிகழா வண்ணமும் எதிர்கொள்வது முஃமின் மீதான பொறுப்பாகும். முஃமின் விவேகமும், புத்திக்கூர்மையும் மிக்கவன். எனவே மாற்றத்தைக் கொண்டுவர பொருத்தமான வழிமுறையையே அவன் கையாள்வான்.

— ஸைனப் அல் கஸ்ஸாலி —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்னா - திகடா

# இஸ்லாமிய சிந்தனை

## ISLAMIC THOUGHT முத்திங்கள் வெளியீடு


**QUARTERLY RESEARCH JOURNAL OF JAMIAH NALEEMIAH**

ISSN 1391-393 X



*பிரதம ஆசிரியர்:*
**கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி**
B.A. Hons. (Cey) Ph.D. (Edin)
பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா

*நிர்வாக ஆசிரியர்:*
**ஏ.ஸீ. அகார் முஹம்மத்**
(Naleemi) B.A. Hons. (Cey)

*துணை ஆசிரியர்கள்:*
**எஸ். எம். அஸாஹிம்**
(Naleemi)
**எம். எம். அஸ்மின்**
(Naleemi) B.A. (Cey)

*வெளியீட்டு ஆலோசனைக் குழு:*
**எம்.ஏ.எம். மன்ஸூர்**
(Naleemi) B.A. Hons. (Cey)
**ஸீ. ஐயூப் அலி**
(Naleemi) B.A. Hons. (Cey)
**எச்.ஐ.எம். கைருல் பஷர்**
(Naleemi) B.A. Hons. (Cey),
M.A. Sudan
**எஸ்.எச்.எம். பழீல்**
(Naleemi) B.A. (Cey)



### சந்தா விபரம்
### உள்நாடு

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூபா 20.00 |
| தபால் மூலம் | ரூபா 23.50 |
| ஆண்டுச் சந்தா | ரூபா 90.00 |

**வெளிநாடு – வருட சந்தா**

| | |
|---|---|
| இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு | 160.00 |
| மலேசியா, மத்திய கிழக்கு நாடுகள் | 180.00 |
| ஏனைய நாடுகள் – | 210.00 |



இச்சஞ்சிகையில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவர்கள்.



மலர் : 22 ஜனவரி–மார்ச் 2000 இதழ் : 02


உள்ளே


01. ஆசிரியர் தலையங்கம் – 02

02. அல்–குர்ஆன் சிந்தனைகள் – 04
முத்தகிகளின் அத்தியாயம்
–அஷ்ஷெய்க் முஹம்மத் அல்கஸ்ஸாலி (ரஹ்)

03. ஹதீஸ் தெளிவுரை – 09
முஃமினின் உளப்பாங்கு
–அஷ்ஷெய்க் எஸ். எம். அஸாஹிம்

04. அபுல் ஹஸன் அலி நத்வி – 12
–பன்முக ஆளுமையும் பங்களிப்பும்–
–கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி

05. உலகளாவிய முஸ்லிம் உம்மத் – 19
சிரியா அரபுக் குடியரசு
–அஷ்ஷெய்க் ஏ. ஸீ. அகார் முஹம்மத்

06. முற்கால சமூகங்களின் ஷரீஅத் –24
(ஷராயிஃ சாபிகா)
–அஷ்ஷெய்க் எம். ஏ. எம். மன்ஸூர்

07. இஸ்லாமிய கல்விப் பாரம்பரியம் –27
–கலாநிதி அஷ்ஷெய்க் யூசுப் அல் கர்ளாவி

08. உஸ்மானிய சாம்ராஜ்யம் –31
–மன்னர் இரண்டாம் முராதின் இறுதிக் காலமும் . . .
–அஷ்ஷெய்க் எம். ஏ. எம். மன்ஸூர்

09. அல்குர்ஆனின் அற்புதம். ஒரு நோக்கு III –35
–அஷ்ஷெய்க் எச். ஐ. எம். கைருல் பஷர்

10. அனைவரும் ஏகோபித்து ஏற்றுக் கொண்டுள்ள . . . –39
–கலாநிதி யூசுப் அல் கர்ளாவி

10. சிந்தனைப் பேழை –47

11. ஜாமிஆ செய்திகள் –48



TYPESETTING & LAYOUT BY ROYAL COMPUTER CENTRE - DHARGA TOWN



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய சிந்தனை

மலர் : 22 இதழ் : 02

ஜனவரி – மார்ச் 2000 ஷவ்வால் – துல்ஹஜ் 1420

1999ம் ஆண்டு இஸ்லாமிய அறிவுலகைப் பொறுத்தளவில் ஒரு சோக ஆண்டாக அமைந்தது. இஸ்லாமிய அறிவு வானில் சுடர்விட்டுப் பிரகாசித்து ஒளி பெருக்கிய தாரகைகள் பல உதிர்ந்துவிட்ட துயர ஆண்டாக அது அமைந்தது. ஷெய்க் அலி அத் தந்தாவி, முஸ்தபா அபூ ஸர்கா, ஷெய்க் அப்துல்லாஹ் பின்பாஸ், ஷெய்க் நாஸிருத்தீன் அல்–பானீ போன்ற பல்துறை சார்ந்த இஸ்லாமிய அறிஞர்கள் ஒருவர் பின் ஒருவராக இவ்வுலகைவிட்டுப் பிரிந்தனர். இந்த வரிசையில் அந்த ஆண்டின் இறுதியில் பேரறிஞர் ஸெய்யித் அபுல் ஹஸன் அலி அந் நத்வி அவர்கள் மறைந்தார்கள்.

அபுல் ஹஸன் அலி நத்வி அவர்கள் பன்முக ஆளுமை அமையப்பெற்ற பேரறிஞர். அவர்களின் ஆளுமையில் அறிவும் – ஆத்மிகமும் இணைந்து – ஆழமான வரலாற்றுப் புலமையும் – அகலமான இலக்கிய உணர்வும் சந்தித்தன. இஸ்லாமிய கலைகளும் – உலகியல் ஞானமும் சங்கமித்த இறையுணர்வும் – இறைதூதர்பால் அவர்கள் கொண்டிருந்த அளப்பரிய பாசமும், அன்பும் சந்தித்தன.

இஸ்லாமிய வரலாற்றை ஒரு புதிய கண்ணோட்டத்தில் அணுகி விளக்கி விமர்சித்த வரலாற்றறிஞராக அவர்கள் விளங்கினார்கள். கலீபாக்களின் அரண்மனை வாழ்வின் நிகழ்வுகளையும், அவர்களது படைப்புக்களையும் மையமாக வைத்து நோக்கப்பட்ட இஸ்லாமிய வரலாற்றை சமூக நிகழ்வுகளையும் – இஸ்லாமிய சிந்தனையினையும், இஸ்லாமிய வரலாற்றில் நிகழ்ந்த சீர்திருத்த இயக்கங்களையும் மையமாக வைத்து நோக்கி, இஸ்லாமிய வரலாற்றை மனித சமூகத்தின் மேம்பாட்டுக்காகத் தோன்றிய ஒரு தெய்வீக இயக்கத்தின் மாபெரும் வரலாறாக விளங்கினார்கள். இஸ்லாமிய சமூகத்தின் ஏற்றம், இறக்கத்தையும், அதன் வளைவு நெளிவுகளையும் அவர்களுக்கே உரிய கண்ணோட்டத்தில் விளக்கினார்கள். உலக வரலாற்று நிகழ்வுகளை மையமாக வைத்து இஸ்லாமிய வரலாற்றை நோக்கி முஸ்லிம்களின் இழப்பு பற்றிப் பேசும் பாரம்பரிய அணுகுமுறையிலிருந்து விடுபட்டு, முஸ்லிம்களின் வரலாற்றின் பின்னணியில் உலக வரலாற்றை நோக்கி, முஸ்லிம்களின் வீழ்ச்சியினால் மனித சமூகத்தின் இழப்பை விளக்கினார்கள்.

மனித வாழ்வில் அழகுணர்வும், இலக்கிய உணர்வும் பெறும் முக்கியத்துவத்தை உணர்ந்த அவர்கள் இஸ்லாமிய இலக்கியப் பாரம்பரியம் ஒன்று உருவாகுதல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற கருத்தை வலியுறுத்தினார்கள். இதற்காக ராபிததுல் அதபுல் இஸ்லாமீ என்ற உலக அமைப்பை உருவாக்கினார்கள்.

இக்பாலின் கருத்துக்களில் ஆழமான ஈடுபாடு கொண்டிருந்த நத்வி, கீழைத்தேய பாரம்பரியமும், மேற்கத்திய பாரம்பர்யமும் இணைந்து, ஆத்மிகமும் அறிவியலும் இணைந்த ஒரு புத்துலகு தோன்றுதல் வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார்கள்.

இஸ்லாமிய உலகின் பல பயணங்களை மேற்கொண்டு, அயர்ந்து உறங்கிய நிலையிலிருந்த அரபுலகையும், இஸ்லாமிய உலகையும் தட்டி எழுப்பினார்கள். ஒக்ஸ்போட், கேம்பிரிட்ஜ், லிடஸ், மொன்டரியல், சிகாகோ, பொஸ்டன் போன்ற மேற்கத்திய பல்கலைக் கழகங்களில் உரை நிகழ்த்தி ஐரோப்பிய புத்திஜீவிகள் மத்தியில் மனித இனத்தை நோக்கி இஸ்லாம் விடுக்கும் அழைப்பை முன்வைத்தார்கள்.

மௌலானா அபுல் ஹஸன் அலி நத்வி அவர்கள் 1982 ஆம் ஆண்டு ஜாமிஆ நளீமிய்யாவின் முதல் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு நிகழ்த்திய உரையும், ஜாமிஆவின் வளாகத்தில் அவர்கள் கழித்த ஒருவார கால நினைவுகளும் எங்கள் நெஞ்சங்களில் இன்னும் பசுமையாக உள்ளன. 'ரித்தா–லா அபாபக்கர் லஹா' என்ற அவர்களது நூல் ஜாமிஆவின் கல்விக் கொள்கைக்கு அடிப்படையாக அமைந்தது என்பது பற்றி மௌலானா அவர்களும் பெருமிதம் அடைந்தார்கள். 'மஸீரது ஹயாதீ' என்ற அவர்களது வாழ்க்கை வரலாற்று நூலிலும் இது பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.

"இந்த நாட்டில் இஸ்லாமிய தஃவாவிற்கான அனைத்து கதவுகளும் உங்களுக்கு மூடப்பட்டாலும் ஒரே ஒரு கதவு மட்டும் என்றும் திறந்திருக்கும். அதனை எவராலும் மூட முடியாது. அதுவே 'அக்லாக்' என்னும் இஸ்லாத்தின் விழுமிய நற்குணங்களாகும்." இது ஜாமிஆவின் பட்டமளிப்பு விழா உரையில் ஜாமிஆவின் பட்டதாரிகளுக்கு அவர் விடுத்த முக்கிய செய்தியாகும்.

அபுல் ஹஸன் அலி நத்வி போன்ற பன்முக ஆளுமை அமையப் பெற்ற ஆலிமுர் ரப்பானீ என்ற ஆத்மிக ஒளி பெற்ற அறிஞர்கள், வரலாற்றில் மிக அரிதாகவே தோன்றினார்கள். இன்னொரு அபுல் ஹஸனுக்காக வரலாறு நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டியிருக்கும். ஆனால் மறுமைவரை இஸ்லாத்தின் மாண்புக்காக அத்தகைய நல்லவர்களை அல்லாஹ் தோற்றுவித்துக்கொண்டே இருப்பான். அல்லாஹ் ஸெய்யத் அபுல் ஹஸன் அலி நத்வியின் பணிகளை அங்கீகரித்து அருள்புரிவானாக என நன்றியுணர்வுடன் கண்கள் பனிக்க இறைஞ்சுகிறோம்.

**– கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அல்குர்ஆன் சிந்தனைகள்

# முத்தகிகளின் அத்தியாயம்

**அஷ்ஷெய்க் முஹம்மத் அல்கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் ஸூறா அல் பகராவுக்கு வழங்கிய விளக்கத்திலிருந்து . . .**

*தமிழில் : அஷ்ஷெய்க் ஏ. பி. எம். இத்ரீஸ்*

சென்ற இதழ் தொடர்ச்சி . . . .

தக்வா என்பது மனித உள்ளத்திலே மட்டும் குடிகொண்டுள்ள பய உணர்வு மட்டுமா? அல்லது அறிவா? இல்லை! அது நடத்தைகள் இபாதாவாக முஆமலாவாக ஒழுக்கமாக வெளிப்பட வேண்டும். ஏனெனில் இச்சூரா சமூகத்தைப் பற்றிப் பேசுகிறது. அது இபாதத்தைப் பற்றிக் கூறும்போது *"உங்கள் மீது நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது"* (அல் பகரா : 183) என்று கூறுகின்றது. சட்டத்துறை பற்றி விளக்கும் போது *"உங்கள் மீது 'கிஸாஸ்' விதியாக்கப்பட்டுள்ளது."* (அல் பகரா : 178) என்றும் அரசியல் துறை ஆட்சி பற்றி விபரிக்கும் போது *"உங்கள் மீது போராட்டம் சட்டமாக்கப்பட்டுள்ளது"* (அல் பகரா : 216) என்றும் கூறுகின்றது. ஒரே சொல் சமூக, அரசியல், வணக்க வழிபாடுகளோடு தொடர்பான சட்டங்களை உள்ளடக்கியுள்ளது. 'தக்வா' என்பது பிரித்துப் பார்க்க முடியாத ஒரு சொல். தக்வா உடைய உள்ளம் என்பது தனது தொழுகையில், நோன்பில் மனிதர்களுக்கு மத்தியில் தீர்ப்புச் சொல்வதில் நாணயத்தோடு நடந்துகொள்ளும் மனிதனின் உள்ளத்தையே குறிக்கும். அவனுக்கெதிராக இருந்தாலும் அவன் அல்லாஹ்வுக்காகவே போராடுவான். மனிதனின் கட்டமைப்பு முழுவதும் தக்வாவினால் துருவகற்றப்படும் அளவுக்கேற்பவே அவன் முதிர்ச்சியடைந்தவனாக, மகத்தானவனாக, கண்ணியத்துக்குரியவனாக மாறுவான்.

இது இவ்வத்தியாயம் பற்றிய மிகச் சுருக்கமான கண்ணோட்டமாகும். பெரும் நகரமொன்றின் மீது விமானத்தில் பறந்துகொண்டிருப்பவன் பார்ப்பதைப் போல சடுதியான, சுருக்கமான ஒரு பார்வையையே நான் செலுத்தியுள்ளேன்.

ஆனால் இவ்வத்தியாயத்தின் எல்லாப் பகுதிகளையும் சற்று ஆழமாகப் பார்க்கும் போது - முத்தகிகளைப் பற்றிப் பேசும் - இச்சூரா மனிதர்கள் மூன்று பிரிவினர் என்று விளக்குகின்றது. தக்வாவுடைய விசுவாசிகள், பாவிகளான நாஸ்திகப் பண்புடைய நிராகரிப்பாளர்கள், உள்ளத்தில் ஈமானே இல்லாத முனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிக்குகள். ஆனால் இவர்கள் வெளிப் படையில் தமது நலன்களைப் பேணிக் கொண்டே முஃமின்களின் அணியில் சேர்ந்து கொண்டிருப்பவர்கள். முத்தகி கள் பற்றி இரண்டு அல்லது மூன்று வச னங்கள்; நிராகரிப்பாளர் பற்றி இரண்டு வசனங்கள்; ஆனால் முனாபிக்குகள் பற்றி பதின்மூன்று வசனங்கள்.

இவ்வத்தியாயத்தின் ஆரம்பத்தை சற்று அவதானிக்கும் போது முத்தகிகளை வர்ணிக்கும் இந்த வார்த்தையைப் பார்க் கின்றேன். "அவர்கள் 'கைப்' ஆனவற்றை விசுவாசிக்கின்றனர்" 'கைப்' என்றால் என்ன? புலன்களுக்கு அப்பாற்பட்ட மறைவான உண்மைகளாகும்.

மிகப் புராதன காலத்தில் மனிதர்கள் இப்படிக் கூறினர்: நாம் சடத்தைத் தவிர வேறெதனையும் நம்ப மாட்டோம். கற்புல னாகாதவற்றை விசுவாசிக்க மாட்டோம். ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் வரு கின்றார். அவரது கையில் ஓர் எலும்பு இருக்கின்றது. அதை அவர் துண்டுதுண் டாக உடைத்து காற்றில் தூவியபடியே கேட்டார்: முஹம்மத், அல்லாஹ் இதனை மீண்டும் உயிர்ப்பிப்பான் என்று நீர் நம்புகிறீரா? அதற்கு நபிகளார்: "ஆம் அல்லாஹ் உன்னை மரணிக்கச் செய்து பின்னர் உன்னை எழுப்பி பின் நரகில் ஒன்று சேர்ப்பான்." (ஆதாரம் : அல் ஹாகிம்) முதல் முறையாய்ப் படைத்தவ னுக்கு மீண்டும் படைப்பது சாத்தியமே!

ஆனால் ஜாஹிலிய்யப் பண்பு கொண்டோரின் வாதம் என்ன? மறை வானவற்றை நம்புவது அறிவார்ந்த சிந்த னையல்ல என்று பத்திரிகைகளில் எழுதி வருகின்றனர்.

நாம் அல்லாஹ் இருப்பதாக நம்பு கின்றோம். தெய்வீக இருத்தலை நாம் நமது கரங்களால் உணரவில்லை. நமது பகுத்தறிவையும் நமது கரங்களால் தொட்டுணரவில்லை. எமது ஆன்மாவை யும் நாம் கையால் தொடவில்லை. சடம், ஆன்மா இரண்டினதும் ரட்சகனை புல னால் அறிய முடியுமென்று எப்படி நாம் நினைப்பது. இது அசாத்தியமானது. எனவேதான் புலனை வணங்குவோரிடத் தில் மறைவானவற்றை ஈமான் கொள்வது நகைப்புக்குரியதாக இருந்தது. "பாவி களின் ஏடு சிஜ்ஜீனில் இருக்கிறது. சிஜ்ஜீன் என்றால் என்ன? அது எழுதப்பட்ட புத்தகமாகும். பொய்ப்படுத்துவோருக்குக் கேடுதான். அவர்கள் கூலி கொடுக்கும் நாளைப் பொய்ப்படுத்துகின்றனர். அத்து மீறிய பாவியே அதனைப் பொய்ப்படுத்து கின்றான். அவன் மீது நம்முடைய வசனங் கள் ஓதிக் காண்பிக்கப்படும் போது இவை முன்னையோரின் கட்டுக் கதைகள் எனக் கூறுகின்றான்." (அல் முதப்பிபூன் : 7-13) இறந்த கால மூட நம்பிக்கைகள், இறந்த காலம் விடப்பட வேண்டியது அல்லாஹ்வை நம்புதல், வஹியை நம்பு தல், முன்னையோரின் கட்டுக்கதை!!

இக்கருத்தை குர்ஆன் பலமுறை திருப்பித் திருப்பிக் கூறுகின்றது. "அவர் களில் உம்மைச் செவிமடுப்பவர்களும் இருக்கின்றனர். அவர்களின் உள்ளங் களில் அதனை விளங்காதிருக்க நாம் திரைகளை ஏற்படுத்தியுள்ளோம். அவர் களின் காதுகளில் ஒரு சுமை இருக்கின் றது. அவர்கள் ஒவ்வொரு வசனத்தையும் கண்டாலும் ஈமான் கொள்வதில்லை. உம்மோடு வாதாடுவதற்காக அவர்கள் வரும்போது இவை முன்னோரின் கட்டுக் கதைகளே என்று நிராகரிப்பவர்கள் கூறு கின்றனர்." (அன்ஆம் : 25) கடந்த காலத் தைப் பற்றிப் பேசுவது மூடத்தனமானது. முன்னையோரிடமிருந்து நாம் பெற்றவை மூடத்தனமானவை. நிகழ்கால கண்டு பிடிப்பிலிருந்து உருவாகிய புதிய வார்த் தையன்று. இது அவ்வாறானதாக இல்லை. இது மிகவும் பழைய வார்த்தை, உயர்வான வஹி. மனிதர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்ட போதெல்லாம் நாஸ்தி கர்கள் இதே வார்த்தையைத்தான் கூறிக் கொண்டிருந்தனர். மறைவானவற்றை நம்புவது மிகவும் முக்கியமாகும். நாம் மனிதர்கள் என்ற வகையில் குறிப்பிட்ட சில உடல்கள் குறித்த இடத்திற்கேற்பவே நம்மால் காண முடியும். இடைவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீளுமானால் நம்மால் காண முடியாது. உடல்கள் சிறுத்தாலும் நம்மால் பார்க்க முடியாது. ஆனால் மனிதர்கள் பார்ப்பதைவிட, ஸ்பரிசிப்பதைவிட, உணர்வதைவிட அல்லாஹ் உயர்வானவன், அறிவற்ற ஆனால் அறிவு படைத்தவர்களாக தம்மைக் கூறிக்கொள்ளும் இத்தகையவர்களைப் போன்றவனும் அல்ல அவன்.

இச்சூரா முத்தகிகளை வர்ணிப்பதோடு ஆரம்பிக்கின்றது. மறைவானவற்றை விசுவாசிக்கும் முத்தகிகள் தொழுகையை நிலைநாட்டுவர், சகாத்தை வழங்குவர், அல்லாஹ்வின் தீர்க்கதரிசனத்துக்கு முன்னர் இறங்கிய வேதங்களை நம்புவர் எனவும் இணைத்துக் கூறுகின்றது. ஈமானை பூரணப்படுத்த விரும்புபவருக்கும் அல்லாஹ்விடமிருப்பவற்றை உண்மைப் படுத்த விரும்புபவருக்கும் இத்தகைய முதுமையான ஈமான் அவசியமாகும். இதன் பின் இச்சூரா பனூ இஸ்ராயீல்களைப் பற்றிக் கூறுகின்றது. பனூ இஸ்ராயீல்களைப் பற்றிப் பேசுவதை நாம் பல வகையாக நோக்கலாம்.

இச்சூரா குறிப்பிடும் சமூகம், இறைவனால் கண்ணியப்படுத்தப்பட்ட சமூகமாக இருந்தது. *"இஸ்ராயீலின் சந்ததியாளரே! உங்கள் மீது நான் சொரிந்த எனதருளை நினைவு படுத்துங்கள்! நான் உலகத்தாரைவிட உங்களை மேன்மைப்படுத்தி வைத்தேன்." (அல் பகரா : 47)* இஸ்ராயீலும் அவரது பிள்ளைகளும் எந்த அடிப்படையில் மேன்மைப்படுத்தப்பட்டனர் என்பதையும் இச்சூரா கூறுகின்றது. இஸ்ராயீல் அதாவது யஃகூப் ஏகத்துவத்தின் பக்கம் அழைப்பு விடுக்கும் நபியாக இருந்தார். அவரது அழைப்பு, அவரது பாட்டன் இப்றாஹீமின் அழைப்புடன் தொடர்புற்றிருந்தது. ஏகத்துவத்திற்கான இவ்வழைப்பு, மனிதர்கள் நேர்வழிபெற வேண்டுமென்ற பேரார்வம்தான் அவர்கள் அதை எத்தி வைப்பதையும் அதற்காக ஒன்றிணைவதையும் பாக்கியமாகப் பெறுவதற்குத் தகுதி பெற்றனர். *"யஃகூப் இற்கு மரணம் சமீபித்த போது நீங்கள் சான்று பகர்பவர்களாய் இருந்தீர்களா? அவர் தனது பிள்ளைகளைப் பார்த்து, எனக்குப் பின் எதனை வணங்குவீர்கள் எனக் கேட்டார். அதற்கவர்கள் உமது இறைவனையும் உமது தந்தையர்களான இப்றாஹீம், இஸ்மாயீல், இஸ்ஹாக் ஆகியோரின் ஏக இறைவனையே நாம் வணங்குவோம். அவருக்கு நாம் முற்றிலும் கட்டுப்படுவோம்." (அல் பகரா : 133)* இன்று இஸ்ராயீலின் பிள்ளைகள் அன்று யஃகூப் எத்தி வைத்த றிஸாலத்தின் தரத்திலே இருக்கின்றார்களா? நிச்சயமாக இல்லை. கோட்பாட்டு ரீதியாகப் பார்க்கும் போது அவர்களிடமிருக்கும் வேதமும் உருமாற்றப் பட்டுவிட்டது. அதில் ஒழுக்கச் சீர்கேடுகள் மலிந்துள்ளன. சுலைமான் (அலை) அவர்களுக்குரிய கீதங்களும் பழைய ஏற்பாட்டில் பதிவாகியுள்ளன. மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளையும் வசனங்களையுமே அதில் வாசிக்க முடியும். பாவத்துக்கும் தீமைக்குமான அமைப்புக்களாலேயே அது நிரம்பியுள்ளது. இத்தகைய இழிவுக்கும், கேட்டுக்கும் உரிய விடயங்கள் புனித வேதமொன்றில் இருக்க முடியுமா? இருந்தால் அது புனித வேதமா?

பழைய ஏற்பாட்டில் படைப்புக் கொள்கையை விளக்கும் ஏடு அல்லாஹ் பற்றிய பல புனைவுகளை உள்ளடக்கியுள்ளது. அவனை ஸ்தூலப் பொருளாக்கி, மனிதரோடு உண்ணக் கூடியவனாக, சமர் செய்யக் கூடியவனாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அல்லாஹ்வுக்கு சற்றேனும் பொருத்தமற்ற, பகுத்தறிவால் ஏற்க முடியாதவாறு புனைந்துரைக்கப் பட்டுள்ளது.

இஸ்ரேலிய அரசு உருவான சிந்தனையும் தீமையும் அநீதியும் நிறைந்த சிந்தனையாகும். பின் கொரியன் என்ற யூதன் பின்வருமாறு சொன்னான்: அல்லாஹ் ஆறு நாட்களில் இவ்வுலகைப் படைத்தான். அதை சீர்படுத்துவதற்கு அவனுக்கு நேரமிருக்கவில்லை. அல்லாஹ்வுக்குப் பதிலாக ஆட்சிப் பொறுப்பையேற்றுள்ள நாமே அதனைச் சீர்படுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவோம். இக்கருத்து என்ன விளைவை ஏற்படுத்தும்?

உலகம் முழுவதும் உள்ள சமுதாய, ஒழுக்க, உளச் சீர்கேடுகளுக்குப் பின்னால் யூதர்களே சூத்திரதாரிகளாக இருக்கின்றனர். எனவேதான் இவர்களை விளித்துப் பேசும் போது அல்குர்ஆன்: *உங்களிடமிருப்பதை விட்டுவிடுங்கள். உங்களுக்குக் கற்பிக்க வந்துள்ள புதிய தூதரைப் பின்பற்றுங்கள். உங்களுக்கோர் இடம் இருந்திருந்தாலும் நல்லோர்கள், அந்நல்லோரின் தலைவராகிய முஹம்மத் பின் அப்துல்லாஹ்வைப் பின்பற்றாமல் நீங்கள் அதனை அடைவது அசாத்தியம். "இஸ்ரயீலின் பிள்ளைகளே! நான் உங்கள் மீது சொரிந்த எனதருளை நினைத்துப் பாருங்கள். என்னுடைய வாக்குறுதியை நீங்கள் பூரணமாக நிறைவேற்றினால் நான் உங்களுடைய வாக்குறுதியை நிறைவேற்றுவேன். எனக்கே பயப்படுங்கள். உங்களுடனிருப்பதை உண்மைப்படுத்தக்கூடிய, நான் இறக்கியவற்றை ஈமான் கொள்ளுங்கள். அதனை நிராகரிப்போரில் முதன்மையானவர்களாக இருக்காதீர்கள். எனது வசனங்களை அற்ப விலைக்கு விற்று விடாதீர்கள். என்னைத் தக்வா செய்து வாழுங்கள்." (அல் பகரா : 40, 41)*

இக்கருத்துக்கள் பனூ இஸ்ராயீல்களுக்குக் கூறப்பட்டது போல முஸ்லிம்களுக்கும் கூறப்பட்டுள்ளது. இதன் பொருள் என்ன? அழிந்துபோன சமூகங்களைப் பற்றி விளக்கும் போது அதன் நிறைகளையும், குறைகளையும் சரிசமமாகப் பேசுவதே அல்குர்ஆனின் வரலாற்று நேர்மையாகும். அல்லாஹ்வின் தூதைச் சுமந்து அதை எத்திவைத்துக்கொண்டிருக்கும் இஸ்லாமிய சமூகத்தைப் பற்றிப் பேசும்போதும் அதன் கடமைகளைச் செய்யாவிட்டால் அது அழிந்துவிடும். சட்டப் பொறுப்புக்களைக் கடைப்பிடிக்காவிட்டால் தோல்வியுறும் என்பதையும் அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது. முஸ்லிம்களைப் பார்த்து அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது: *"அவ்வாறே நாம் உங்களுக்கு மத்தியில் உங்களிலிருந்தே ஒரு தூதரை அனுப்பினோம். அவர் நமது வசனங்களை உங்களுக்கு ஓதிக்காட்டுகிறார். உங்களைத் தூய்மைப்படுத்துகின்றார். வேதத்தையும் ஞானத்தையும் உங்களுக்குக் கற்றுத் தருகின்றார். நீங்கள் அறியாதவற்றையும் உங்களுக்குக் கற்றுத் தருகின்றார். என்னை நினைவுபடுத்துங்கள்; நான் உங்களை நினைவுபடுத்துவேன். எனக்கு நன்றி செலுத்துங்கள். நன்றி கெட்டவர்களாக மாறாதீர்கள்." (அல் பகரா : 151, 152)* "என்னை நினைவு படுத்துங்கள்; நான் உங்களை நினைவுபடுத்துவேன்" என்பதன் பொருள், என்னை நீங்கள் மறந்துவிட்டால் நானும் உங்களை மறந்து விடுவேன். எனது உரிமைகளை நிறைவேற்றாதுவிட்டால் உங்களுக்கும் என்னிடத்தில் எவ்வித உரிமையும் கிடையாது. 'தக்வா' என்னும் கோட்பாட்டை நீங்கள் கடைப்பிடிக்காவிட்டாலும் உங்களுக்கு முன்பிருந்த சமூகங்களுக்கு நடந்ததே உங்களுக்கும் நடக்கும்.

இவ்வத்தியாயத்தை விரிவாகப் பார்க்கும் போது தக்வா என்பது குடும்ப, வியாபாரம், விவாக, விவாக விடுதலை, பாலூட்டல், சத்தியம், ஈலாஉ போன்ற சட்ட ஒழுங்குகளை உள்ளடக்கியிருப்பதை அவதானிக்க முடியும்.

முழுக் குர்ஆனிலும் வருகின்ற சட்டங்களில் மிகப் பெரும்பாலானதை இவ்வத்தியாயம் கொண்டுள்ளது. இச்சட்டங்கள் அதன் மொத்த உருவில் நடைமுறைப்படுத்துவதால் இஸ்லாமிய சமூகத்தை தக்வா உள்ள சமூகமாக மாற்றும். அச்சமூகம் அல்லாஹ்வின் கவனத்திற்குரியதாகவும் மாறும்.

இவ்வத்தியாயம் ஈமான், தக்வா, முன்னைய வேதங்களை நம்புதல், நபிமார்களை நம்புதல் போன்ற விடயங்களுடன் ஆரம்பித்தவாறே அது முடிவுறும் போதும் அமைந்து காணப்படுகின்றது. தூதர் தனது இரட்சகனிடமிருந்து இறக்கப்பட்டதை விசுவாசிக்கின்றார். முஃமின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் அல்லாஹ், மலக்குகள், வேதங்கள், தூதர்கள் ஆகியோரை விசுவாசிக்கின்றனர். நாம் தூதர்களைப் பிரித்து நோக்குவதில்லை. அவர்கள், "நாம் செவிமடுத்தோம், வழிப்பட்டோம். இறைவா எம்மை மன்னிப்பாயாக. உம்மிடமே மீட்சி என்று கூறுவர். அல்லாஹ் ஓர் ஆத்மாவை அதன் சக்திக்கு அப்பால் நிர்ப்பந்திப்பதில்லை. அது சம்பாதித்த நன்மையும், தீமையும் அதற்கேயுரியது" என்று கூறி இறுதியாகப் பின்வரும் பிரார்த்தனையுடன் முடிவடைகின்றது. *"இரட்சகா! நாம் மறந்துவிட்டால் அல்லது தவறிழைத்து விட்டால் எம்மைத் தண்டித்து விடாதே. இரட்சகா! எமக்கு முன்பிருந்தவர்கள் மீது சுமத்தியது போன்று பெருஞ் சுமையை எம்மீது சுமத்திவிடாதே! எமது சத்தியத்துக்கு அப்பாற்படாததையும் எம் மீது சுமத்தி விடாதே. எம்மை மன்னித்து விடு; எமது தவறுகளை மன்னித்து விடு; எமக்கு இரக்கம் காட்டு. நீயே எமது தலைவன் நிராகரிக்கும் சமூகத்துக்கெதிராக எமக்கு உதவி செய்" (அல் பகரா : 285, 286)* இம் முடிவுரையை அடுத்து அத்தியாயத்தின் ஆரம்பத்தோடு தொடர்புறுத்தும் பல விளக்கங்கள் உள்ளன. அத்தியாயத்தின் ஆரம்பம் மறைவானவற்றை நம்புவதாகும். அம்மறைவான நம்பிக்கையிலிருந்து மறுமையில் எழுப்பப்படுவதை நம்புவதையும் கூறுகின்றது. எனவேதான் அத்தியாயத்தின் இறுதியில் மறைவான நம்பிக்கை பற்றிப் பேசும் போது மறுமையில் எழுப்பப்படுவதை விளக்குகின்றது. *"அல்லது ஒரு நகரத்தைத் தாண்டிச் சென்றவனைப் போன்றதாகும். அது பந்தல்களோடு சேர்ந்து வீழ்ந்து கிடந்தது. இதை இறந்தபின் அல்லாஹ் எப்படி உயிர்ப்பிப்பான் என்று அவன் கேட்டான். அல்லாஹ் அவனை நூறு ஆண்டுகளுக்கு மரணிக்கச் செய்து பின்னர் உயிருடன் எழுப்பினான். எத்தனை நாள் தங்கியிருந்தீர் என்று கேட்ட போது ஒரு நாள் அல்லது சில நாட்கள் என்று அவன் கூறினான். இல்லை நீர் நூறு ஆண்டுகள் தங்கியிருந்தீர். உனது உணவையும் பானத்தையும் பார்; அவை பழுதடையவில்லை. உனது கழுதையைப் பார்; நாம் உம்மை மனிதர்களுக்கு அத்தாட்சியாக ஆக்கியுள்ளோம். எலும்புகளைப் பார்; அதை நாம் எப்படி உயிர்ப்பிக்கின்றோம். பின்னர் அதன் மீது எப்படி சதையை ஏற்படுத்துகின்றோம் என்பதை அவன்தான் அவனுக்கு அது தெளிவாக விளங்கிய போது அல்லாஹ் அனைத்தின் மீதும் ஆற்றல் பெற்றவன் என்பதை நானறிவேன் என்று கூறினான்." (அல் பகரா : 259)* ஆனால் அல்லாஹ் ஒவ்வொரு மனிதனும் அவனை ஈமான் கொள்ள, உண்மைப்படுத்த சடரீதியான அற்புதமொன்றைக் காட்ட வேண்டுமென எதிர்பார்க்கவில்லை. அவன் மனிதனைப் பார்த்துச் சொல்வதெல்லாம் நான் உனக்குப் பகுத்தறிவைக் கொடுத்துள்ளேன்; என்னை அறிவதற்கான முறையையும் உனக்குக் காட்டியுள்ளேன். நீ உணர்வற்று இறந்துபோன நெருப்பிலிட்டுச் சமைக்கப்பட்ட உணவைத்தான் உட்கொள்கிறாய். இறந்துபோன இவ்வுணவு சில மணித்தியாலங்களில் உனதுடலில் உயிர்க்கலங்களாக மாறுகின்றன. அது எலும்புகளுக்கும், தசைகளுக்கும், முடிக்கும், நகத்துக்கும் பரிவர்த்தனை செய்யப்படுகின்றது.

இது எப்படி மாறுகின்றது? எமக்குத் தெரியாத ஆனால் இந்த மனிதன் நாளடைவில் இறாத்தலாக, கிலோவாக, பின் நூறு கிலோவாக அவனது எடை அதிகரிப்பதைப் பார்க்கின்றோம்.


எனவே சடப்பொருள் - உணவு - எமது உடற் கட்டமைப்பில் எப்படி உயிர்க்கலமாக மாறுகின்றது. குர்ஆன் கூறும் போது *"வானங்கள் பூமியைப் படைத்திருப்பதில் இரவு பகல் மாறிமாறி வருவதில் மனிதர்களுக்குப் பயன்படுபவற்றை ஏற்றிக்கொண்டு கடலில் பயணம் செய்யும் கப்பலில், மேகத்திலிருந்து நீரை இறக்கி, அதன் மூலம் காற்றை, பூமியை இறந்த பின் உயிர்ப்பித்து அதில் எல்லா உயிரினங்களையும் பரவச் செய்வ*

(23ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹதீஸ் தெளிவுரை



# முஃமினின் உளப்பாங்கு

ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : "முஃமினுடைய விடயம் ஆச்சரியத்திற்குரிய தாகும். அவனது எல்லா விடயங்களும் அவனுக்கு நன்மையானதாகவே அமைகிறது. இது முஃமினுக்கு மாத்திரம் உரிய ஒன்றாகும். மகிழ்ச்சிக்குரிய அம்சங்கள் அவனுக்கு ஏற்பட்டால் அவன் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவான். அது அவனுக்கு நன்மையா னதாக அமையும். அவனுக்கு யாதொரு தீங்கும் ஏற்பட்டால் பொறுமையைக் கடை பிடிப்பான். அதுவும் அவனுக்கு நன்மையானதாகவே அமையும்."

அறிவிப்பவர் : ஸுஹைப் இப்னு ஸினான் (ரழி) ஆதாரம் : முஸ்லிம்

மேற்குறிப்பிட்ட ஹதீஸ் முஃமினு டைய மனோநிலையை சித்தரித்துக் காட் டுகிறது; அவனது உளப்பாங்கை படம் பிடித்துக் காட்டுகிறது. பொதுவாக, உல கில் வாழ்கின்ற எந்தவொரு மனிதனும் இன்ப, துன்ப நிகழ்வுகளை நாளாந்தம் சந்திக்கிறான். எனினும் இவற்றை எதிர் கொள்வதில் மனிதர்களிடையே வித்தியா சமான மனோநிலைகள் இருப்பதைப் பார்க்கின்றோம்.

அல்லாஹ் ஏற்றுக்கொண்ட, அவ னது திருப்திக்காகவே வாழ்கின்ற உள்ளங் கள் எப்பொழுதும் அமைதியான, சலன மற்ற, நிறைவான மனோநிலையுடன் வாழ்க்கையின் மகிழ்ச்சிகரமான, துன்ப கரமான நிகழ்வுகளை எதிர்கொள்ளும். அல்லாஹ்வை மறந்த அவனது தீர்ப்புக் களில் திருப்தியுறாத உள்ளங்கள் மகிழ்ச்சி கரமான சந்தர்ப்பங்களின் போது அத்து மீறி நடந்துகொள்ளும். துன்பகரமான சந்தர்ப்பங்களின் போது அதிர்ந்து குழம் பிப்போய் விடும் - என்பதைத்தான் இந்த ஹதீஸ் சுட்டி நிற்கிறது.

இங்கு நபியவர்கள் முஃமினுடைய மனோநிலை குறித்து ஆச்சரியப்படுவதா கக் குறிப்பிடுகிறார்கள். ஆச்சரியப்படுதல் திருப்திக்காகவும் மகிழ்ச்சியை வெளிப் படுத்துவதற்காகவும் அமைவது போல வே வெறுப்பையும் அதிருப்தியையும் காட்டுவதாகவும் அமையலாம்.

இந்த ஹதீஸில் முஃமினுடைய விட யத்தில் ஆச்சரியப்படுவதற்கான காரணத் தை நபியவர்கள் ஆரம்பமாக விளக்க வில்லை. அதாவது அவனுக்கு தான் எதிர் பார்த்ததைவிட அதிகமான நன்மைகள் கிடைக்கப் பெறும்போது அது குறித்து அவனைப் புகழவும், அல்லது அவனுக்கு ஏற்படும் துன்பத்தின் போது அதற்காக வருந்தவுமான சூழ்நிலை ஆச்சரியப்படு வதற்கொன்றல்ல. மாற்றமாக கேட்போ ரை விளித்து தொடர்ந்து வரும் பகுதி களை ஆர்வத்தோடும் ஆசையோடும் செவிமடுக்கச் செய்யவே எந்த முறையைக் கையாண்டிருக்கிறார்கள். இனி படிப்படி யாக நபியவர்கள் ஆச்சரியத்திற்குரிய விட யத்தை விளக்குகிறார்கள்.

"முஃமினுடைய எல்லா விவகாரங் களும் அவனுக்கு நன்மையானதாகவே அமைகிறது." இந்த வார்த்தையை செவி யேற்கின்ற ஒருவன் மிகவும் ஆச்சரிய மடைகின்றான்.

பொதுவாக நாங்கள் உலகியல் விவ காரங்களை முழுமையான நன்மைக்குரிய

அஷ்ஷெய்க் எஸ். எம். அஸாஹிம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சங்களாக நோக்குவதோ அல்லது அனைத்தையும் தீமையானதாக நோக்குவதோ இல்லை. அல்குர்ஆனிலே அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்.

*"உங்களை நாம் நன்மையைக் கொண்டும், தீமையைக் கொண்டும் சோதிப்போம்"*

குறிப்பாக முஃமினுடைய வாழ்க்கையைப் பொறுத்தவரையில் ஏனையோரின் வாழ்க்கையைவிட கடும் சோதனைக்கும் சிக்கல்களுக்கும் ஆளாவதைக் காண்கிறோம். ஸஹீஹுல் புகாரியில் பின்வரும் ஹதீஸ் பதியப்பட்டுள்ளது.

"மனிதர்களிலே கடும் சோதனைக்குள்ளாகுபவர்கள் நபிமார்களாவர். பின்னர் அவர்களின் தரத்தில் உள்ளவர்களும், அடுத்தடுத்த தரங்களிலுள்ளோரும் சோதிக்கப்படுவர்."

இந்நிலையில் தீமை, எவ்வாறு நன்மையானதாக அமையலாம். துன்பம், எப்படி இன்பமானதாக அமையலாம் என்பதை சிந்திக்கின்ற போது ஆச்சரியப்படுவது இயல்பானதே.

இதனை நபியவர்கள் "இது முஃமினுக்கு மாத்திரமேயுரிய ஒன்று" என்று வரையறை செய்துள்ளார்கள். உண்மையில் முஃமினுக்கு மாத்திரமே வாழ்க்கை நிகழ்வுகளை நிதானமாக, நின்று எதிர்கொள்ள முடியும். அந்த வகையில் அவனுக்கு ஏற்படுகின்ற எல்லா வகையான மகிழ்ச்சிகரமான நிகழ்வுகளையும் அவன் நிதானமாகவே எதிர் கொள்வான். மகிழ்ச்சிக்குரிய அம்சங்கள் தனது சொத்து - செல்வங்கள் மூலமோ சந்ததிகள் மூலமோ வாழ்க்கையின் ஏதேனும் விடயங்களினூடோ ஏற்படலாம். இவற்றை எல்லாம் எதிர்கொள்ளும் முஃமின் அவற்றைத் தனக்கு வழங்கிய அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் மனப்பான்மையை இயல்பாகவே பெற்றிருக்கிறான். அவன் தனது உள்ளம், நாவு, உடலுறுப்புக்கள் ஆகிய அனைத்தினாலும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவான்.

உள்ளத்தால் நன்றி செலுத்துவதென்பது தனக்குக் கிட்டிய அந்த நன்மை அல்லாஹ்வின் அருளில் இருந்து கிடைக்கப் பெற்றது. நான் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துகின்றேனா, அல்லது நன்றி மறந்து செயற்படுகின்றேனா என்பதை சோதிப்பதற்காகவே அல்லாஹ் இதனை எனக்கு வழங்கியிருக்கின்றான் என்ற உணர்வை உள்ளத்தில் கொள்வதாகும்.

நாவினால் நன்றி செலுத்துவதென்பது அல்லாஹ்வைப் புகழ்ந்து தனக்கு மேலும் அவனது அருள்களை வழங்க வேண்டும் என்று அல்லாஹ்வை இறைஞ்சுவதைக் குறிக்கும்.

உடலுறுப்புக்களைப் பொறுத்தவரையில் நன்றி செலுத்துவது எனும் பொழுது அல்லாஹ் தனக்கு வழங்கியிருக்கின்ற அருட்கொடைகளில் உலோபித்தனம் காட்டாது தாராளத் தன்மையோடு நடந்து ஷரீஅத் விதித்திருக்கின்ற அடிப்படையில் அதற்குரிய உரிமையை நிறைவேற்றுவதாகும்.

நன்றி செலுத்தும் அடியானுக்கு அல்லாஹ் இம்மையிலும் மறுமையிலும் சிறப்புக்களை வழங்குகிறான். "நீங்கள் நன்றி செலுத்துவீர்களானால் உங்களுக்கு மேலும் அதிகரித்து வழங்குவேன்." "நன்றி செலுத்துவோருக்கு நாம் நற்கூலியை வழங்குவோம்" என்றெல்லாம் அல்லாஹ் அல்குர்ஆனிலே சுபசெய்தி கூறுகின்றான்.

ஒரு முஃமினுடைய வாழ்க்கையில் வறுமை, நோய், எதிரிகளின் அத்துமீறல், இழப்புக்கள் போன்றவற்றால் கவலையும் மனவேதனையும் ஏற்படலாம். இந்நிலையில் அவன் பொறுமையை கடைபிடிக்கிறான். இதன் கருத்து தனது நிலையை மாற்றிக்கொள்ள உழைக்காமல் சோம்பிக் கிடப்பான் என்பதல்ல. மாற்றமாக தனது துன்பம் தரும் நிலையிலிருந்து தன்னை மீட்டிக்கொள்ள அவன் பல பிரயத்தனங்களை மேற்கொள்வான்; அதற்குத் தேவையான பௌதிகக் காரணிகளை கருத்திற் கொள்வான். அல்லாஹ்வின் விதிமீது அவன் கோபமடைய மாட்டான். அவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது கருணையின் மீது நிராசையடைந்து விடவும் மாட்டான். அல்லாஹ் தனக்காக தெரிவு செய்ததை திருப்தியாக ஏற்று அங்கீகரித்துக் கொள்வான். தனது மீட்சிக்கான பல வாயில்களை அவன் ஏற்படுத்துவான் என்ற எதிர்பார்ப்பில் அமைதியடைவான்.

மேலும் அல்லாஹ் அவனது பொறுமைக்கு மறுமையிலே உயர்ந்த கூலிகளை வழங்குகிறான். "நபியே பொறுமையாளர்களுக்கு நீர் நற்செய்தி சொல்வீராக" என்று அல்லாஹ் கூறுகிறான். நபியவர்கள் இதனைப் பின்வருமாறு விளக்கினார்கள்.

"ஒரு முஃமினுக்கு ஏற்படுகின்ற நோவினை, களைப்பு, நோய், கவலை என்பவற்றிற்கெல்லாம் பகரமாக அல்லாஹ் அவனது பாவங்களை மன்னிக்கிறான்."

மற்றுமோர் அறிவிப்பின்படி "ஒரு முஸ்லிமுடைய காலில் தைக்கின்ற முல்லுக்கோ அல்லது ஏதேனுமொரு பொருளுக்கோ பகரமாக அல்லாஹ் அவனது பாவம் ஒன்றை மன்னிக்கிறான். அல்லது அந்தஸ்த்தொன்றை உயர்த்துகிறான்." மேற்குறிப்பிட்ட இரு அறிவிப்புகளும் ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் ஆகிய இரு கிரந்தங்களிலும் பதிவாகியுள்ளன.

உலக வாழ்க்கையில் பொறுமை மூலம் அவன் மன நிம்மதியையும் அமைதியையும் காண்பதோடு நாளாந்த வாழ்க்கையை திருப்தியோடு எதிர்கொள்வான்.

இதுவே முஃமினின் உளப்பாங்கு. காபிரைப் பொறுத்தவரையில் மகிழ்ச்சிக்குரிய சந்தர்ப்பங்களின் போது பெருமை கொண்டு அகங்காரத்தோடு அத்துமீறி செயற்படுவான்; துன்பமான சந்தர்ப்பங்களில் அதிர்ச்சியடைந்து, நிராசையடைந்து, விதியை நொந்து அனைத்தையும் இழந்துவிட்டதாக மனவேதனையடைவான். எனவே இவ்விரு நிலைகளும் அவனுக்கு தீங்கானதாகவே அமையும். எனவேதான் நபியவர்கள் "இது முஃமினுக்கு மாத்திரமேயுரிய ஒன்று" என்று வரையறுத்தார்கள். இந்தக்கருத்தை அல்குர்ஆனும் உறுதிப்படுத்துகிறது.

*"மேலும் நாம் மனிதனுக்கு நம்மிடமிருந்து ஓர் அருளை அனுபவிக்கச் செய்து பிறகு அதனை அவனிடமிருந்து நாம் பிடுங்கிக் கொண்டால் நிச்சயமாக அவன் நம்பிக்கை இழந்தவனாகவும் நன்றி கெட்டவனாகவும் மாறிவிடுகிறான். மேலும் அவனுக்கு ஏற்பட்ட துன்பத்திற்கு பிறகு அருட்கொடைகளைச் சுவைக்கச் செய்தால் அதற்கு அவன் என்னைவிட்டும் துன்பங்கள் போய்விட்டன என்று கூறுவான். நிச்சயமாக அவன் பெருமையடிப்பவனும் அகங்காரமுடையவனாகவும் மாறிவிடுகிறான். எவர்கள் பொறுமையை மேற்கொண்டு நன்மையான காரியங்களை செய்து வருகிறார்களோ இத்தகையவர்களுக்கு மன்னிப்பும் மாபெரும் கூலியுமுண்டு."*

*(ஸூரா ஹூத்: 11)*

முஃமின்களில் அல்லாஹ்வின் அருளுக்கு நன்றி கூறாமலும் சோதனைகளின் போது பொறுமையைக் கடைப்பிடிக்காமலும் இருப்பவர்கள் காபிர்களின் பண்புகளைப் பெற்றவர்கள். அது மட்டுமன்றி அவர்களின் ஈமான் இந்நிலைகளின் போது அவர்களை விட்டும் பிரித்துவிடும். ஆபத்தில் இருப்பதையும் மறந்துவிடக்கூடாது. எனவே தனது நிலை குறித்து சிந்தித்து தன்னை சீர்திருத்திக் கொள்வது அவனுக்குரிய பொறுப்பாகும்.

**– கலாநிதி முஹம்மத் அப்துல்லாஹ் தர்ராஸ் அவர்களின் ஹதீஸ் விளக்கத்தைத் தழுவி எழுதப்பட்டது. –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபுல் ஹஸன் - அலி நத்வி
## – பன்முக ஆளுமையும் பங்களிப்பும் –

**கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி**

இஸ்லாமிய அழைப்புப் பணியிலும் - அறிவுப் பணியிலும் ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலப் பிரிவில் மகத்தான பங்களிப்பைப் புரிந்த, இஸ்லாமிய கலாஞானங்களில் ஆழமான புலமையும் நவீன சிந்தனையுடன் மிக நெருங்கிய பரிச்சயமும் - விரிந்த சிந்தனையும் - ஆழமான நோக்கும் கொண்ட இஸ்லாமிய உலகில் "ஆலிமுர் ரப்பானி" இறையாளுமை மிக்க அறிஞர் என்ற சிறப்பு நாமத்தால் அழைக்கப்பட்ட அபுல் ஹஸன் அலி நத்வி அவர்களின் ஆளுமையும், பங்களிப்பும் பன்முகத் தன்மை வாய்ந்தது பல்வேறு துறைகள் சார்ந்தது. பல பரிமாணங்களைக் கொண்டது.

(ஹிஜ்ரி 1336) 1914ம் ஆண்டு வட இந்தியாவில் லக்னோவிலிருந்து எழுபது கிலோமீட்டர் தூரத்திலுள்ள ராயிபி ரேலி என்னும் ஊரில் இமாம் ஹஸன் (றழி) அவர்களின் பரம்பரையைச் சேர்ந்த பக்திபூர்வமான குடும்பத்தில் அவர்கள் பிறந்தார்கள். மௌலானா நத்வியின் தந்தை ஒரு பேரறிஞர். 'நுஸ்ஹதுல் கவாதிர்' என்ற அவரது நூல் ஐநூறுக்கு மேற்பட்ட இந்திய முஸ்லிம் அறிஞர்களின் வாழ்க்கைச் சரிதையை உள்ளடக்கியுள்ளது. இந்தியாவில் முஸ்லிம்களின் வரலாறு - பண்பாடு பற்றி "அத்-தகாபதுல் இஸ்லாமிய்யா பில் ஹிந்த்", "அல் - ஹிந்த் பில் அஸ்ரில் இஸ்லாமீ" போன்ற நூல்களை அவர் எழுதியுள்ளார். மௌலானா நத்வியின் தாய் ஒரு ஹாபிளாகவும், கவிஞராகவும் விளங்கினார். அவரது சகோதரர் அப்துல் அலி இப்னு அப்துல் ஹை, ஒரு வைத்தியக் கலாநிதியாகவும், அலிகார் நத்வா, தேவபந்த் ஆகிய மூன்று இஸ்லாமியக் கலா நிலையங்களிலும் இஸ்லாமியக் கலைகளைக் கற்ற ஓர் கல்விமானாகவும் விளங்கினார். மௌலானா நத்வியின் இளமைக் கால ஆளுமையை உருவாக்கியதிலும் அறிவுத்துறையில் அவரை நெறிப்படுத்தியதிலும் அவரது சகோதரருக்குப் பெரும் பங்கு இருந்தது.

நத்வதுல் உலமா தேவபந்த் தாருல் உலூமிலும், சில காலம் அலிகாரிலும் கல்வி கற்ற அபுல் ஹஸன் அலி நத்வி, கல்வியைப் பூர்த்திசெய்த பின்னர் நத்வதுல் உலமாவில் தப்ஸீர், ஹதீஸ் துறைகளில் விரிவுரையாளராக இணைந்தார்.

அக்காலப் பிரிவில் நத்வதுல் உலமாவிலிருந்து வெளியிடப்பட்ட "அள்-ளியாஃ" என்ற பத்திரிகையினதும், உர்து மொழியில் வெளியிடப்பட்ட "அந்-நத்வ" அத்-தஃமீர் ஆகிய பத்திரிகைகளினதும் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். இக்காலப் பிரிவில் அலிகார் பல்பலைக்கழகத்தின் இஸ்லாமிய கலைகளுக்கான பாடத்திட்டத்தை வகுக்கும் பொறுப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டபோது, இப்பணியை மிகச் சிறப்பாக நிறைவேற்றினார்கள். 1941ஆம் ஆண்டு டில்லியிலுள்ள ஜாமிஆ மில்லியா பல்கலைக்கழகத்தில் ஒரு விரிவுரைத் தொடரை நிகழ்த்த அவரை அழைத்திருந்தது. அவர் 'மதமும் நாகரிகமும்' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரை பிற்காலத்தில் "அத் தீன் வல் மதனியா" என அரபியிலும் Religion and Civilization என்ற தலைப்பில் ஆங்கிலத்திலும் வெளியிடப்பட்டது. இக்காலையில் நத்வி மாணவர்களுக்காக அரபு இலக்கியம் பற்றிய "முக்தாராத் பில் அதபில் அரபீ" என்ற நூலை எழுதினார்கள். 1952ம் ஆண்டு 'றிஸாலதுல் இன்ஸானியா' என்ற அமைப்பை அவர்கள் தோற்றுவித்தார்கள். பல்லினங்களையும் - பல மதங்களையும், பண்பாடுகளையும் கொண்ட இந்திய சமூகத்திற்கு இஸ்லாத்தின் விசாலமான மனிதாபிமானப் பண்புகளையும் சிறப்புக்களையும் எடுத்தியம்பி மக்களிடையே இஸ்லாத்தைப் பற்றிய சரியான தெளிவை வழங்கும் நோக்கோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அமைப்பை அவர்கள் உருவாக்கினார்கள்.

மௌலானா நத்வி இஸ்லாமிய உலகிலும், மேற்கத்திய நாடுகளிலும் பல பயணங்களை மேற்கொண்டு அங்குள்ள அறிஞர்கள், சிந்தனையாளர்களைச் சந்தித்துக் கருத்துப் பறிமாற்றம் செய்ததோடு, பல்கலைக்கழகங்களிலும் ஆய்வு மன்றங்களிலும் கருத்தாழம் மிக்க உரைகளை நிகழ்த்தியுள்ளார். 1948ஆம் ஆண்டு முதல் தடவை ஹஜ்ஜுக்குப் பயணம் செய்த அவர்கள், அதனைத் தொடர்ந்து பல பிரயாணங்களை அப்புனித பூமிக்கு மேற்கொண்டார்கள். அவரது இப்பயண அனுபவங்கள் "முஸக்கிராது ஸாஇஹூன் பிஷ் ஷர்கில் அரபீ" (கிழக்கு அரபுலகில் ஒரு பிரயாணியின் நினைவுக் குறிப்புகள்) மின் நஹ்ரி காபுல் இலா நஹ்ரில் யர்மூக் - (காபூல் நதியிலிருந்து யர்மூக் நதிவரை) உஸ்பூஆனி பில் மக்ரிபில் அக்ஸா, தூர மேற்கில் இரண்டு வாரங்கள் ஆகிய நூல்களில் விளக்குகின்றார். அப்புனித பூமியோடு அவர்களுக்கு ஆழ்ந்த உறவு இருந்தது. ராபிததுல் ஆலமில் இஸ்லாமியின் ஸ்தாபக அங்கத்தவராகவும், மதீனாப் பல்கலைக்கழகத்தின் ஆலோசனை சபை உறுப்பினராகவும் அவர்கள் விளங்கினார்கள். 1951ஆம் ஆண்டு எகிப்துக்கும் வட ஆபிரிக்க நாடுகளுக்கும் அவர்கள் மேற்கொண்ட பயணங்கள் "முஸக்கிராத் ஸா இஹூன் பிஷ்ஷர்கில் அரப்" என்ற அவரது பயண நூலில் விவரிக்கப்பட்டுள்ளது. 1956ஆம் ஆண்டு அவர்கள் டமஸ்கஸிலுள்ள 'மஜ்மஉல் இல்மீ அல் அரபீ' என்ற ஆய்வு அமைப்பின் ஓர் அங்கத்தவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 1957ஆம் ஆண்டு டமஸ்கஸ் பல்கலைக்கழகம் அவர்களை ஒரு சொற்பொழிவுத் தொடரை நிகழ்த்தும்படி அழைத்தது. அங்கு அவர்கள் நிகழ்ந்திய பத்து விரிவுரைகளும் "ரிஜாலுல் பிக்ர் வத்தஃவ பில் இஸ்லாம்" என்ற பெயரில் அரபியிலும், Saviours of Islamic Spirit என்ற பெயரில் ஆங்கிலத்திலும் வெளியாகியது. 1960ஆம் ஆண்டு மதீனாப் பல்கலைக்கழகத்தின் அழைப்பை ஏற்று "அந்-நுபுவ்வ வல் அன்பியா பீ ளவ்இல் குர்ஆன்" (அல்குர்ஆனின் ஒளியில் இறைதூதும் இறைதூதர்களும் என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவுத் தொடரை நிகழ்த்தினார். 1983ஆம் ஆண்டு கலாநிதி பர்ஹான் நிஸாமீ, பேராசிரியர் பிரவ்ன் ரிக் ஆகிய இருவரோடும் இணைந்து இங்கிலாந்தில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் "Oxford Centre for Islamic Studies" இஸ்லாமியக் கல்விக்கான ஒக்ஸ் போர்ட் மத்திய நிலையம் என்ற நிறுவனத்தை அவர்கள் தோற்றுவித்தார்கள். அந்த நிறுவனத்தில் Islam and the West "இஸ்லாமும் மேற்குலகும்" என்ற தலைப்பில் அவர் ஆற்றிய உரை அனைவரது பாராட்டையும் பெற்றது. அந்நிறுவனத்தால் வெளியிடப்படும் Oxford Journal of Islamic Studies "இஸ்லாமியக் கல்விக்கான ஒக்ஸ்போர்ட் சஞ்சிகை"யின் ஆசிரியர் குழுவிலும் அவர்கள் அங்கத்துவம் வகித்தார்கள்.

மௌலானா நத்வி அவர்கள் பல ஆய்வு மேடைகளில் பல்வேறு தலைப்புக்களில் ஆழமான பல உரைகள் நிகழ்த்தினார்கள். சோவியத் ரஷ்யாவில் ஸமர்க்கந் நகரில் ஒக்ஸ்போர்ட் இஸ்லாமியக் கல்விக்கான நிறுவனம் ஒழுங்கு செய்த இமாம் புகாரி தொடர்பான சர்வதேசிய மகாநாட்டில் "இமாம் புகாரியும் அவரது ஸஹீஹுல் புகாரியும்" என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்தார்கள்.

தாருல் உலூமில் நள்ரது முஹம்மத் இக்பால் இலா நிஸா பித் தஃலீம் அல்-அஸ்ரி- 'நவீன கல்வி முறை பற்றிய இக்பாலின் நோக்கு' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள். அபுதாபியில் "தர்ஷீதுஸ் ஸஹ்வதுல் இஸ்லாமிய்யா" இஸ்லாமிய எழுச்சிக்கு வழிகாட்டல் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். அஷ்-ஷாரிகாவில் "கலீஜ் பய்னல் இஸ்லாம் வல் முஸ்லிமீன்" "முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்துக்குமிடையில் இடைவெளி" என்ற தலைப்பில் பேசினார்கள்.

அமெரிக்காவிலும், ஐரோப்பிய பல்கலைக்கழகங்களிலும், ஆய்வு மன்றங்களிலும், இஸ்லாத்திற்கும் மேற்கத்திய உலகத்தினருக்குமான தொடர்புகளை விளக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், மேற்கத்திய நாகரீகப் பண்பாட்டை இஸ்லாமிய நோக்கில் அணுகி விமர்சித்தும் பல ஆழமான உரைகளை அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அமெரிக்காவில் ஹவார்ட், சிகாகோ பல்கலைக்கழகங்கள், கனடாவில் மொன்ட்ரியல் பல்கலைக்கழகம், இங்கிலாந்தில் லன்டன் பல்கலைக்கழகம், மன்செஸ்டர் பல்கலைக்கழகம், லீடஸ் பல்கலைக்கழகம், ஜெர்மனியில் பொலின் பல்கலைக்கழகம் ஆகிய உயர் கல்வி நிலையங்களில் அவர்கள் நிகழ்த்திய உரைகள் இத்துறையில் குறிப்பிடத்தக்கவையாகும்.

1981ம் ஆண்டு கஷ்மீர் பல்கலைக்கழகம் அவர்களுக்கு கௌரவ கலாநிதி பட்டம் அளித்து கௌரவித்தது. அங்கு அவர்கள் 'அறிவின் நிலையும் அறிஞர் பணியும்' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரை நவீன கல்வியின் ஆத்மீக வெறுமை, கல்வியின் உண்மையான இலட்சியம், குறிக்கோள் பற்றிய பல சிறந்த கருத்துக்களை உள்ளடக்கியிருந்தது. 1996ம் ஆண்டு இஸ்லாமிய இலக்கியத்திற்கான சர்வதேசிய அமைப்பு (ஹய்அதுல் ஆம்மலி ராபிததில் அதபில் இஸ்லாமீ அல்-ஆலமிய்யா) துருக்கியில் ஸ்தாம்பூலில் நடத்திய அதன் நான்காவது மாநாட்டில் - இஸ்லாமிய இலக்கியத்திற்கு நத்வியின் பங்களிப்பு பற்றி ஒரு விசேட செயலமர்வையே நடத்தி அவர்களை கௌரவித்தது. மாநாட்டில் பேரறிஞர் கலாநிதி யூஸுப் கர்ளாவி அல்லாமா அபுல் ஹஸன் நத்வியின் பங்களிப்பு பற்றி ஓர் ஆய்வுக் கட்டுரையைச் சமர்ப்பித்தார். மௌலானா நத்வியின் அறிவுப் பணிகள் - தஃவாப் பங்களிப்பு வரலாற்று ஆய்வு முயற்சிகள் - இஸ்லாமிய இலக்கித்துறை பற்றிய அவரது ஆய்வுகள் குறித்துப் பல்வேறு பல்கலைக்கழகங்களுக்கு முதுமானி, கலாநிதிப் பட்டங்களுக்கான ஆய்வுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மௌலானா நத்வி ஐம்பதுக்கும் அதிகமான நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் மிகப் பிரபலமானதும், இதுவரை இருபது பதிப்புகளைக் கொண்டதும் அதிக மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளதுமான, - அவர்களது இஸ்லாமிய உலகில் அவர்களது அறிவுப் பணியின் மிக ஆரம்பகாலப் பகுதியிலேயே அறிமுகமாக அமைந்ததுமான நூல் "மாதா கஸிரல் ஆலம் பி இன்ஹிதாதில் முஸ்லிமீன்" - முஸ்லிம்களின் வீழ்ச்சியினால் உலகம் இழந்தது என்ன? என்ற நூலாகும். 1940 களுக்குப் பின்னர் அவர்கள் எழுதிய நூல்கள் அனைத்துக்கும் முன்னோடியாக அது அமைந்தது.

மௌலானா நத்வி அவர்கள் இந்நூலில் இஸ்லாமிய வரலாற்றை புதிய அணுகுதலில் விளக்கியுள்ளார். முஸ்லிம்களை உலக வரலாற்றின் பின்னணியில் நோக்கி விளக்கும் முஸ்லிம் வரலாற்றறிஞர்கள், சிந்தனையாளர்களின் பாரம்பர்ய அணுகுமுறையிலிருந்து முற்றிலும் விடுபட்டு, முஸ்லிம்களை மையமாக வைத்து உலக வரலாற்றை நோக்கி, இஸ்லாமிய வரலாற்று விளக்கத்தில் ஒரு புதிய பரிமாணத்தை அவர்கள் திறந்து வைத்துள்ளார். பொதுவாக முஸ்லிம் அறிஞர்கள் உலக வரலாற்றில் நிகழ்ந்த ஐரோப்பிய மறுமலர்ச்சி, அதனடியாக எழுந்த அறிவியல் வளர்ச்சி, கைத்தொழில் புரட்சி, உஸ்மானிய ஆட்சியாளர்களின் வீழ்ச்சி போன்ற முக்கிய வரலாற்றுச் சம்பவங்கள் இஸ்லாமிய உலகில் ஏற்படுத்திய பாதிப்புக்களையும், அதனால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இழப்பையும் விளக்கும் ஒரு மரபையே பின்பற்றி வந்தனர். ஆனால் அல்லாமா நத்வி இந்நூலில் இந்த அணுகு முறையிலிருந்து முற்றிலும் வேறுபட்டு, முஸ்லிம்களின் வீழ்ச்சியினால் உலகம் அடைந்த இழப்பையும், மனித இனம் அனுபவித்த நஷ்டத்தையும் விளக்கியுள்ளார்கள். இது இஸ்லாமிய வரலாற்றில் ஆய்வு பற்றிய ஒரு புரட்சிகரமான நோக்காகும். முஸ்லிம்களின் உலகலாவிய பணி பற்றி அவர்களுக்கு அறிவுறுத்தி, எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையூட்டும் ஒரு முயற்சியாக இது அமைந்தது. இந்த நூலின் முன்னுரையில் ஷஹீத் ஸெய்யித் குத்ப் இந்நூலை மதிப்பீடு செய்யும் வகையில் குறிப்பிடும் கருத்து இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் காணப்படும் கண்ணோட்டம் அணுகுமுறை பற்றி எழுதப்பட்ட பழைய, நவீன நூல்கள் அனைத்திலும் நான் வாசித்த மிகச் சிறந்த நூலாக இதனை நான் கணிக்கின்றேன். இதன் சிறப்பம்சம் என்னவெனில் இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை மிகப் பூரணமாகவும், ஆழமாகவும் விளக்கும் ஒரு நூலாக இது காணப்படுவதாகும். இதன் காரணமாக மதம், சமூகம் சார்ந்த விடயங்கள் எந்த நோக்கில், எவ்வகையில் அணுகி ஆராயப்படுதல் வேண்டும் என்பதற்கு ஒரு முன்மாதிரியாக இந்நூல் கருதப்படல் வேண்டும் என்பது மட்டுமன்றி இஸ்லாமிய வரலாறு எவ்வகையில் எழுதப்படல் வேண்டும் என்பதற்கும் இது ஒரு சிறந்த முன்மாதிரியான நூலாக உள்ளது.

இஸ்லாமிய சீர்திருத்த முயற்சிகளினதும், சிந்தனைப் புனர்நிர்மாணப் பணிகளதும் வரலாறு இடைவெளிகளைக் கொண்டுள்ளது என்ற கருத்தை சில நவீன எழுத்தாளர்கள், வரலாற்றாசிரியர்கள் கொண்டுள்ளனர். அதாவது சமூகச் சீர்கேடுகள், சிந்தனைச் சிக்கல்களைத் தடுத்து நிறுத்திப் புதுச் சிந்தனையை வழங்கி, சிந்தனைச் சிக்கல்களுக்கு தீர்வு வழங்கி, சமூகத்தின் உடலில் புது இரத்தத்தைப் பாய்ச்சி இயக்கத்தையும், அசைவையும் ஏற்படுத்தி, அதன் தேக்க நிலையைப் போக்கும் சீர்திருத்த வாதிகள், சிந்தனையாளர்கள், அறிஞர்கள் மிகப் பல நூற்றாண்டுகளாகத் தோன்றவில்லை என்பது இவர்களது கருத்தாகும். இந்த சிந்தனைப்பாங்கு தோன்றுவதற்கு இரண்டு முக்கிய காரணங்களை மௌலானா நத்வி தங்களது "ரிஜாலுல் பிக்ர் வத் தஃவா" என்னும் நூலில் குறிப்பிடுகின்றார்கள். வரலாறு பற்றிய குறுகிய கண்ணோட்டம் ஆட்சியாளர்களையும், அரண்மனை வாழ்வையும் மட்டுமே நிகழ்வுகளாகக் கொண்டு சுற்றிச் சுழலும் வகையில் எழுதப்பட்ட வரலாற்று நூல்கள் இதற்கு ஒரு காரணமாக அமைந்தது. சிந்தனையாளர் (முபக்கிர்) சீர்திருத்தவாதி (முஜத்தித்) பற்றிச் சிலரிடம் ஒரு குறிப்பிட்ட வரைவிலக்கணமும், கண்ணோட்டமும் காணப்பட்டது. அதனை வைத்து இஸ்லாமிய வரலாற்றில் அந்த வரைவிலக்கணத்திற்குட்பட்டவர்களைத் தேடிப் பிடித்து அவர்களைச் சீர்திருத்தவாதிகளாகக் கணித்து, அதற்கு உட்படாதவர்களை அந்த வட்டத்திலிருந்து அகற்றினர். இது இஸ்லாத்தின் நிலையான இயக்கத்தன்மை, உயிர் தன்மை பற்றி நம்பிக்கையை இழக்கச் செய்யும் முயற்சியாகும் என கருதிய நத்வி, தனது "ரிஜாலுல் பிக்ர் வத் தஃவா" என்னும் நூலில் இஸ்லாமிய வரலாற்றை ஒரு புதிய கண்ணோட்டத்தில் அணுகினார்கள். பாரம்பர்ய வரலாற்று நூல்கள் எனக் கொள்ளப்படும் நூல்களுக்கு அப்பால் சென்று அரபு மொழியில் உள்ள 'தராஜும்', 'தபகாத்' என்னும் அறிஞர்கள், சிந்தனையாளர்களின் வாழ்க்கைச் சரிதைத் தொகுப்புக்களை ஆராய்ந்து மிகச் சிரமங்களை மேற்கொண்டு தகவல்களைத் திரட்டி இஸ்லாமிய சிந்தனை வரலாற்றையும், சீர்திருத்த முயற்சிகளின் வரலாற்றையும் ஒரு புதிய நோக்கில் அணுகி விளக்குகின்றார். 'தஜ்தீத்', 'இஜ்திஹாத்', 'ஜிஹாத்' ஆகிய மூன்றும் இஸ்லாமிய சிந்தனைக்கும், வரலாற்றுக்கும் இயக்கத் தன்மையை (dynamism) வழங்கியுள்ள தன்மையை இஸ்லாத்தின் முதல் நூற்றாண்டு முதல் பதினான்காம் நூற்றாண்டு வரையுள்ள இஸ்லாமிய சிந்தனையினதும், சீர்திருத்த முயற்சிகளினதும் வரலாற்றை அவர் இந் நூலில் விளக்கியுள்ளார்.

ஹஸனுல் பஸரி, உமர் இப்னு அப்துல் அஸீஸ், அபுல் ஹஸன் அல் அஷ்அரி, அப்துல் காதிர் ஜீலானி, மௌலானா ஜலாலுத்தீன் ரூமி, இமாம் இப்னு தைமியா, இஸ்ஸதீன் அப்துஸ் ஸலாம், ஷாஹ் வலியுல்லாஹ், இமாம் ஸிர்ஹிந்தீ ஆகியோரின் பணிகள் இந்நூல் தொடரில் மிக ஆழமாக ஆராயப்பட்டுள்ளன.

மௌலானா நத்வியின் "அந்நுபுவ்வ வல் அன்பியா" என்னும் நூல் இறை தூதுக்கான அவசியம், இறை தூதர்களுக்கும், சீர்திருத்த வாதிகளுக்கும் இடையிலான வித்தியாசம், வரலாற்றில் இறைதூதர்கள் வகித்துள்ள பங்கு, அவர்களது பங்களிப்புகள் பற்றி விளக்குகின்றது. அல்லாமா நத்வி நபி (ஸல்) அவர்கள் மீது ஆழமான பற்றும் நேசமும் மிக்கவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது புனித பெயரைக் கூறும் போது உடல் புல்லரித்து, கண்கள் நீரை வருவிக்கும். தூய்மையான அன்பு நபி களார் பால் அவருக்கு இருந்தது.

இஸ்லாமிய சமூகத்தில் அறிவும், தர்க்கமும், தத்துவ விசாரணையும் மிகைத்து உணர்வும், அன்பும் நபி (ஸல்) அவர்களுடன் உயிரோட்டமுள்ள ஆத்மிக பிணைப்புப் பலவீனமடைந்துள்ளதை அவர்களது பல பிரயாணங்களில் நிதர்சனமாகக் கண்டு உணர்ந்து இதனை இஸ்லாமிய சமூகம் எதிர்நோக்கும் ஆபத்தான ஒரு நிலையாகவும் அவர்கள் கண்டார்கள். அன்பினதும் நேசத்தினதும் நீரூற்றின் சுனைகளை வற்றச் செய்யும் இச்சக்திகளை முறியடித்து மீண்டும் இறைதூதரின் மீது தூய்மையான அன்புகொள்ளும் ஆத்மிக உயிரோட்டத்தை ஏற்படுத்தும் நோக்கோடு "அத்தரீகு இலல் மதீனா" (மதீனாவிற்கான பாதை) என்ற நூலை அவர்கள் எழுதினார்கள். உணர்ச்சிபூர்வமாக, தங்களுக்குரிய இலக்கிய வளம்மிக்க அரபு நடையில் அவர்கள் எழுதிய அந்நூலுக்கு முன்னுரை வழங்கிய பேரறிஞர் அலி அத்-தந்தாவி பின் வருமாறு குறிப்பிடுகிறார்கள்.

"நான் என்னில் நம்பிக்கை இழந்த நிலையை அடைந்திருந்தேன். ஆனால் எனது சகோதரர் அபுல் ஹஸனே! உங்கள் 'அத்-தரீக் இலல் மதீனா' என்னும் நூலைப் படித்ததும் எனது உள்ளத்தில் இழந்திருந்த அன்பும், வேட்கையும் மீண்டும் திரும்பியது. அப்போதுதான் எனது உள்ளம் அன்பினதும், நேசத்தினதும் உயிர்தன்மையை இன்னும் இழக்கவில்லை என்பதையும், வாழ்க்கையின் சிரமங்களும், கஷ்டங்களும் நீண்ட பழக்கத்தினால் இயற்கையாகவே ஒருவனில் ஏற்படும் சலிப்பும், அந்த அன்பையும், நேச உணர்வையும் தூசுபடியச் செய்து விட்டது என்பதையும் உணர்ந்தேன். உங்களது நூல் அந்தத் தூசையும் புழுதியையும் அகற்றிவிட்டது. அபுல்ஸஹனே என்னிலும், எனது மொழியின் இலக்கியத்திலும் இழந்த நம்பிக்கையை மீண்டும் தோன்றச் செய்தமைக்கு உங்களுக்கு எனது ஆழ்ந்த நன்றிகள்."

மௌலானா நத்வி அவர்கள் மேற்கத்திய சிந்தனை, தத்துவம், நாகரிகம் ஆகியவற்றை மிக ஆழமான விசாலமான நோக்கில் அணுகி, அவை இஸ்லாமிய சிந்தனையுடன் முரண்படும் தன்மையினை விளக்கிப் பல நூல்கள் எழுதியுள்ளார்கள். "அஸ்-ஸிராஃ பய்னல் பிக்ரதுல் இஸ்லாமிய்யா வல் பிக்ரதுல் மாத்திய்யா" (இஸ்லாமிய சிந்தனைக்கும் மேற்கத்திய சிந்தனைக்கும் இடையிலான மோதல்) "ஹதீஸ் மஅல் கர்ப்" (மேற்குடன் ஓர் உரையாடல்) அஸ்-ஸிராஃ பய்னல் ஈமான் வல் மாத்திய்யா-தஅம்முலாத் பீ ஸூரதில் கஹ்ப் (விசுவாசத்திற்கும் சடவாதத்திற்குமிடையிலான மோதல் - ஸூரதுல் கஹ்ப் பற்றிய சில சிந்தனைகள்) போன்ற நூல்கள் இத்துறையில் குறிப்பிடத்தக்கவைகளாகும். இஸ்லாமிய கல்விக் கோட்பாடு குறித்து "அத் தர்பியதுல் இஸ்லாமிய்யா அல்-ஹுர்ர" என்ற நூலில் அவர்கள் விளக்குகின்றார்கள். குர்ஆனைக் கற்பதற்கான அடிப்படைகளையும், ஒருவன் பெற்றிருக்க வேண்டிய பின்னணியையும் "அல்-மத்கல் இலா திராஸதில் குர்ஆனிய்யா" என்ற நூல் விளக்குகின்றது. "ரவாஇஃ மின் அதபித் தஃவா பில் குர்ஆன் வஸ்ஸீரா" என்ற நூல் குர்ஆனினதும், ஸுன்னாவினதும் ஒளியில் இஸ்லாமிய தஃவாப் பணியில் ஒருவன் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளை ஆராய்கின்றது. அஸ்-ஸீரதுன் நபவிய்யா" என்ற நூலில் நபி (ஸல்) அவர்களின் ஸீராவை மிக ஆழமாகவும், விரிவாகவும் அவர்களுக்கே உரிய ஒரு கண்ணோட்டத்தில் விளக்கியுள்ளார்கள். "ரப்பானிய்யா வர் ரஹ்பானிய்யா" என்ற நூல் தஸவ்வுபின் அடிப்படைகளையும், இஸ்லாமிய அழைப்புப் பணியிலும், ஜிஹாதிலும் ஸூபி மகான்களின் பங்களிப்புக்களையும் ஆராய்கின்றது. இஸ்லாமிய இலக்கியத் துறையில் மிக ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருந்த நத்வி இது தொடர்பாக "முக்தாராத் பில் அதபில் அரபீ", "நளராத் பில் அதப்" போன்ற பல நூல்களை எழுதியுள்ளது மட்டுமன்றி 1996ஆம் ஆண்டு ஹய்அதுல் ஆம்ம லிராபிததில் அதபில் இஸ்லாமிய்யா அல்-ஆலமிய்யா" (இஸ்லாமிய இலக்கியத்திற்கான சர்வதேசிய ஒன்றியம்) என்ற பெய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரில் ஓர் அமைப்பைத் தோற்றுவித்து, அது தொடர்பாகப் பல மாநாடுகளை ஏற்பாடு செய்தார்கள். அல்லாமா இக்பாலின் கவிதைகளிலும், சிந்தனைகளிலும் மிக ஆர்வமும் ஈடுபாடும் கொண்ட மௌலானா நத்வி அவரது சொற்பொழிவுகளிலும், கட்டுரைகளிலும், நூல்களிலும் தனது கருத்துக்களுக்கு வலுவும், அழகும் அளிக்கும் வகையில் அடிக்கடி இக்பாலின் கவிதைகளை எடுத்தாளும் தன்மையைக் கொண்டிருந்தார்கள். அவர்களது "ரவாஇஃ இக்பால்" எனும் நூல் இத்துறையில் குறிப்பிடத்தக்கதாகும்.

அபுல் ஹஸன் அலி நத்வி அவர்கள் பல்வேறு துறைகளிலும் சிறப்புமிகு புலமையும், பகுப்பாய்வு சிந்தனையும், வரலாற்று நோக்கும், நுண்ணிய உணர்ச்சிபூர்வமான உள்ளமும், பற்றற்ற மனோநிலையும் ஒன்றாக இணைந்த பன்முக ஆளுமை அமையப் பெற்றவர்களாக விளங்கினார். இத்தகைய முழுமைத்துவ ஆளுமை படைத்தவர்கள் வரலாற்றில் மிக அரிதாகவே தோன்றுவார்கள். பல்வேறு துறை சார்ந்த அவர்களது நூல்களும், சொற்பொழிவுகளும், பணிகளும் இந்த பன்முக ஆளுமையின் வெளிப்பாடாக விளங்கின.

அவர்களது சில நூல்களில் வரலாற்று நோக்கும் தத்துவமும் தர்க்க ரீதியான அணுகுதலும் காணப்படுகின்றன. இந்நூல்கள் அவர்களது தர்க்கரீதியான உண்மை பகுப்பாய்வுத் திறன், வரலாறு பற்றிய முழுமைத்துவ நோக்கைப் பிரதிபலிக்கின்றன. "முஸ்லிம்களின் வீழ்ச்சியினால் உலகம் எதனை இழந்தது", "சடவாதச் சிந்தனைக்கும், இஸ்லாமிய சிந்தனைக்குமிடையிலான மோதல்", "மதமும் நாகரிகமும்" போன்ற நூல்களை நாம் இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். சில நூல்களில் அவர்களது இலக்கிய ஆர்வம், ஈடுபாடு, அழகுணர்வினால் போஷிக்கப்பட்ட கனிந்த மென்மையான உள்ளத்தின் உணர்வுகள் என்பவற்றை நாம் காண முடிகின்றது. "இலக்கியம் பற்றிய கண்ணோட்டங்கள்" - "இக்பாலின் கவிதைகள்", "அரபு இலக்கியத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை" போன்ற நூல்கள் இதற்குச் சிறந்த சான்றுகளாகும். அவர்களது ஆளுமையிலும், சிந்தனையிலும், பேச்சிலும், வாழ்விலும் காணப்பட்ட "ரப்பானிய்யா" என்ற ஆத்மிக உயிரோட்டம், "தெய்வீகமன்றி துறவறமன்று" (ரப்பானிய்யா லா ரஹ்பானிய்யா), "மதீனாவின் பாதை" (அத்-தரீக் இலல் மதீனா), "ஈமானின் காற்று மட்டும் வீசிவிட்டால்" (இதா ஹப்பத் ரீஹுல் ஈமான்), இஸ்லாமிய சிந்தனையினதும், அமைப்பினதும் மனிதர்கள்" (ரிஜாலுல் பிக்ர் வத் தஃவா பில் இஸ்லாம்) போன்ற நூல்களில் மிகச் சிறப்பாகப் பிரதிபலிக்கின்றன.

அல்லாமா நத்வி அவர்கள் வரலாற்றுத் துறையில் ஈடுபாடும், அதன் வளைவு நெளிவுகள், சமூகங்களின் எழுச்சி, வீழ்ச்சியின் பின்னாலுள்ள வரலாற்று விதிகள், அது குறித்த இஸ்லாமியப் பார்வை, அந்தப் பார்வைக்கும் மேற்கத்திய வரலாற்று விளக்கத்துக்குமிடையிலான முரண்பாடு ஆகியன பற்றி மிகத் தெளிவான பார்வையும், அறிவும் கொண்டவர்களாக விளங்கினார்கள். கிப்பனின் "Decline and fall of Roman Empire", டொய்ன்பீயின் "Study of Histrory", ஒக்ஸ்வெல்ட் ஸ்பெஞ்சரின் "Decline of the West" ஆகிய வரலாற்று நூல்களை அவர்கள் மிக ஆழமாய்ப் படித்திருந்தார்கள். அவர்களது நூல்களில் தங்களது கருத்துக்களை நிறுவ இவற்றிலிருந்து மேற்கோள்களை எடுத்தாண்டுள்ளார்கள். தன்னை "ஒரு வரலாற்று மாணவன்" என அடிக்கடி அழைத்துக்கொண்ட அவர்கள் கீழைத்தேய வரலாற்றிலும் - மேற்கத்திய வரலாற்றிலும் மிக விரிவான ஆழமான அறிவைப் பெற்றிருந்தார்கள். இந்த முழுமைத்துவ வரலாற்று நோக்கு அவர்களது பரந்த மனப்பான்மைக்கும் விரிந்த சிந்தனைக்கும் பகுப்பாய்வு அணுகளுக்கும் ஒரு முக்கிய அடிப்படைக் காரணமாக அமைந்தது.

வெளிப்படையாக நோக்கும்போது பரஸ்பரம் முரண்பட்ட ஆளுமைகளாக தோற்றமளிக்கும் ஷெய்க் அப்துல் காதிர் ஜீலானியையும், நிஸாமுத்தீன் அவ்லியாவையும், மௌலானா ரூமியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமாம் இப்னு தைமிய்யாவுடன் இணைத்து விளக்கி ஒரே நேர்கோட்டில் அவர்களை சந்திக்க வைத்த நத்வியின் ஆற்றல் இந்த வரலாற்று அறிவின் காரண மாகப் பக்குவமடைந்த அவர்களது பரந்த சிந்தனையின் விளைவாகும்.

மௌலானா நத்வியின் ஆளுமை யிலும், சிந்தனையிலும் தஸவ்வுபின் மிக ஆழமான செல்வாக்குக் காணப்பட்டது. "ரிஜாலுல் பிக்ர் வத் தஃவா", "ரப்பா னிய்யா லா ரஹ்பானிய்யா" போன்ற நூல்கள் மட்டுமன்றி, அவர்களது ஒவ் வொரு கருத்திலும், சிந்தனையிலும் இதன் தெளிவான பாதிப்புக் காணப் பட்டது. இஸ்லாமிய கலைகளில் தஸவ் வுபிற்குரிய இடத்தை மதிப்பீடு செய்து இஸ்லாமிய வரலாற்றில் ஸூபி மகான் கள் ஆற்றிய மகத்தான பங்களிப்பை மிக ஆதாரபூர்வமாக விளக்கியதில் நத்வியின் பணி மிகக் காத்திரமானது.

இந்தியாவில் தோன்றிய முஸ்லிம் அறிஞர்களின் அறிவுப் பணியை அரபு லகிற்கு அறிமுகம் செய்வதில் மௌ லானா நத்வியின் பணியும், பங்களிப்பும் மகத்தானதாகும். ஷாஹ் வலியுல்லாஹ், திஹ்லவி, ஷெய்க் அஹ்மத் ஸிர்ஹிந்தி, காஜா முஈனுத்தீன் ஜிஷ்தி, ஸெய்யித் அஹ்மத் இர்பான் அஷ்-ஷஹீத், அல் லாமா இக்பால் ஆகியோரின் பணிகளை அரபுலகுக்கு அவர்கள் அறிமுகம் செய் தார்கள். இத்துறையில் "அல்-முஸ்லிமூன் பில் ஹிந்த்" என்ற அவரது நூல் பெரும் பங்களிப்புச் செய்தது. இந்திய முஸ் லிம்களின் வரலாறு - பண்பாடு, அறிவுப் பங்களிப்பு பற்றி அதில் மிக ஆழமாக விளக்கியுள்ளார்.

பல்லின நாடான இந்தியாவில் முஸ் லிம்களுக்கும் - இந்துக்களுக்குமிடையில் நல்லுறவை ஏற்படுத்துவதிலும், இஸ்லாத் தைப் பற்றிய தவறான கருத்துக்களை நீக்குவதிலும் ஈடுபட்டு அவர்கள் அய ராது உழைத்தார்கள். அவர்கள் நேரடி அரசியலில் ஈடுபடாவிட்டாலும், முஸ் லிம்களைப் பாதிக்கும் அரசியல் பிரச்சி னைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தயங்கவில்லை. இந்தியாவில் முஸ்லிம் தனியார் சட்டத்தை நீக்கி, முழு நாட்டுக் கும் பொதுவான சட்டக் கோவை ஒன்றை உருவாக்க முயற்சி எடுக்கப்பட்ட போது அதற்கு எதிராக மிக வன்மையாக அவர் கள் குரல் எழுப்பினார்கள். பல்லின நாடான இந்தியாவில் முஸ்லிம்கள் தங்க ளது தனித்துவத்தைப் பாதுகாப்பதன் அவசியத்தைப் பற்றி அடிக்கடி வலியுறுத் திய அவர்கள், ஏனைய இனங்களுடன் புரிந்துணர்வுடன் வாழ்வதன் அவசியத் தையும் வலியுறுத்தினார்கள்.

மௌலானா நத்வி அனைத்து இஸ் லாமிய எழுச்சி இயக்கங்களையும் வர வேற்றார்கள். ஆனால் எந்த ஒரு இயக்கத் துடனும் அவர்கள் தன்னை இணைத் துக்கொள்ளவில்லை. அவர்களே ஓர் இயக்கமாக விளங்கினார்கள். அவர் உரு வாக்கிய மாணவர்கள், அவரது சிந்தனை யால், கருத்துக்களால், ஆத்மீக ஆளு மையால் ஆகர்ஷிக்கப்பட்டு அவரது சிந்த னையின் வழியில் தங்களது சிந்தனை யையும், கருத்துக்களையும் அமைத்துக் கொண்டவர்கள். அனைவரும் "நத்வி" என்ற அந்த அறிவியக்கத்தின் - ஆத்மிக இயக்கத்தின் அங்கத்தவர்களாவர். இத னை ஷெய்க் அலி அத்-தந்தாவி மிக அழ காகப் பின்வரும் வகையில் குறிப்பிடு கின்றார்:

"ஓர் உறுதியான கோட்டையை கட் டிய ஒருவர் அல்லது ஓர் இராணுவத்தின் ஒரு தளபதியாக தலைமை வகித்து வெற் றியீட்டியவர், ஒரு பெரும் தலைவராகக் கணிக்கப்படுவதாயின், அபுல் ஹஸன் அவரது மாணவர்களின் உள்ளங்களை அடித்தளமாகக் கொண்டு கற்களாலான கோட்டையைவிட மிக உறுதியும் வன் மையும் மிக்க ஒரு கோட்டையை கட்டி எழுப்பியுள்ளார். அவர் பக்தி சிரத்தை மிக்க அறிஞர்கள், சீர்திருத்தப் பணியில் ஈடுபட்ட இஸ்லாமிய அழைப்பாளிகளை உள்ளடக்கிய ஒரு சிறு சமூகத்தையே கட்டி எழுப்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகளாவிய முஸ்லிம் உம்மத்

# சிரியா அரபுக் குடியரசு

## அஷ்ஷெய்க் ஏ. ஸி. அகார் முஹம்மத்

சிரியா, தென் மேற்கு ஆசியாவில் அமைந்துள்ள ஒரு நாடு. இதன் வடக்கு எல்லை துருக்கியாகும். மேற்கே லெபனானும் மத்தியதரைக் கடலும் எல்லைகளாகக் காணப்படுகின்றன. சிரியாவின் தெற்கு எல்லையாக பலஸ்தீனமும் ஜோர்தானும் விளங்குகின்றன. கிழக்கு எல்லையில் இராக் நாடு அமைந்துள்ளது.

சிரியா 1,85,180 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டது. இது ஒரு சிறிய, மத்தியதரைக் கடல் கரையோரத்தைக் கொண்டுள்ளது. கரையோரம் 193 கிலோ மீற்றர் நீளமானது. எர்வத் என்பது இந்த நாட்டுக்குச் சொந்தமான மத்திய தரைக் கடலில் அமைந்துள்ள ஒரு சிறிய தீவாகும். கோலான் குன்றுப் பகுதிகள் சிரியாவுக்குச் சொந்தமான பிரதேசமாகும். ஆனால் இஸ்ரவேல் அதனை ஆக்கிரமித்துள்ளது.

சிரியாவின் மேற்கு, தென் மேற்குப் பகுதிகள் மலைப்பாங்கானவை. இந்த இரண்டு பகுதிகளுக்கும் இடைப்பட்ட பிரதேசமும் கடற்கரைப் பிரதேசமும் பயிர்ச்செய்கைக்கு உகந்த பூமியாக விளங்குகின்றன. ஜெபலுஷ் ஷெய்க் இந்நாட்டிலுள்ள உயர்ந்த மலையாகும். இது 2,815 மீற்றர் உயரமானது.

பொதுவாக சிரியாவில் மத்திய தரைக் கடல் காலநிலை நிலவுகின்றது. யூப்பிரடீஸ், டைகிரீஸ் நதிகள் துருக்கியில் ஊற்றெடுத்து சிரியாவையும் ஊடறுத்துப் பாய்கின்றன. மற்றும் சில நதிகளும் இங்கு ஓடுகின்றன. இந்நாட்டில் சிறிய பல குளங்கள் இருக்கின்றன. இவற்றுள் அல்-உதைப் குறிப்பிடத்தக்கது.

இந்நாட்டின் மொத்த சனத்தொகை 14.57 மில்லியன். மொத்தக் குடித்தொகையில் 87 வீதமானவர்கள் முஸ்லிம்கள் என்பது 'வர்ல்ட் முஸ்லிம் கெஸட்டியர்' தரும் தகவல். 90%மானவர்களே முஸ்லிம்கள் எனக் கூறுகின்றது பாகிஸ்தான் தஃவா டிரெக்டரி. சிரியாவில் 74%மானவர்களே முஸ்லிம்கள் என்பது Profiles of Islamic Countries தரும் தகவல். நாட்டு மக்களில் சுமார் 90%மானவர்கள் அரபு இனத்தவர்கள். குர்திகளும், ஆர்மேனியர்களும் இங்கு இருக்கின்றார்கள். துருக்கி இனத்தைச் சேர்ந்தவர்களும் இருக்கின்றார்கள்.

சிரியாவின் பெரும்பான்மை மக்கள் அனுஷ்டிக்கும் மார்க்கம் இஸ்லாம். ஒரு சிறு தொகைக் கிறிஸ்தவர்களும் இங்கு இருக்கின்றார்கள்.

இந்நாட்டின் அரசாங்க மொழி அரபு. குர்தி, ஆர்மேனியா, பிரஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளும் இங்கு பேசப்படுகின்றன.

சிரியாவின் தலைநகரம் டமஸ்கஸ். அரபு மொழியில் இது 'திமஷ்க்' என அழைக்கப்படுகின்றது. இங்குள்ள ஏனைய பிரதான நகரங்களுள் எலொப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போ குறிப்பிடத்தக்கது. அரபியில் இந்நகரம் 'ஹலப்' என அழைக்கப்படுகின்றது. ஹிம்ஸ், லடாக்கியா ஆகியனவும் குறிப்பிடத்தக்க நகரங்களாகும்.

சிரியா மதச்சார்பற்ற கொள்கையைக் கடைப்பிடிக்கும் ஒரு நாடாக விளங்குகின்றது. நாட்டின் பிரதான துறைமுகம் லட்டாக்கியாவில் அமைந்துள்ளது. மற்றொரு துறைமுகம் பணியஸ்ஸில் காணப்படுகின்றது.

## பொருளாதார நிலை :

இங்கு 60 இலட்சம் ஹெக்டயார் நிலப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. ஊழியர் பட்டாளத்தில் சுமார் 50%மானவர்கள் விவசாயத்திலும் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டுள்ளார்கள். பருத்தி, பருப்பு வகைகள், ஒலிவ், புகையிலை, பழவர்க்கங்கள், திராட்சை முதலியன சிரியாவில் உற்பத்தியாகும் பிரதான விளைபொருட்கள். நெல், சோளம், கோதுமை, காய்கறிகளும் இங்கு உற்பத்தியாகின்றன. உணவுத் தேவையைப் பொறுத்தவரையில் தன்னிறைவடைந்த ஒரு நாடாக சிரியா விளங்குகின்றது. விலங்கு வேளாண்மையும் இங்கு சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது. மீன்பிடித் தொழிலும் பாராட்டத்தக்க விதத்தில் அமைந்துள்ளது.

இந்நாட்டின் கைத்தொழில் துறை பொருளாதாரத்தில் சிறப்பிடம் பெறுகின்றது. குறிப்பாக பெற்றோலியக் கைத்தொழில் பிரதான இடம் வகிக்கின்றது. பெற்றோலிய உற்பத்திகள், துணிவகைகள், சீமெந்து, புகையிலை, கண்ணாடிப் பொருட்கள், சீனி, இரும்பு, உறுக்குப் பொருட்கள் முதலியன இந்த நாட்டின் கைத்தொழில் துறையினால் கிடைக்கும் உற்பத்திப் பொருட்களாகும்.

சிரியாவில் கிடைக்கும் கனிப் பொருட்களில் இயற்கை வாயு, எண்ணெய், மங்கனீஸ், க்ரோமைட், பொஸ்பேட், ஜிப்ஸம், உப்பு முதலியன குறிப்பிடத்தக்கவை.

சிரியாவின் நாணய அலகு பவுண் என அழைக்கப்படுகின்றது. இந்நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பொருட்கள் : மசகு எண்ணெய், பருத்தி, பெற்றோலியப் பொருட்கள், கைப்பணிப் பொருட்கள் முதலியனவாகும். ஜேர்மனி, அமெரிக்கா, இத்தாலி, ரஷ்யா, கிரேக்கம், ஸஊதி அரேபியா, பிரான்ஸ், இராக், ரூமேனியா, யப்பான் முதலிய நாடுகள் சிரியாவின் முக்கிய வர்த்தகப் பங்காளிகள்.

சிரியாவில் புகையிரதப் போக்குவரத்து உண்டு. இங்குள்ள மொத்த புகையிரதப் பாதையின் நீளம் 1781 கிலோ மீட்டர். பொதுச் சாலைகளின் நீளம் 13, 300 கிலோ மீற்றர்.

சிரியா நாட்டின் 40 விமானத் தளங்கள் உண்டு. இவற்றில் 22 நீண்ட ஒரு பாதையைக் கொண்டவை. சிரிய அரபு விமானச் சேவை இந்நாட்டின் உத்தியோகபூர்வ விமானப் போக்குவரத்துச் சேவையாகும்.

## கல்வியும் சுகாதாரமும்

சிரியாவின் கல்வி நிலையைப் பொறுத்தவரையில் வளர்ந்தோர் எழுத்தறிவு வீதம் 70; மற்றுமொரு மூலம் தரும் தகவலின்படி 58% ஆகும். இந்நாட்டின் பள்ளிப் பருவத்தில் உள்ள எல்லா மாணவர்களும் ஆரம்பப் பாடசாலைக் கல்வியை பெற்று வருகின்றார்கள். இடைநிலைக் கல்வியையும் உயர் கல்வியையும் குறிப்பிடத்தக்க தொகையினர் பெற்று வருகின்றார்கள். சுமார் 49 மாணவர்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். நாட்டின் சுகாதார நிலை பற்றிக் குறிப்பிடுவதாயின் திருப்திகரமாக அமைந்துள்ளது என்றே கூறல் வேண்டும். குழந்தை இறப்பு வீதம் 6 மாத்திரமே. நாட்டு மக்களின் சராசரி ஆயுட்காலம் 65 வருடங்கள்.

## வரலாறு

உலகின் மிகவும் பழமைவாய்ந்த பிரதேசங்களில் ஒன்றாக சிரியா விளங்குகின்றது. பண்டைய காலத்தில் சிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பட பலஸ்தீன், ஜோர்தான், லெப னான் ஆகியன ஒரே நாடாக விளங்கின. சிரியா அடங்கலான இந்தப் பிரதேசம் அன்றைய உலகில் மிகவும் கேந்திர முக் கியத்துவம் வாய்ந்ததொன்றாக இருந்தத னால் உலகின் பல பாகங்களைச் சேர்ந்த வர்களும், கோத்திரத்தவர்களும் வரலாற் றின் பல்வேறு காலப் பிரிவுகளில் இந்தப் பிரதேசத்தை நாடி வந்தார்கள்.

கி. மு. 30ஆம் நூற்றாண்டில் செமித் திய இனத்தவர்களான அம்மூரியர்கள் சிரியா அடங்கலான பிரதேசத்தை ஆட்சி செய்தார்கள். பிற்பட்ட காலங்களில் ஆர்மேனியர், எகிப்தியர், அசீரியர், பபி லோனியர், பாரசீகர் முதலானோர் சிரியா வை ஆண்டார்கள். மகா அலெக்ஸாந்தர் ஈரானுக்குப் படையெடுத்த போது சிரியா வையும் தன்னாதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தார். கி. மு. 64ஆம் ஆண்டளவில் சிரியா ரோம சாம்ராஜ்யத்தின் கீழ் வந்தது. பின்னர் ரோமப் பேரரசனின் கீழ் சுமார் ஏழு நூற்றாண்டுகள் சிரியா ஆட்சி செய்யப்பட்டது.

இஸ்லாமியக் கிலாபத்தின் முதலா வது கலீபா அபூபக்ர் (றழி) அவர்கள் உரோமர்களின் கையில் இருந்த அன் றைய சிரியாவைக் கைப்பற்ற விரும்பி னார். அதற்குப் பல நியாயங்கள் இருந்தன. புவியியல் அமைப்பைப் பொறுத்தவரை யில் கிழக்கு உரோம இராச்சியத்தின் ஒரு மாகாணமாக இருந்த சிரியா அரேபி யாவின் ஒரு தொடராக இருந்தது. இத னால் சிரியா அரேபியாவுடன் சேர்க்கப் பட வேண்டியதாக இருந்தது. இனத்தைப் பொறுத்தவரையிலும் சிரியா அடங்க லான பிரதேசத்தில் வாழ்ந்தோர் அரபு இனத்தவர்களாகவே இருந்தார்கள்.

சிரியா, அரபு நாட்டுக்கு மிகவும் வேண்டிய ஒரு பிரதேசமாகவும் இருந்தது. அரபிகளின் பொருளாதார வாழ்க்கை சிரியாவுடன் அவர்கள் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்பிலேயே தங்கியிருந் தது. இஸ்லாத்திற்கு முற்பட்ட காலத்தில் இருந்தே அரேபியர் சிரியாவுடன் வர்த்தக உறவு வைத்திருந்தார்கள். அரேபியர் இஸ் லாத்தின் கொடியின் கீழ் ஒன்றுபட்டதும் உரோமர்கள் பெரிதும் அச்சமடைந்தனர். இதனால் அரேபியாவுடன் சிரியா பிரதே சம் கொண்டிருந்த வர்த்தகத் தொடர்பு களையும் துண்டித்தனர். இதனால் சிரியா வைக் கைப்பற்றுவது அரபு முஸ்லிம் களின் பொருளாதார நலனுக்கு இன்றிய மையாத ஒரு தேவையாக மாறியது.

மேலும் உரோமர்கள் முஸ்லிம் களுடன் கொண்ட பகைமை ரஸூலுல் லாஹ் (ஸல்) அவர்களின் காலத்திலேயே ஆரம்பமாகி இருந்தது. அவர்கள் முஸ்லிம்களுக்கு அடிக்கடி தொல்லை கொடுத்து வந்தார்கள்.

நபியவர்களின் வபாத்தைத் தொடர்ந்து அரேபியாவில் ஏற்பட்ட மதம் மாறியவர்களின் குழப்பங்களின் போது சிரியாவில் வாழ்ந்த அரபு இனத் தவர்கள் அரேபியாவின் புரட்சிக்காரர் களுக்கு உதவி அளித்து வந்தார்கள். அர புப் பிரதேசத்தில் நுழைந்து திடீர்த் தாக்கு தல்களையும் நடாத்தி வந்தார்கள். இத னால் முஸ்லிம்கள் அவர்களை அடக்க வேண்டியிருந்தது.

இவைபோன்ற காரணங்களுக் காகவே உரோமர்களுடன் போராடி அவர்களை அடக்குவதற்காக கலீபா அபூபக்ர் (றழி) அவர்கள் ஹி. 12ஆம் ஆண்டு நாற்பெரும் படைகளை அனுப்பி வைத்தார்கள். பல பிரதேசங்களுக்கும் சென்ற இந்தப் படைகள் இறுதியாக பல காரணங்களை முன்வைத்து யர்மூக் நதிக் கருகிலுள்ள ஜௌலான் என்ற இடத்தில் ஹிஜ்ரி 13ஆம் ஆண்டு ஒன்றுசேர்ந்தன. பின்னர் இந்த இடத்தில் உரோமப் படை களுக்கும் முஸ்லிம் படைகளுக்கும் இடையே கடும்போர் மூண்டது. தளபதி காலித்பின் வலீத் யுத்தத்திற்கு முஸ்லிம் கள் தரப்பில் தலைமை தாங்கினார். யுத் தத்தின் முடிவில் சிரியாவின் தென்பகுதி முழுவதும் முஸ்லிம்களின் கைவசமாகி யது.

யர்மூக் வெற்றியைத் தொடர்ந்து முஸ்லிம் படை சிரியாவின் தலைநகரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டமஸ்கஸை நோக்கிச் சென்றது. சுமார் ஆறுமாதகால முற்றுகையைத் தொடர்ந்து காலித் பின் வலீத் (றழி) அவர்களின் தலைமையிலான முஸ்லிம்கள் டமஸ்கஸ் நகரக் கோட்டையை ஹிஜ்ரி 14ஆம் ஆண்டில் கைப்பற்றினார்கள். காலித் பின் வலீத் அவர்களுக்குப் பிறகு புதிதாகப் படையில் தளபதியாக நியமிக்கப்பட்ட அபூ உபைதா (றழி) அவர்கள் டமஸ்கஸ் வாழ் மக்களுக்கு பாதுகாப்புத் தருவதாக உறுதியளித்தார். மக்களின் தேவாலயங்கள், சொத்துக்கள் பாதுகாக்கப்படும் என்றும் முஸ்லிம்களால் உத்தரவாதம் அளிக்கப்பட்டது. டமஸ்கஸ் வெற்றியின் பின்னர் முஸ்லிம்கள் சிரியாவின் ஹிம்ஸ், ஹமா உட்பட மற்றும் பல நகரங்களையும் கைப்பற்றினார்கள். சிரியா முஸ்லிம் உலகுடன் இணைக்கப்பட்டதனை அடுத்து அதன் மாகாண அதிபதியாக முஆவியா (றழி) அவர்கள் நியமிக்கப்பட்டார்.

முஆவியா (றழி) அவர்கள் பிற்பட்ட காலத்தில் கலீபாப் பதவியை ஏற்றதனைத் தொடர்ந்து கிலாபத்தின் தலைநகரம் சிரியாவிலுள்ள டமஸ்கஸுக்கு மாற்றப்பட்டது. உமையாக்களின் ஆட்சிக் காலம் முழுவதிலும் அதாவது சுமார் 90 வருடங்கள் டமஸ்கஸ்தான் இஸ்லாமியப் பேரரசின் தலைநகரமாக விளங்கியது. உண்மையில் இந்த 90 வருடங்களும் சிரியாவின் பொற்காலமாக விளங்கியது என்றால் அது மிகையாகாது.

உமையா ஆட்சி வீழ்ச்சியடைந்து கி. பி. 750ஆம் ஆண்டளவில் அப்பாஸியர் எழுச்சியடைந்து அவர்களின் ஆட்சி ஆரம்பித்ததனையடுத்து தலைநகரம், டமஸ்கஸிலிருந்து பக்தாதுக்கு மாற்றப்பட்டது. இதன் பின்னர் சிரியாவின் முக்கியத்துவம் குன்ற ஆரம்பித்தது என்றே கூறல் வேண்டும். அப்பாஸிய ஆட்சியில் ஒரு மாகாணமாகத் தொடர்ந்தும் சிரியா இருந்து வந்தது.

எகிப்தில் சுதந்திரமாக ஆட்சிசெய்ய முற்பட்ட எகிப்திய கவர்னர் அஹ்மத் பின் தூலூன் கி. பி. 878ஆம் ஆண்டு சிரியாவைக் கைப்பற்றினார். தொடர்ந்து வந்த எகிப்திய ஆட்சியாளர்களும் சிரியாவில் தமது பிடியை வைத்திருந்தார்கள்.

கி. பி. 969ஆம் ஆண்டு முதல் 1027ஆம் ஆண்டு வரை சிரியா எகிப்திய பாத்திமியர் ஆட்சியின் கீழ் இருந்தது. பின்னர் சிரியா ஸல்ஜூக்கியரின் ஆட்சிக்கு உட்பட்டது. சிலுவை யுத்தத்தின் போது சிரியாவின் பல பகுதிகளை முஸ்லிம்கள் இழந்தார்கள். ஆயினும் முஸ்லிம் ஆட்சியாளரான நூருத்தீன் ஸன்கி சிரியாவின் இழந்த பகுதிகளைக் கைப்பற்றி ஐக்கிய சிரியாவை மீண்டும் ஸ்தாபித்தார். இவரின் பின்னர் டமஸ்கஸ், பிரபல முஸ்லிம் போராளியும் ஆட்சியாளருமான ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் கைக்கு மாறியது. இவர் சிலுவைப் போராளிகளை வெற்றிகரமாக எதிர்கொண்டு முஸ்லிம்கள் இழந்த ஜெரூஸலத்தையும் மீண்டும் கைப்பற்றினர்.

கி. பி. 1193ஆம் ஆண்டு ஸலாஹுத்தீன் ஐயூபி மரணமடைந்த பின்னர் மீண்டும் சிரியாவின் சில பகுதிகள் சிலுவைப் படையின் கைக்குள்ளாயின. ஆயினும் எகிப்தில் தோன்றிய மம்லூக்கிய ஆட்சியாளர்கள் பிற்பட்ட காலத்தில் சிரியாவை முழுமையாக அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுவித்தார்கள்.

பின்னர் சிரியாவை ஆக்கிரமிக்க முற்பட்டார்கள் மங்கோலியர்கள். ஆயினும் மம்லூக்கியர் மிகவும் வெற்றிகரமாக அவர்களை முறியடித்தார்கள். கி. பி. 1517 ஆம் ஆண்டுவரை முஸ்லிம் மம்லூக்கியரின் ஆட்சி சிரியாவில் தொடர்ந்தது. 1517 ஆம் ஆண்டு துருக்கிய உஸ்மானிய சுல்தான் முதலாம் ஸலீம் சிரியாவை மம்லூக்கியரிடம் இருந்து கைப்பற்றினார். தொடர்ந்து சுமார் மூன்று நூற்றாண்டுகள் சிரியா உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் கீழ் இருந்தது.

முதலாம் உலக மகாயுத்தத்தை அடுத்து உஸ்மானிய சாம்ராஜ்யம் சின்னாபின்னப்பட்டது. அதன் கீழ் இருந்த சிரியாவும் பிரான்ஸியரின் ஆதிக்கத்துக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உட்பட்டது. 1920ஆம் ஆண்டளவில் இது இடம்பெற்றது. தொடர்ந்தேர்ச்சியான சுதந்திரப் போராட்டத்தைத் தொடர்ந்து 1941ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சிரியா ஒரு சுதந்திரக் குடியரசாக மலர்ந்தது.

1945ஆம் ஆண்டு ஒரு தேசிய அரசாங்கம் இந்த நாட்டில் தேர்தலின் மூலம் நிறுவப்பட்டது. ஷுக்ரி குவத்லி ஜனாதிபதியாக நியமனம் பெற்றார்.

1941ஆம் ஆண்டு சிரியா சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்ட போதிலும் பிரான்ஸ் சில பல துறைகளில் தனது பிடியைத் தொடர்ந்து வைத்திருந்தது. 1946ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்தான் பிரான்ஸியத் துருப்புக்கள் சிரியாவிலிருந்து முற்றாக வெளியேறின. எனவே இந்நாடு இந்த ஆண்டே பூரண சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டது என்று கூறல் வேண்டும்.

1945ஆம் ஆண்டு ஒக்டோபர் 24ஆம் திகதி சிரியா ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொண்டது.

1958ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சிரியா, எகிப்துடன் இணைந்து ஐக்கிய அரபுக் குடியரசு என்ற பெயரைப் பெற்றது. ஆயினும் 1961ஆம் ஆண்டு செப்டம்பர் 28ஆம் திகதி சிரியாவில் இடம்பெற்ற ஓர் இராணுவப் புரட்சியை அடுத்து சிரியா எகிப்திலிருந்து பிரிக்கப்பட்டது. நாட்டின் தலைவராக நாஸிம் அல்-குத்ஸி பதவியேற்றார்.

1963ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி மற்றுமொரு புரட்சி சிரியாவில் மேற்கொள்ளப்பட்டது. இந்தப் புரட்சி வெற்றி பெற்று முன்னால் இராணுவ ஜெனரல் ஹாபிழ் அல் அஸத் நாட்டின் புதிய ஜனாதிபதியானார். இன்றுவரை சிரியாவின் ஜனாதிபதியாக இவரே இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

தொடரும் . . .

(8ம் பக்கத் தொடர்ச்சி)

*திலும், காற்றைத் திருப்பி வீசச் செய்வதிலும், வானம் பூமிக்கிடையில் கட்டுப்பட்டுள்ள மேகத்திலும், சிந்திப்பவர்களுக்கு அத்தாட்சிகள் பல இருக்கின்றன." (அல் பகரா : 164)*

சுருங்கச் சொல்வதாயின் சூரதுல் பகரா அதன் முதற் பக்கத்திலேயே தக்வாவைப் பற்றிப் பேசுகின்றது. பின்னர் தக்வாவுக்கான மைல் கற்களையும் அதை அடைவதற்கான வழிமுறைகளையும் விவரிக்கின்றது. முத்தகிகள் யார், முத்தகி அல்லாதோர் யார், முன்னைய சமூகங்கள், அதில் முதலாவது இஸ்ராயீலின் சந்ததியினர் எவ்வாறு தக்வா நிலையிலிருந்து கீழிறங்கினர், அதன் பின் இஸ்லாமிய சமூகம் எப்படி வந்தது, மேலான வஹியை எவ்வாறு பெற்றது? அவனது தூதை நிறைவேற்றுவதற்கு, பூமியில் பிரதிநிதிகளாய் இருப்பதற்கு எப்படித் தக்வாவுடன் வாழலாம், ஈமானோடு இபாதத்தோடு, சுமத்தப்பட்ட பொறுப்புக்களோடு அல்லாஹ்வின் பாதையில் நிலைத்திருப்பது எப்படி என்றெல்லாம் இவ்வத்தியாயம் விவரிக்கின்றது.

இந்நீண்ட அத்தியாயத்தினூடாக அல்லாஹ் எம்மீது விதித்துள்ள கடமைகள், வணக்க வழிபாடுகள், பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டுமாயின் நமது உழைப்பைச் செலுத்த வேண்டும் என அவன் எதிர்பார்க்கின்றான். நாமிழைக்கின்ற தவறுகளுக்காக மறந்தவற்றுக்காக அவனிடம் மன்னிப்புக் கேட்குமாறு கூறுகின்றான். மார்க்கத்தில் நிலைத்திருக்கவும் எதிரிகளை வெற்றிபெற அவனது உதவியை ஆஷிக்குமாறும் கேட்கின்றான்.

இது சூரதுல் பகராவுக்கான சுருக்கமான விளக்கமாகும். இம்மொத்த விளக்கத்திலிருந்து அதன் உட்பகுதிகள் எவ்வாறு ஒத்துச் செல்கின்றன என்பதை அடுத்த இதழில் நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்கால சமூகங்களின் ஷரீஅத்

## (ஷராயிஃ சாபிகா)

அஷ் ஷெய்க் எம். ஏ. எம். மன்ஸூர்

அல்லாஹ்விடத்தில் மார்க்கம் என்பது ஒன்றேயாகும். இஸ்லாம் என்ற ஒரே மார்க்கத்தையே ஆதம் (அலை) அவர்களது காலத்திலிருந்து அல்லாஹ் அருளினான். பல்வேறு சமூகங்களுக்கும், பல்வேறு காலப்பிரிவுகளிலும் அனுப்பப்பட்ட அனைத்து இறைதூதர்களும் ஒரே இறைவனால் அனுப்பப்பட்ட ஒரே தூதைப் பரப்பியவர்களே. இக்கருத்தை அல்குர்ஆனும், சுன்னாவும் மிகத் தெளிவாக விளக்கியுள்ளன. இதில் கருத்து வேறுபட எத்தகைய நியாயமுமில்லை.

*"நூஹுக்கு உபதேசித்ததையே உங்களுக்கு மார்க்கமாக ஆக்கியுள்ளோம். உமக்கு நாம் வஹியாக அறிவித்ததுவும், இப்றாஹீம், மூஸா, ஈஸா போன்றவர்களுக்கு உபதேசித்ததுவும், நீங்கள் மார்க்கத்தை நிலைநாட்டுங்கள், அம்மார்க்க விடயத்தில் பிரிந்து விடாதீர்கள் என்பதையே ஆகும். (ஸூறா : ஷூறா)*

*"அல்லாஹ்வுக்கு இபாதத் செய்யுங்கள், தாகூத்தை (அத்துமீறல் மூலம் அல்லாஹ்வுக்கானவற்றை தமதாக்கிக் கொண்டவற்றை) விட்டு ஒதுங்குங்கள் எனக் கூறி அனைத்து சமூகங்களுக்கும் ஒவ்வொரு தூதரை நாம் அனுப்பி வைத்தோம்." (ஸூறா நஹ்ல் : 36)*

இவ்விரு வசனங்களும் நபிமார்களின் தூது; அடிப்படையில் ஒரே சிந்தனையைக் கொண்டது என விளக்குகின்றன. இப்படியான பல திருமறை வசனங்களை அல்குர்ஆனில் காண முடியும். இந்த வகையில் இறைதூது ஒன்றே. - நபிமார்கள் பரப்பப் பாடுபட்ட சிந்தனைகள் அடிப்படையில் ஒன்றே என்ற கருத்தில் எந்த இஸ்லாமிய அறிஞரும் மாற்றுக் கருத்துத் தெரிவிக்கவில்லை.

நபிமார்கள் வித்தியாசமான காலப் பிரிவுகளில், வித்தியாசமான பல சமூகங்களுக்கிடையேயும் தோன்றினார்கள். இந்த வகையில் கிளைச் சட்டங்கள் மாறுபட்டு அமைதல் தவிர்க்க முடியாததாகலாம். அப்போது குறிப்பிட்டதொரு சமூகத்தில் குறிப்பிட்டதொரு சந்தர்ப்பத்தை அவதானித்தும் சட்டங்கள் இயற்றப்படலாம். *"யூதர்களுக்கு நாம் நீண்ட நகங்களுள்ளவற்றை ஹராமாக்கினோம். மாடு, ஆடு என்பவற்றில் முதுகுகளில் தங்கிவிடுபவை, குடலோடும், எழும்போடும் கலந்து விடுபவை தவிர கொழுப்பை ஹராமாக்கினோம்."* என்ற இறைவசனம் இதற்கு நல்ல உதாரணமாகும். குறிப்பிட்ட சமூகத்தின் அத்துமீறிய போக்கின் காரணமாகவே இச்சட்டம் இயற்றப்பட்டதாக அல்குர்ஆனே விளக்குகிறது. இந்த வகையில் குறிப்பிட்ட காலத்திற்கும், சமூகத்திற்கும், சந்தர்ப்பத்திற்கும் மட்டுமே உரிய சட்டங்கள் காணப்படுவதும் தவிர்க்க முடியாததாகும். இக்கருத்தும் - கருத்து வேறுபாடின்றி ஏற்கத்தக்க ஒன்றேயாகும்.

முற்கால சமூகமொன்றின் இந்த இரு நியதிகளுக்கும் அப்பால் மாற்றப்பட்டு விட்டது என்பதற்கு ஆதாரமற்றதொரு சட்டத்தை முஹம்மத் (ஸல்) அவர்களது உம்மத்தினர் பின்பற்ற முடியுமா? என்பதுவே இங்கு வாதத்திற்குரிய விடயமாகும். இந்த இடத்தில் மூன்று முக்கிய விடயங்களைக் கவனத்திற்கொள்ளல் அவசியமாகும்.

(I) முற்கால சமூகங்களின் சட்டங்களை இஸ்லாமிய மூலாதாரங்களின் ஊடாக மட்டுமே அறிந்துகொள்ள முடியும். தவ்றாத், இன்ஜீல் போன்ற முற்கால வேதங்கள் ஊடாக அவற்றை அறிவது சாத்தியமல்ல. ஏனெனில் அவை அனைத்தும் திரிபுற்றவை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையாகும். எனவே அல்குர்ஆன், சுன்னா என்ற இரு மூலாதாரங்கள் ஊடாக மட்டுமே முற்கால ஷரீஅத் சட்டங்களை அறிந்துகொள்ள முடியும். இக்கருத்து இஸ்லாமிய சட்ட அறிஞர்களிடம் ஏகோபித்த முடிவாகும்.

(II) குறிப்பிட்ட முற்கால சமூகமொன்றுக்கு இறக்கப்பட்ட சட்டம் மாற்றப்பட்டு விட்டது (மன்சூக்) அல்லது அதற்கு மட்டும் விசேடமானது என அல்குர்ஆன், சுன்னாவின் ஊடாக நிறுவப்பட்ட சட்டமும் பின்பற்றலுக்கு உகந்ததல்ல. பின்பற்ற அனுமதிக்கப்படாதது. இக்கருத்தும் இஸ்லாமிய சட்ட அறிஞர்களுக்கு மத்தியில் ஏற்கப்பட்ட உண்மையாகும். இறைச்சியின் சில குறிப்பிட்ட பாகங்கள் பனூ இஸ்ரவேலர்களுக்கு ஹராமாக்கப்பட்டிருந்தது என ஏற்கனவே நாம் குறிப்பிட்ட இறைவசனம் அவர்களுக்கு விஷேடமாக இறக்கப்பட்ட ஒரு சட்டமாகும் என்பது தெளிவு. ஷிர்க்கில் ஈடுபட்டால் தவ்பாவை ஏற்க கொலை செய்யப்படல் யூதர்களுக்கான சட்டமாகக் காணப்பட்டது. யூதர்கள் மாட்டை வணங்கிய போது அதற்கான தவ்பாவை ஏற்க அவர்கள் கொலை செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை ஸூரா அல் பகராவின் 54வது வசனம் கூறுகிறது. சனிக்கிழமை அவர்களுக்கு உழைப்பதற்குத் தடை செய்யப்பட்ட நாளாகக் கொள்ளப்பட்டது. இச்சட்டங்கள் அனைத்தும் இஸ்லாமிய சமூகத்தைப் பொறுத்தவரையில் மன்சூக் (மாற்றப்பட்டவை) ஆனவை என்பது மிகத் தெளிவானதாகும்.

(III) முற்கால சமூகமொன்றுக்கு சட்டமாக இருந்த விடயமொன்று இஸ்லாமிய சமூகத்தின் மீதும் சட்டமாக்கப்பட்டுள்ளது எனத் தெளிவாக அல்குர்ஆனிலோ, ஹதீஸிலோ ஆதாரம் வரின் அது எமக்கு சட்டமாகிறது என்பது தெளிவானது. “விசுவாசிகளே உங்களுக்கு முன்பிருந்தோர்மீது கடமையாக்கப்பட்டது போன்று நோன்பு உங்கள் மீதும் கடமையாக்கப்பட்டுள்ளது” என அல்குர்ஆன் ஸூரா பகராவில் கூறுவது இதற்கு உதாரணமாகும். “உள்ஹிய்யாக் கொடுங்கள். அது உங்களது தந்தை இப்றாஹீம் (அலை) அவர்களது சுன்னாவாகும்” என இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இந்த ஹதீஸ் உள்ஹிய்யா இப்றாஹீம் (அலை) அவர்களது ஷரீஅத்தில் சட்டமாக இருந்தது போன்று எமக்கும் சட்டமாக இருக்கிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

ஷராயிஃ சாபிகா - முற்கால சமூகங்களில் ஷரீஆ - சம்பந்தமான இம் மூன்று விடயங்கள் குறித்தும் சட்ட அறிஞர்களுக்கு மத்தியில் எத்தகைய கருத்து வேறுபாடும் காணப்படவில்லை. முற்கால சமூகங்களின் ஷரீஅத்தின் ஒரு சட்டத்தைக் கூறி அது மாற்றப்பட்டு விட்டதா அல்லது அது எமக்கும் பின்பற்றுவதற்குரியதா எனத் தெளிவாக விவரிக்கப்படாதபோதுதான் இஸ்லாமிய சட்ட அறிஞர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு தோன்றுகிறது.

ஷாபி, மாலிகி மத்ஹபில் சில சட்ட அறிஞர்களும், அஷ்அரி, முஃதஸிலா மத்ஹபினரும், முற்கால ஷரீஅத்கள் எமக்கு சட்ட மூலாதாரமாகக் கொள்ளப்பட முடியாது என்ற கருத்தைக் கொண்டுள்ளனர்.

முற்கால ஷரீஅத்துகள் அனைத்தும் குறிப்பிட்ட காலப்பிரிவுக்குரிய தற்காலிகமானவையாகவே இருந்தன. குறிப்பிட்ட மக்கள் பிரிவிற்கே அது இறங்கியது. “நபி தன் சொந்த சமூகத்திற்கே அனுப்பப்பட்டு வந்தார். ஆனால் நானோ மக்கள் அனைவருக்குமாக அனுப்பப்பட்டேன்” என இதனை இறைதூதர் (ஸல்) அவர்களும் விளக்கினார்கள். இந்த வகையில் குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்கு குறிப்பிட்ட காலப்பிரிவுக்கு இறங்கிய ஷரீஆ அந்த சமூகத்தோடு, காலப் பிரிவோடு முடிந்து போய் விடுகிறது. எனவே அவற்றின் ஷரீஅத்துகள் எமக்குரியவையாகா என்ற இந்த வாதத்தையே இப்பிரிவினர் முக்கியமாக முன்வைக்கின்றனர்.

முற்கால சமூகத்தினரது ஷரீஅத்தும் எமக்குரிய ஷரீஅத்தாகக் கொள்ளப்பட வேண்டும் என விவாதிப்பவர்கள் கீழ் வரும் ஆதாரங்களை முன்வைக்கின்றனர். இக்கருத்தை ஷாபியீ, ஹனபி, மாலிகி மத்ஹபினரில் பலர் ஏற்றுக்கொள்கின்றனர். இமாம் அஹ்மதும் இக்கருத்தைக் கொண்டிருந்ததாக ஒரு ரிவாயத் கூறுகிறது.

(1) பல திருமறை வசனங்கள் முன்னைய நபிமார்களைப் பின்பற்றுமாறு கூறுகின்றன. கட்டுரையின் ஆரம்பத்தில் அத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைய ஒரு திருமறை வசனத்தைக் குறிப்பிட்டோம்.

*"அவர்கள் அல்லாஹ்வினால் வழிகாட்டப்பட்டவர்கள். அவர்களது நேர் வழியை நீங்களும் பின்பற்றுவீர்களாக"* இது பல நபிமார்கள் பற்றியும் விளக்கிவிட்டு அல்குர்ஆன் கூறும் கருத்தாகும். இப்றாஹீம் (அலை) அவர்களைப் பின்பற்றுமாறு பல திருமறை வசனங்கள் விளக்குகின்றன. இஸ்லாம் மார்க்கத்தை *"உங்களது தந்தை இப்றாஹீமின் வழிமுறை"* என அல்குர்ஆன் ஸூறா ஹஜ்ஜின் இறுதி வசனத்தில் கூறுகிறது.

(2) "யார் ஒரு தொழுகையை விட்டு விட்டுத் தூங்கிவிடுகிறாரோ அல்லது தொழுவதை மறந்து விடுகிறாரோ அவர் அது ஞாபகம் வந்ததும் தொழட்டும்" எனக் கூறிய இறை தூதர் (ஸல்) அவர்கள் *"என்னை ஞாபகப்படுத்த தொழுகையை நிலைநாட்டுவீராக"* என்ற இறைவசனத்தை ஓதினார்கள். இந்த இறைவசனம் மூஸா (அலை) அவர்களைப் பார்த்து அல்லாஹ் கூறியதாகும். இறைதூதர் (ஸல்) அவர்கள் தொழுகை குறித்த குறிப்பிட்ட அப்பிரச்சினைக்குத் தீர்வாக இந்த வசனத்தை ஓதிக்காட்டியமை அதனை ஆதாரமாகக் கொண்டதையே குறிக்கிறது.

(3) *"தாவூத் நாம் அவரை பரிசோதித்தோம் எனக் கருதி தமது இரட்சகனிடத்தில் பாவமன்னிப்புக் கேட்டு சிரம் பணிந்து விழுந்து வணங்கி மீண்டார்"* என்ற ஸூறா 'சாத்'இல் வரும் இறைவசனத்தை ஓதிய இப்னு அப்பாஸ் ஸஜ்தா செய்துவிட்டு *"அவர்கள் தாம் அல்லாஹ்வால் வழிகாட்டப்பட்டவர்கள். அவர்கள் வழியை நீரும் பின்பற்றுவீராக"* என்ற இறைவசனத்தை ஓதினார்கள்.

இவ்விரு கருத்துக்களிலும் முற்கால சமூகத்தவரது ஷரீஅத்துக்கள் எமக்கு ஷரீஅத்தாக அமைய முடியும் என்ற கருத்தே பலமானதாகத் தோன்றுகிறது. ஏனெனில் அனைத்து ஷரீஅத்துகளும் அல்லாஹ்வினால் இறக்கப்பட்டவையே, முற்கால ஷரீஅத்கள் மாற்றப்பட்டு விட்டன என்பதன் பொருள் அனைத்துக் கிளைச் சட்டங்களும் முழுமையாகத் தற்போது பொருத்தமற்றுப் போய்விட்டன என்பதன்று. சில கிளைச் சட்டங்கள் எமக்கும் பொருத்தமாக இருப்பது சாத்தியமே.

அல்குர்ஆன், அல்லது ஸுன்னா முற்கால ஷரீஅத் சட்டமொன்றைக் கூறும் போது அது மாற்றப்பட்டது என விளக்காவிட்டால் அது மாற்றப்படவில்லை எனக் கொள்வதே பொருத்தமாக அமைகிறது. இவ்வாறான ஒரு சட்டத்தை நாம் பின்பற்றும் போது அல்குர்ஆனை அல்லது சுன்னாவையே நாம் பின்பற்றுகிறோம். ஏனெனில் அச்சட்டத்தை அவ்வாறான மூலாதாரங்களூடாகவே நாம் பெறுகிறோம். அத்தோடு அக்குறிப்பிட்ட சட்டங்களை இயற்றியவன் அல்குர்ஆனையும், சுன்னாவையும் இறக்கிய ஒரே அல்லாஹ்வே ஆவான்.

முன்னைய சமூகங்களின் ஷரீஅத்துக்களை எமக்கும் சட்டமாகக் கொள்ள முடியும் என்பதில் கருத்து வேறுபாடு தோன்றப் பலத்த நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை என விளக்கும் இமாம் அபூ ஜஹ்ரா அக்கருத்தைக் கீழ்வருமாறு தருகிறார்.

"அல்குர்ஆனையும், சுன்னாவையும் ஆராய்ந்து பார்க்கும் போது முற்காலத்து ஷரீஅத் சட்டங்களை அவை விளங்கும் போதெல்லாம் அவை அக்குறிப்பிட்ட சமூகங்களுக்குரியவையாயின் அதனைக் காட்டும் வகையிலேயே அல்குர்ஆன், சுன்னாவினது பிரயோகங்கள் அமைந்து காணப்படுகின்றன. குறிப்பிட்ட சமூகங்களுக்கு மட்டும் அச்சட்டங்கள் உரியன அல்லவாயின் - பொதுவான சொற் பிரயோகங்களையே அல்குர்ஆனும் சுன்னாவும் பயன்படுத்துகின்றன. எனவே முற்கால சமூகத்தவரது சட்டங்கள் எமக்குமுரியன என்பதில் கருத்து வேறுபாடு படத் தேவையில்லை."

ஷராயிஃ சாபிகா - முற்கால சமூகங்களினது ஷரீஆ - மாற்றப்படாத போது நாம் கட்டாயமாகப் பின்பற்ற வேண்டிய சட்டமாகக் கொள்ளப்பட வேண்டும் என்பது இதிலிருந்து தெளிவாகிறது. எனினும் இதனைத் தனியானதொரு சட்ட மூலாதாரமாகக் கொள்ளத் தேவையில்லை. அல்குர்ஆன், சுன்னா என்ற சட்ட மூலாதாரங்களில் அடங்கும் ஒரு பகுதியாகவே இது கொள்ளப்படுவது பொருத்தமாகும். ★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமை வாதத்திற்கும்
புதுமை வாதத்திற்கும் இடையில்

# இஸ்லாமிய கல்விப் பாரம்பரியம்

*(கலாநிதி யூசுப் அல் கர்ளாவீ அவர்கள் "அல்முஜ்தமஃ" எனும் அரபுச் சஞ்சிகையில் எழுதிய "அஸ்ஸகாபதுல் இஸ்லாமிய்யா Bபைனல் அசாலதி வல் முஆசரா" என்ற கட்டுரையின் சென்ற இதழ் தொடர்ச்சி.)*

## இஸ்லாமியக் கல்விப் பாரம்பரியத்தின் தனிப் பண்புகள்

எமது கல்விப் பாரம்பரியத்தின் பிரதான இரு மூலங்களையும் அறிந்து கொண்ட நாம் அதன் தனிப் பண்புகளை சுருக்கமாக நோக்குவோம்.

### *01. இறைமை :*

இக்கல்விப் பாரம்பரியம் இறைமை கலந்ததொன்றாகும். அதில் பொதுவாக ஈமானும், குறிப்பாக ஏகத்துவமும் கலந்துள்ளது. இக்கல்விப் பாரம்பரியத்தின் இலக்கியம், தத்துவம், மொழியியல் நூல்கள், மத நூல்கள், அறிவியல் நூல்கள் அனைத்திலும் இப்பண்பு பிரதிபலிப்பதை எம்மால் கண்டு கொள்ளலாம்.

### *02. ஒழுக்கம் :*

அரேபிய, இஸ்லாமிய கல்விப் பாரம்பரியத்தில் ஒழுக்கத்திற்கு விசாலமான ஓர் இடமுண்டு. ஏனெனில் கல்விப் பாரம்பரியத்தில் ஒழுக்கவியலின் தாக்கம் பிரதானமானதாகும். ஜாஹிலிய்யாக் காலத்தில்கூட ஒழுக்கவியலின் செல்வாக்கை எம்மால் ஹாதிம் அத்தள, உர்வா பின் அல்வர்த், அன்தரர், அல் அபஸீ ஆகியோரின் கவிதைகளூடாக அறிந்து கொள்ளலாம்.

இஸ்லாம் ஜாஹிலிய்யாவில் இருந்த நல்லொழுக்கங்களின் குறுகிய வட்டத்தை விசாலமாக்கியது. நல்லொழுக்கங்களை இம்மை, மறுமை கூலிகளுடன் தொடர்புபடுத்தியது. மேலும் இறுதித் தூதின் இலக்காக ஒழுக்கவியலை ஆக்கிய தன் மூலம் ஒழுக்கங்களுக்கு சிறந்த, உயர்ந்த அந்தஸ்தை வழங்கியது. நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள்.

"நிச்சயமாக நான் ஒழுக்கங்களின் பண்புகளை பூரணப்படுத்துவதற்காக அனுப்பப்பட்டுள்ளேன்."

- புகாரி, அல்ஹாகிம் -

இஸ்லாம் மனித வாழ்வின் அனைத்து அம்சங்களுக்கும் குறிப்பிட்ட ஒழுக்க மாண்புகளை வகுத்துள்ளது. கற்பவர், கற்பிப்பவர், வாசிப்பவர், செவிமடுப்பவர், ஆராய்ச்சியாளர், விவாதிப்பவர் என அனைவருக்கும் தமது பணியை நிறைவேற்றத் தேவையான ஒழுக்கங்களை முன் வைத்துள்ளது.

இஸ்லாத்தின் கண்ணோட்டப்படி சீரிய இறை நம்பிக்கையினதும், தூய்மையான இறை வழிபாட்டினதும் விளைவாக ஒருவனிடத்தில் நல்லொழுக்கங்கள் வெளிப்பட வேண்டும். ஏனெனில் ஒழுக்கச் சீர்கேட்டினால் ஒருவனது ஈமான், வணக்க வழிபாடுகள் என்பன பாதிப்புக்குள்ளாகின்றன.

**தமிழ் மூலம் :– ஏ. எஸ். எம். ஜலீஸ்**
(விடுகை வருடம் - ஜாமிஆ நளீமிய்யா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமியக் கல்விப் பாரம்பரியம் ஒழுக்கங்களை முஸ்லிம்களுக்கெனவும், முஸ்லிமல்லாதோருக்கெனவும் தனித்தனியாக பிரித்து நோக்கவில்லை. ஹலாலானவை அனைவருக்கும் ஆகுமானது என்பது போல நல்லொழுக்கங்கள் அனைவருக்கும் ஆகுமாகும். அவ்வாறே ஹறாம் அனைவருக்கும் தடை செய்யப்பட்டுள்ளது போல தீய பழக்கங்கள் அனைவருக்கும் தடுக்கப்பட்டவையாகும்.

மேலும் நல்ல இலக்கு ஒன்றை அடைந்துகொள்ள கெட்ட, தடைசெய்யப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றுவதை எமது கல்விப் பாரம்பரியம் அனுமதிக்காது. இஸ்லாத்தின் கருத்துப்படி நோக்கம் மாத்திரம் நன்றாக இருந்தால் போதாது. மாறாக அதை நிறைவேற்றப் பயன்படுத்தப்படும் வழிமுறைகளும் சிறந்தவையாக இருத்தல் வேண்டும். ஏனெனில் நபியவர்கள் "நிச்சயமாக அல்லாஹ் சிறந்தவன். அவன் நல்லவற்றைத் தவிர வேறு எதையும் ஏற்க மாட்டான்" எனக் கூறியுள்ளார்கள்.

மேலும் இஸ்லாம் ஒழுக்கத்தையும், ஏனைய விடயங்களையும் பிரித்து நோக்காது. மாறாக, இஸ்லாத்தின் கண்ணோட்டப்படி கல்வி, பொருளாதாரம், அரசியல், யுத்தம் போன்ற அனைத்து அம்சங்களும் ஒழுக்கத்தோடு பின்னிப்பிணைந்தவையாக விளங்கும். இவ்வகையில் நோக்கும் போது எமது கல்விப் பாரம்பரியத்தை ஒழுக்கத்திலிருந்து எவ்வகையிலும் பிரித்து நோக்க முடியாது.

### 03. மானுடப் பண்பு :

இஸ்லாமிய கல்விப் பாரம்பரியத்தின் மற்றுமொரு சிறப்பம்சமாக இது உள்ளது. இக்கல்விப் பாரம்பரியத்தின் இலக்கே மனிதனை கண்ணியப்படுத்தலாகும். அவ்வாறே அவனது உரிமைகளை, கண்ணியம் சீர்குலையாமல் பாதுகாத்தலுமாகும். ஏனெனில் இது மனிதனை கண்ணியமான ஓர் படைப்பாகக் கருதுகிறது.

*"நிச்சயமாக நாம் ஆதமுடைய சந்ததியினரை கண்ணியப்படுத்தினோம்." (17:70)*

இஸ்லாம் மனிதர்களை இனம், நிறம், மொழி, தேசம், கோத்திரம், மதம் என்று பிரித்து நோக்கி அவர்களது தரத்திற்கேற்ப கண்ணியப்படுத்தாது. மாறாக அது மனிதனை அவன் யாராயினும் சரி மனிதன் என்ற வகையில் கண்ணியப்படுத்துகிறது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக பின்வரும் சம்பவம் காணப்படுகிறது.

"ஒரு முறை நபியவர்கள் உட்கார்ந்திருந்த போது ஒரு ஜனாஸா கடந்து சென்றது. அப்போது நபியவர்கள் அதற்காக எழுந்து நின்றார். அவருக்கு 'அது ஒரு யஹூதியின் ஜனாஸா' என்று கூறப்பட்டது. அதற்கு நபியவர்கள் 'அது ஓர் ஆத்மா இல்லையா? நிச்சயமாக இஸ்லாத்தில் ஒவ்வொரு ஆத்மாவிற்கும் கண்ணியமும் அந்தஸ்தும் உள்ளது' என்றார்கள்" - புகாரி -

### 04. சர்வதேச மயம் :

இஸ்லாமிய கல்விப் பாரம்பரியம் குறிப்பிட்டதொரு சமூகத்திற்கோ அல்லது குறிப்பிட்டதோர் இனத்திற்கோ உரியதல்ல. மாறாக அது முழு உலகிற்கும், அனைத்து மனிதர்களுக்கும் வழிகாட்டவென இறக்கப்பட்ட கல்விப் பாரம்பரியமாகும்.

இஸ்லாம் இப்பூமியில் இறுதி நபி மூலம் மக்களுக்கு எத்திவைக்கப்பட்டபோது "அரபிகளே!" அல்லது "கிறிஸ்தவர்களே!" என்று மக்களை விழிக்கவில்லை. மாறாக அது "மக்களே! - யா அய்யுஹந் நாஸ் -" என்றே விழித்துப் பேசியது. அத்தோடு இதன் இரட்சகன் குறிப்பிட்ட ஒரு பிரிவினரின் இரட்சகன் என்று கூறவில்லை. மாறாக, "அகிலங்களின் இரட்சகன்" என்றே கூறியது.

அது மட்டுமன்றி அழைப்பானது முழு அகிலத்தாருக்குமுரியதாகும்.

*"நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ஓர் அருட்கொடையாகவே அனுப்பினோம்." (21:107)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 05. தாராளத் தன்மை :

சர்வதேசமயமான இஸ்லாமிய கல்விப் பாரம்பரியத்தில் தாராளத்தன்மை என்ற பண்பு கட்டாயம் இருக்க வேண்டும். சர்வதேச கல்விப் பாரம்பரியத்தின் மீது கட்டியெழுப்பப்பட்ட இஸ்லாம் இரண்டு அடிப்படை விடயங்களை முன்வைக்கிறது.

(அ) மக்கள் மதரீதியாகவும், மற்றும் வேறு விடயங்களிலும் பல்வேறு பிரிவினர்களாக பிரிந்திருப்பது இறை நாட்டத்தோடு தொடர்பான விடயமாகும். இதில் மனிதனால் குறுகியளவு மாற்றத்தையே மேற்கொள்ளலாம். இதை அல்லாஹ் பின்வருமாறு விளக்குகிறான்.

*"உம் இறைவன் நாடியிருந்தால் மனிதர்கள் அனைவரையும் ஒரே சமுதாயத்தவராக ஆக்கியிருப்பான். (ஆனால் அவன் அப்படி ஆக்கவில்லை) இதனால் அவர்கள் எப்போதும் கருத்து வேறுபாடுபட்டவர்களாகவே இருப்பர். உமது இறைவன் அருள்புரிந்தவர்கள் கருத்து வேறுபாடுபட மாட்டார்கள். இதற்காகவே அவர்களைப் படைத்திருக்கிறான். (11 : 118, 119)*

(ஆ) இவ்வாறு வழிகேட்டிலும், வழிபிறழ்விலும் உள்ள மக்களுக்கான விசாரணைகள் யாவும் அல்லாஹ்வினால் மறுமையில் மேற்கொள்ளப்படும். எனவே சில வேளை அல்லாஹ் தனது கருணையினால் அவர்களை மன்னிக்கலாம். அல்குர்ஆன் இதைப் பின்வருமாறு விளக்குகிறது.

*"எனவே, (நபியே! நேர்வழியின் பக்கம்) அவர்களை அழைத்துக்கொண்டே இருப்பீராக. மேலும் நீர் ஏவப்பட்ட பிரகாரம் உறுதியுடன் நிற்பீராக. அவர்களுடைய (இழிவான) மனோ இச்சைகளை நீர் பின்பற்றாதீர். மேலும் 'அல்லாஹ் இறக்கி வைத்த வேதங்களை நான் நம்புகிறேன்; உங்களிடம் நீதி வழங்கும்படியும் நான் ஏவப்பட்டுள்ளேன்; அல்லாஹ்வே எங்கள் இறைவனாவான்; அவனே உங்களுடைய இறைவனுமாவான்; எங்கள் செயல்கள் எங்களுக்கு; உங்கள் செயல்கள் உங்களுக்கு. எங்களுக்கும் உங்களுக்குமிடையே தர்க்கம் வேண்டாம். அல்லாஹ் நம்மிடையே (எம்மை) ஒன்றுசேர்த்து விசாரணை செய்வான். அவன்பாலே நாம் மீண்டு செல்ல வேண்டியுள்ளது' என்று கூறுவீராக." (42: 15)*

இந்த வகையில் முஸ்லிம் சமூகத்தில் வாழும் அந்நிய மதத்தவர்கள் தமது தெய்வீகக் கோட்பாடுகள், வணக்க வழிபாடுகள், கிரியைகள் அனைத்தையும் தம் விருப்பப்படி செய்துகொள்ள பூரண உரிமையைப் பெற்றுள்ளனர். அத்தோடு முஸ்லிம்கள் மீது தடைசெய்யப்பட்டுள்ள மது, பன்றி என்பன காபிர்களுக்கு ஆகுமாக்கப்படும். மேலும் அந்நியர்களுக்கு இஸ்லாமிய அரசின் நிர்வாக விடயங்களில்கூட பதவிகள் வழங்கப்படும். இவ்வாறு தாராளத் தன்மையுடன் செயற்படும் போது இஸ்லாமிய கல்விப் பாரம்பரியத்தை, நாகரிகத்தைக் கட்டியெழுப்புவதில் அந்நியர்களும் பங்கெடுப்பர்.

## 06. பல்லினத் தன்மை :

எமது கல்விப் பாரம்பரியம் வெறும் மார்க்க விடயங்களை மாத்திரம் உள்ளடக்கியது என்று பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர். இது ஏற்றுக்கொள்ளத்தக்க ஓர் கருத்தல்ல. ஏனெனில் இதில் மார்க்கத்துடன் தொடர்பான கலைகள், கணிதவியல், மருத்துவம் போன்ற பல்வேறு கலைகள் உட்பட இன்னும் பல விடயங்கள் அடங்கியுள்ளன.

அத்தோடு அதில் இமாம் அபூஹனீபாவின் சட்டக்கலை, இமாம் சாபிஈயின் சட்டவிதிகள், இமாம் தபரியின் குர்ஆன் விளக்கம், இமாம் புஹாரியின் அறிவிப்புக்கள் (ஹதீஸ்கள்), அல் ஜாஹிழின் இலக்கியம், ஸீபவைஹியின் இலக்கணம், அல் கலீல் அஹ்மதின் அகராதி, இப்னு ஸீனாவின் மருத்துவம், அல் முதநப்பியின் கவிதை, அல் பிரூணியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிதம், இமாம் கஸ்ஸாலியின் சூபித்து வம், இப்னு ருஷ்தின் தத்துவம், இப்னு கல்தூனின் வரலாற்றுப் பகுப்பாய்வு போன்ற அனைத்தும் அடங்கியுள்ளன.

மேலும் அதில் ஸ்பெயினின் இப்னு துபைல், டியூனிசியாவின் இப்னு அபீ ஸைத், எகிப்தின் இப்னு ஹஜர், யமனின் இப்னு வஸீர், ஈரானின் ஸீராஷீ, குவா ரிஸ்மின் ஸமஹ்ஷரீ, இந்தியாவின் அத் திஹ்லவீ, துருக்கியின் ஜலாலுத்தீன் றூமி போன்ற பலரும் தம் பங்களிப்பை மேற் கொண்டுள்ளனர்.

## 07. நடுநிலைமை :

நடுநிலைமையான போக்கைக் கொண்ட ஒரு சமூகத்திற்கு உரித்தான கல்விப் பாரம்பரியமானது நிச்சயம் "நடு நிலைமை அல்லது சமநிலை" என்ற பண்பைத் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். எமது சமூகத்தைப் பற்றி இறைவன் பின்வருமாறு கூறுகிறான்.

*"இதே முறையில் நாம் உங்களை ஒரு நடுநிலையான சமுதாயமாக ஆக்கியுள்ளோம்." (02 : 143)*

இஸ்லாமிய கல்விப் பாரம்பரியத்தின் சமநிலைத் தன்மையை வஹி, பகுத்தறிவு, ஈமான், கல்வி, கடமைகள், உரிமைகள், சடவாதம், ஆன்மீகம், சமூகம், தனி மனிதன், சட்டவசனம், இஜ்திஹாத் என்பவற்றிற்கிடையில் இஸ்லாம் கொண்டுள்ள சமநிலைத் தன்மையை அறிவதன் மூலம் கணிப்பிட்டுக் கொள்ளலாம்.

## 08. பூரணத்துவம் :

இஸ்லாமியக் கல்விப் பாரம்பரியமானது மனித வாழ்வுடன் தொடர்பான அனைத்து விடயங்களையும் பூர்த்தி செய்வதற்காக இறக்கப்பட்டது. ஏனெனில் இது புதிதாக, வெறுமையிலிருந்து தோன்றியதொன்றல்ல. மாறாக இது முன்னைய நபிமார்கள் மூலம் தொடர்ந்து கட்டம்கட்டமாக முன்வைக்கப்பட்டது. இதைப் பூர்த்தி செய்பவராகவே நபியவர்கள் அனுப்பப்பட்டார். நபியவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

"நிச்சயமாக நான் ஒழுக்க மாண்புகளை பூரணப்படுத்துவதற்காகவே அனுப்பப்பட்டுள்ளேன்."

- புகாரி, அல் ஹாகிம் -

ஏற்கனவே வாழ்ந்த மக்களிடத்திலும் ஒழுக்க விழுமியங்கள் இருந்தன. எனினும் அவை பூரணமானவையல்ல. அவற்றில் நிவர்த்தி செய்யப்பட வேண்டிய பல விடயங்கள் இருந்தன. இவற்றை நிவர்த்தி செய்யவே நபியவர்கள் அனுப்பப்பட்டார்கள். அதாவது இஸ்லாமிய கல்விப் பாரம்பரியமே இவ்வொழுக்க விழுமியங்களை பூரணப்படுத்தியது.

இஸ்லாமிய கல்விப் பாரம்பரியத்துக்கும் ஏனைய கல்விப் பாரம்பரியங்களுக்குமிடையிலான தொடர்பானது இறுதி நபித்துவத்துக்கும் ஏனைய தூதுகளுக்குமிடையிலான தொடர்பைப் போன்றதாகும். இறுதி நபி இறைதூதைப் பூரணப்படுத்த வந்தார். அது போல இஸ்லாமியக் கல்விப் பாரம்பரியமானது ஏனைய கல்விப் பாரம்பரியங்களிலுள்ள குறைகளை நிவர்த்தி செய்யுமுகமாக அமைந்துள்ளது.

நபியவர்கள் தாம் இறைதூதுகளைப் பூரணப்படுத்தியவர் என்பதை பின்வரும் ஹதீஸின் மூலம் விளக்கியுள்ளார்.

"நானும் எனக்கு முன் தோன்றிய நபிமார்களும் ஒரு வீட்டைக் கட்டியவன் போன்றாகும். அவன் அதில் ஒரு மூலையில் செங்கல் ஒன்று வைக்கும் இடத்தைத் தவிர மற்றதை எல்லாம் பூரணப்படுத்தி அழகுபடுத்தினான். மக்கள் அந்த வீட்டைத் தரிசித்து, ஆச்சரியப்பட்டு 'இந்த செங்கல் வைக்கப்படக் கூடாதா?' என்று கூறலானார்கள். நான்தான் (அந்த) செங்கல். நான்தான் இறுதி நபி"

- புகாரி, முஸ்லிம் -

**(34ம் பக்கம் பார்க்க)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உஸ்மானிய சாம்ராஜ்யம் - 08

# மன்னர் இரண்டாம் முராதின் இறுதிக் காலமும் சுல்தான் முஹம்மத் அல் பாதிஹின் தோற்றமும்

மன்னர் இரண்டாம் முராத் தமது மகன் அலாவுத்தீன் மரணித்த கவலையில் ஆட்சியை 14 வயதே நிரம்பி இருந்த தனது அடுத்த மகன் முஹம்மதிடம் ஒப்படைத்துவிட்டு ஆட்சியை விட்டும், உலக விவகாரங்களிலிருந்தும் ஒதுங்கி வாழ முற்பட்டதாக சென்ற இதழில் குறிப்பிட்டோம்.

எனினும் சில மாதங்கள் கழிவதற்கு முன்னரே 'மகர்' நாட்டு மன்னர் தான் செய்துகொண்டிருந்த ஒப்பந்தத்தையும் மீறி பல்கேரியாவின் மீது படை எடுத்தார். இச்செய்தி மன்னர் முராதை எட்டியதும் ஒப்பந்தத்தை முறித்து துரோகம் செய்துவிட்ட மன்னன் மீது கோபமுற்று பெரும் படையுடன் புறப்பட்டார். கருங்கடல் ஓரத்தில் அமைந்துள்ள Varna என்ற நகரை மகர் நாட்டு மன்னன் படைகள் முற்றுகையிட்டிருப்பதைக் கண்ட மன்னன் அங்கு சென்று கடும் போராட்டத்தில் ஈடுபட்டார். இந்த யுத்தத்தில் மகர் நாட்டு மன்னன் 'லாதஸ்லாய்' கொலையுண்டார். அவரது படைகள் சிதறி ஓடின. பிரசித்திபெற்ற மகர் தளபதி ஹோனியாடின் வீரம் மன்னர் முராத் கானின் முன்னால் எதுவும் செய்ய முடியாது போயிற்று. பின்னர் அதனை வெற்றிகொண்டார். இந்த வெற்றி ஹிஜ்ரி 848 ரஜப் 28 (1444 நவம்பர் 10இல்) நிகழ்ந்தது.

இந்த வெற்றியின் பின்னர் மன்னர் மீண்டும் மகனிடம் ஆட்சியை ஒப்படைத்துவிட்டு ஒதுங்கி வாழ முற்பட்டார். இம்முறையும் அது மன்னரால் சாத்தியப்படவில்லை. ஏனெனில் 'இன்கிஷாரிவா' என்ற உஸ்மானியப் படைப்பிரிவு சிறு வயதினரான தமது மன்னரை மதிக்காது புரட்சிசெய்து நாட்டின் தலைநகர் அட்ரினாவையும் சூறையாடினர். இந்நிலையில் ஒதுங்கி வாழ்வதிலிருந்து வெளியேறிய மன்னர் 1445இல் அவர்களது புரட்சியைக் கட்டுப்படுத்தினார்.

மன்னர் தனது படைப்பிரிவை ரோமர்களுக்கெதிரான போராட்டங்களில் ஈடுபடுத்தினார். கிரேக்கத்தை நோக்கி அவர் படையெடுத்தார். ரோம மன்னன் இமானுவேல் தனது பிள்ளைகளிடையே கிரேக்கத்தைப் பிரித்துக் கொடுத்திருந்தமை மன்னனின் போராட்டத்தை இலகுவாக்கியது. அவர்களில் ஒருவராகிய கொன்ஸ்தாந்தைன் மன்னரின் படையெடுப்பை அடுத்துப் பெரும் மதிலொன்றை தன் நாட்டை சூழ எழுப்பினார். எனினும் உஸ்மானியப் படையின் முன்னால் இம்மதிலும் நிற்க முடியவில்லை. உஸ்மானியர்கள் இம்மதிலைத் தகர்க்க முதன் முதலாகப் பீரங்கிகளைப் பயன்படுத்தினர். மதிலில் பல ஓட்டைகளை அதன் மூலம் ஏற்படுத்திய அவர்கள் 'கொர்நாதா' என்ற நகரைக் கைப்பற்றினர். கிரேக்கத்தின் தென் பகுதியான 'மோரா' தீபகற்பத்தை முழுமையாகக் கைப்பற்ற மன்னர் முயன்றபோதும் ஸ்கந்தர் பெக் என்ற அவரது கவர்னர் ஒருவர் செய்த துரோகம் இதற்குத் தடையாக அமைந்துவிட்டது.

ஸ்கந்தர் பெக் இஸ்லாத்தைத் தழுவினார். ஆனால் இது அவரது தந்திரமா

அஷ்ஷெய்க் எம். ஏ. எம். மன்ஸூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவே அமைந்திருந்தது. இதனூடாக அரச ரை நெருங்கினார். அல்பேனியாவை உஸ் மானியர்களிடமிருந்து மீட்க வேண்டும் என்ற கருத்தைப் பல கோத்திரத் தலைவர் களிடமும் விளக்கி ஏற்க வைத்தார். இந்த வகையில் பெரும் படையொன்றை திரட்டி 1443ஆம் ஆண்டு துருக்கியத் தள பதி அலி பாஷாவை வெற்றிகொண்டு தன் ஆதிக்கத்தைப் பரப்பினார். 'மகர்' நாட்டு மன்னரோடு, மன்னர் போராடிக்கொண் டிருந்தமை ஸ்கந்தர் பெக்குக்குச் சாதக மாகவும் அமைந்துவிட்டது.

ஏற்கனவே விளக்கியது போன்று 'மகர்' மன்னரை வெற்றிகொண்டதன் பின்னர் மன்னர் முராத் மீண்டும் ஸ்கந்தர் பெக் மீது படையெடுத்தார். போராட்டத் தில் 1447ல் இரண்டு பிரதான அல்பேனிய நகர்களையும் கைப்பற்றினார். எனினும் மகர் நாட்டின் பிரசித்தி பெற்ற தளபதி ஹோனியாத் மீண்டும் சேர்பியா மீது படையெடுத்ததைக் கேள்வியுற்ற மன்னர் ஸ்கந்தர் பெக் மீதான போராட்டத்தை நிறுத்தி ஹோனியாத் உடன் போராட வேண்டியதாயிற்று.

852 ஷஃபான் 18 (1448 ஒக்.17) அன்று கொசோவாப் பள்ளத்தாக்கில் மன்னர், ஹோனியாதின் படையை முறியடித்து மிகப் பெரும் வெற்றி கண்டார்.

இந்த வெற்றியின் பின்னர், மீண்டும் ஸ்கந்தர் பெக்கோடு போராட ஆரம்பித் தார். ஆக் ஹிசார் என்ற அல்பேனிய நக ரையும் முற்றுகையிட்டார். என்றாலும் பல போராட்டங்களில் கலந்துகொண்டு பலவீனமுற்றிருந்த மன்னரின் படையால் இம்முற்றுகையை வெற்றிகரமாக முடிக்க முடியவில்லை. இந்நிலையில் வருடாந்தம் குறிப்பிட்டளவு ஜிஸ்யா செலுத்தி வரு தல் என்ற நிபந்தனையோடு அல்பேனி யாவை நிர்வகிக்கும் பொறுப்பை ஸ்கந்தர் பெக்கிடம் கொடுக்க மன்னர் முனைந் தார். இதனை ஸ்கந்தர் பெக் ஏற்காமையி னால் பெரியதொரு படை திரட்டியே ஸ்கந்தர் பெக்கை வெற்றிகொள்ள முடி யும் எனக் கருதிய மன்னர் முற்றுகையை நிறுத்திவிட்டு தலைநகர் அட்ரினாவுக்குத் திரும்பினார்.

எனினும் படை திரட்டி அத்துரோ கியைத் தாக்க முன்னரே மன்னர் 855 முஹர்ரம் 5ம் திகதி (1451 பெப்ரவரி 7) தனது 49வது வயதில் மரணமடைந்தார். அவரது ஆட்சிக்காலம் 30 வருடங்களா கும்.

## சுல்தான் அபுல் பத்ஹ் இரண் டாம் முஹம்மத்

1432 மார்ச் 30ஆம் திகதி சுல்தான் இரண்டாம் முஹம்மத் பிறந்தார். வரலாற் றில் இவர் 'வெற்றியாளர்' என்ற பொருள் படும் பாதிஹ் என்ற சொல் கொண்டு அழைக்கப்படுகிறார். ஆதலால் இவரது பெயர் முஹம்மத் பாதிஹ் என்றே அழைக்கப்படலாயிற்று. கொன்ஸ்தாந்து நோபிளை இரண்டாம் முஹம்மத் கைப் பற்றியமையே இப்பெயர் அவருக்கு சூட் டப்படக் காரணமாயிற்று. "நிச்சயமாக நீங்கள் கொன்ஸ்தாந்திநோபிளைக் கைப் பற்றுவீர்கள். அதனைக் கைப்பற்றும் படைத் தலைவர் மிகச் சிறந்த தலைவர். கைப்பற்றும் அந்தப் படையும் மிகச் சிறந்த படையாகும்" என ஏற்கனவே இறைதூதர் (ஸல்) அவர்கள் நன்மாராயம் கூறியிருந்தார்கள். சுல்தான் முஹம்மத் அல்பாதிஹ் இறைதூதர் (ஸல்) அவர்கள் புகழ்ந்தமைக்கு ஏற்ப, உயர்ந்த ஆட்சியாள ராகவும் காணப்பட்டார்.

கொன்ஸ்தாந்திநோபிள் கைப்பற்றப் பட்ட 1453ஆம் ஆண்டு மே 29ஆம் திகதி யிலிருந்து தான் நவீன காலம் ஆரம்ப மாகிறது என்பது வரலாற்றாசிரியர்களது உடன்பாடான கருத்தாகவும் உள்ளது.

சுல்தான் முஹம்மதின் காலப் பிரிவு, உஸ்மானியர்களது வெற்றிகளால் உலகம் அதிர்ச்சியுற்றிருந்த காலப் பிரிவாகும். குறிப்பாக ஐரோப்பியர் - உஸ்மானியர் களுக்கிடையிலான போராட்டம் அக்கா லப் பிரிவின் மிக முக்கிய நிகழ்வாகக் கருதப்பட்டது. அப்போதைய உலக சனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகை 400 மில்லியனைத் தாண்டியிருக்கவில்லை. ஆசியாவில் 275 மில்லியனும், ஐரோப்பாவில் 70 மில்லியனும், அமெரிக்காவில் 15 மில்லியனாகவும், ஆபிரிக்காவில் 40 மில்லியனாகவுமே அப்போது மக்கள் பரவிக் காணப்பட்டனர். முழு இஸ்லாமிய உலகையும் ஒரே கொடியின் கீழ் கொண்டுவந்து ஐரோப்பாவோடு போராட வேண்டும் என்ற சிந்தனை இக்காலப் பிரிவில் உஸ்மானியர்களிடம் காணப்பட்டது.

மன்னர் பாயஜீத் ஷாம், எகிப்து போன்ற நாடுகளின் மம்லுக்கியர்களோடு போராடுவதற்கு இந்த வகையில் முயன்றார். ஆனால் தைமூர் லங்கின் படையெடுப்பு இதற்குத் தடையாக அமைந்துவிட்டது. முஹம்மத் அல் பாதிஹும் இதே நோக்கத்தைக் கொண்டவராக பிற்காலத்தில் காணப்பட்டார்.

உஸ்மானிய இளவரசர்களை கடுமையானதொரு பயிற்றுவித்தலுக்கு உட்படுத்துவது உஸ்மானிய அரச குடும்பத்தின் வழக்கமாகக் காணப்பட்டது. பல அறிஞர்களைக் கொண்டதொரு குழு இவர்களைப் பயிற்றுவிக்கும். இந்த வகையில் சுல்தான் இரண்டாம் முஹம்மதும் ஓர் அறிஞர் குழுவால் இளவயதிலிருந்தே பயிற்றுவிக்கப்பட்டார். அல்குர்ஆன், ஹதீஸ், பிக்ஹ் (இஸ்லாமிய சட்டம்) போன்ற இஸ்லாமியக் கலைகளைக் கற்றதோடு கணிதம், வானவியல், இராணுவக் கலைகள் போன்ற அக்காலக் கலைகளையும் அவர் பயின்றார். அத்தோடு இளவரசர் முஹம்மத் தமது தந்தை சுல்தான் இரண்டாம் முராத் ஐரோப்பாவுக்கு எதிராக மேற்கொண்ட யுத்தங்களிலும் பங்குகொண்டார்.

குறிப்பிட்டதொரு பிரதேச நிர்வாகத்தை சிறு பிராயத்திலேயே இளவரசர்களுக்குப் பொறுப்புக் கொடுப்பது உஸ்மானியர்களது இன்னொரு வழக்கமாகும். இவ்வாறு அவர்கள் எதிர்கால ஆட்சியாளரை ஆட்சிப் பொறுப்புக்குத் தகுதியாக்குவர். இந்த வகையில் இளவரசர் இரண்டாம் முஹம்மதை மக்னீசியா என்ற பகுதிக்குக் குறிப்பிட்டதொரு காலப்பிரிவுக்கு கவர்னராக நியமித்தனர். மார்க்க அறிஞர்களின் கண்காணிப்பின் கீழ்தான் இந்த நிர்வாகப் பொறுப்பு இளவரசர்களுக்கு வழங்கப்படும். இந்த வகையில் இளவரசர் முஹம்மதின் கண்காணிப்பாளர்கள் மிகப் பிரசித்திபெற்ற அறிஞர்களாக அமைந்திருந்தனர். ஷெய்க் ஆக் ஷம்சுதீன், முல்லா கவ்பானி என்ற இருவரும் முஹம்மதின் ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்த வகையில் இளவரசர் முஹம்மதின் ஆளுமையை உருவாக்குவதில் அவரது ஆசிரியர்கள் பெரும் பங்கு வகித்தனர். அவரது அறிவு, அரசியல், இராணுவப் போக்குகளை அவர்களே நெறிப்படுத்தி உருவாக்கிவிட்டனர். குறிப்பாக ஷெய்க் ஆக் ஷம்சுதீன் இளவரசர் முஹம்மதைப் பயிற்றுவிப்பதில் மிகுந்த கண்டிப்பானவராகக் காணப்பட்டார். முஹம்மத் ஸுல்தானாக ஆகிய போது இது குறித்து தமது மந்திரிகளில் ஒருவரிடம் கீழ்வருமாறு கூறினார் :

"இந்த ஷெய்குக்கு நான் செலுத்தும் கண்ணியம் என் முழு உள்ளத்தையும் ஆட்கொள்ளக் கூடியது. அவர் முன்னால் நிற்கும்போது நான் தடுமாறிப் போகிறேன். என் கைகள் நடுங்குகின்றன."

சுல்தான் இரண்டாம் முஹம்மத் மேற்குறிப்பிடப்பட்ட கலைகளோடு அரபு, பாரசீகம், துருக்கி போன்ற மொழிகளை நன்கு கற்றறிந்தார். அவர் ஒரு சிறந்த கவிஞராகவும் காணப்பட்டார். துருக்கிய மொழியில் அவரது ஒரு முழு கவிதைத் தொகுப்பொன்றும் காணப்படுகிறது.

கீழ்வரும் அவரது கவிதை மிகப் பிரசித்தமானது :

"எனது எண்ணம் அல்லாஹ்வின் பாதையில் போராடுங்கள்" என்ற இறை கட்டளையைப் பிரதிபலிப்பதாகும்....

"என் உத்வேகம் அல்லாஹ்வின் மார்க்கத்தின் பாதையிலானதாகும்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லத்தீன், கிரேக்கம், சேர்பிய மொழிகளையும் மன்னர் பயின்றிருந்தார். ஐரோப்பியரோடு போராடி வந்த உஸ்மானிய அரசின் எதிர்கால சுல்தானுக்கு இம்மொழிகளின் தேவையை விளக்க வேண்டியதில்லை.

மங்னீசியப் பகுதியின் கவர்னராக இருந்த காலப் பிரிவில் வரலாறு, புவியியல், இராணுவக் கலைகள் போன்றவற்றை ஆழ்ந்து கற்று உஸ்மானிய ஆட்சியாளர்களிலேயே மிகவும் தேர்ச்சிபெற்ற மன்னராக முஹம்மத் காணப்பட்டார். வரலாற்றுப் போக்கில் பாரிய பாதிப்பை ஏற்படுத்திய ஆளுமைகளைப் பற்றிப் படிப்பதில் முஹம்மதின் ஆசிரியர்கள் குறிப்பாக அவரை ஈடுபடுத்தினார்கள். அந்த ஆளுமைகளின் பலத்தையும், பலவீனத்தையும் ஆராய்ந்து விளங்கக் கூடிய வகையிலும் முஹம்மதை அவர்கள் பயிற்றுவித்தார்கள்.

ஷெய்க் ஆக் ஷம்சுதீன் இளவரசர் முஹம்மதின் ஆளுமையை உருவாக்குவதில் பெரும்பங்கு வகித்தார். சிறு வயதிலிருந்தே இரு விடயங்களை அவரில் ஆழப் பதிக்க அவர் முயன்றார்.

I. உஸ்மானிய ஜிஹாத் இயக்கத்தை விரிவு படுத்தலும், அதிகரித்தலும்.

II. கொன்ஸ்தாந்துநோபிளைக் கைப்பற்றுவது சம்பந்தமாக ஏற்கனவே குறிப்பிட்ட ஹதீஸுக்குரியவராக இளவரசர் முஹம்மத் அமையலாம் என்ற கருத்தைத் தொடர்ந்து ஊட்டி வரல்.

இத்தகைய ஆழ்ந்த பயிற்றுவித்தலின் காரணமாகவே 'முஹம்மத்', 'வெற்றியாளர்' என்ற பட்டம் பெற்ற மன்னராகவும், மிகச்சிறந்த உஸ்மானிய ஆட்சியாளர்களில் ஒருவராகவும் வரலாற்றில் ஏற்கப்படுகிறார்.

(30ம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்லாம் மனிதனுக்குப் பயனளிக்கக்கூடிய அறிவு, நற்செயல்கள் என்பவற்றை அவை பிற கலாசாரங்கள், மதங்களில் இருந்தாலும் பெற்றுக்கொள்ளும்படி முஸ்லிம்களை ஏவுகிறது. இதுவும் இஸ்லாமியக் கல்விப் பாரம்பரியத்தின் பூரணத்துவத்திற்கான எடுத்துக்காட்டாகும். இதை நபியவர்கள் பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

"அறிவு முஃமினின் காணாமல் போன சொத்தாகும். அவன் அதை எங்கு கண்டுகொண்டாலும் பெற்றுக்கொள்ள உரித்துடையவனாவான்." - அத்திர்மிதீ -

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசை பலவீனமானது. என்றாலும் இது கூறும் கருத்து சரியானது என்பது ஏகோபித்த முடிவாகும்.

மேலும் பத்று யுத்தக் கைதிகளில் பணம் செலுத்த முடியாதோர் 10 முஸ்லிம்களுக்கு எழுத, வாசிக்க கற்றுக்கொடுக்க வேண்டும் என நபியவர்கள் பணித்தமையும் பிற கலாசாரங்களிலிருந்து எமக்குப் பிரயோசனமானவற்றைப் பெற முடியும் என்பதற்கு ஆதாரமாகும். இக்கைதிகள் மூலம்தான் ஸைத் பின் ஸாபித் (ரழி) உட்பட பல ஸஹாபிகள் எழுத, வாசிக்க கற்றுக்கொண்டனர்.

இவ்வாறு பல வகையிலும் இஸ்லாமியக் கல்விப் பாரம்பரியம் பூரணமாக உள்ளது. எனவே சிறந்ததொரு கல்விப் பாரம்பரியம் பெற்று இருக்கவேண்டிய அனைத்து பண்புகளையும் ஒருங்கே பெற்றதாக எமது கல்விப் பாரம்பரியம் விளங்குகிறது.

(தொடரும் . . .)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்குர்ஆனின் அற்புதம்
## ஒரு நோக்கு – III

சென்ற இதழ் தொடர்ச்சி ...

### வித்தியாசமான கண்ணோட்டங்கள்

இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டுடன் கலந்த தத்துவக்கலை 'இல்முல் கலாம்' எனப்படுகின்றது. இது அளவையியல் எனவும் அழைக்கப்படுகின்றது. இறையியலோடு தொடர்பான பெறுமானங்களைச் சடப்பொருள் வாதத்துக்கும் தர்க்கவியலுக்கும் உட்படுத்தி நோக்கிய 'இல்முல்கலாம்' இஸ்லாத்திற்கே உரிய ஒரு கலையாகக் கருதப்படுகின்றது. இக்கலை இஸ்லாமிய நாகரிகத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை மறுக்க முடியாது. அல்லாஹ்வின் (கலாம்) வார்த்தையாகிய அல்குர்ஆன் எல்லா சிருஷ்டிகளையும் போன்ற ஒரு சிருஷ்டியே என்ற வாதம் இஸ்லாமிய தர்க்கவியலாளர்களால் முன்வைக்கப்பட்டது. இதற்கேற்ப அல்குர்ஆனின் அற்புதம் பற்றிய அவர்களின் கண்ணோட்டங்களும் வேறுபட்டன.

முஃதஸிலாக்களின் தலைவர்களுள் ஒருவராகக் கருதப்படும் நிழாமியா பிரிவைச் சேர்ந்த அபூ இஸ்ஹாக் இப்ராஹீம், ஷீஆ அறிஞர் முர்தழா போன்றோர் அல்குர்ஆனின் அற்புதத்துக்கு மாற்று விளக்கம் கொடுக்கின்றனர். அல்குர்ஆன் போன்ற ஒன்றை உருவாக்கும் ஆற்றல் பெற்றிருந்த அரபியரை அவ்வாறு கொண்டுவர முடியாமல் அல்லாஹ் திசை திருப்பி விட்டான். அல்குர்ஆனின் சவாலை எதிர்கொள்ள அவர்களுக்குத் தேவையான அறிவியல் கலைகளை அல்லாஹ் அவர்களிடம் இருந்து பறித்துக் கொண்டான். இதுவே அல்குர்ஆனின் அற்புதம் என இவர்கள் குறிப்பிடுகின்றனர்.

உண்மையில் இக்கருத்து அல்குர்ஆனின் அற்புதத் தன்மையை மறுப்பதாக உள்ளது. இங்கே அல்லாஹ்வின் ஏற்பாடு அல்லது நியதி ஓர் அற்புதமாக முன்வைக்கப்படுகின்றது. ஒரு காலகட்டத்தில் அரபியர் அல்குர்ஆனைப் போன்ற ஒன்றை உருவாக்கும் திறமை பெற்றிருந்தனர். அத்திறமையை அல்லாஹ் அவனது ஏற்பாட்டால் முறியடித்துவிட்டான் எனக் கூறுவது அல்குர்ஆனின் அற்புதத்தை நிறுவுவதாக அமையாது. அல்லாஹ்வின் ஆற்றலையும் மகத்துவத்தையும் பற்றி சிலாகிப்பதாகவே அது அமைகிறது.

மேற்குறித்த கருத்தை மறுத்துரைக்கும் அறிஞர் அபூபக்கர் அல்பாகிலானி "அல்லாஹ்வின் ஏற்பாடுதான் அரபியரை அல்குர்ஆனின் சவாலை எதிர்கொள்வதில் இருந்து தடுத்தது எனக் கூறுவது அத்தகைய தடையை அற்புதமாக சித்தரிப்பதாக அமைந்துவிடுகிறது; அல்குர்ஆனை அல்ல. அவ்வாறாயின் அல்லாஹ்வின் வார்த்தை (வஹி) பிற வார்த்தைகளைவிட மேலானதன்று என வாதிடுவதுபோல் இருக்கின்றது" எனக் குறிப்பிடுகிறார்.

அல்குர்ஆனின் அற்புதத்துக்கு இப்படி விளக்கம் தருவதாயின் மனித, ஜின் வர்க்கத்தினர் இரு சாராரும் ஒன்று சேர்ந்து இது போன்ற ஒன்றைக் கொண்டுவர முடியாது என அடித்துக் கூறும் அல்குர்ஆன் வசனத்துக்கு என்ன விளக்கம் கொடுப்பது? ஆற்றல்மிக்க நிலையிலும் அன்றைய அரபியரால் இது போன்ற ஒன்றைக் கொண்டுவர முடியாது என்ற அவர்களின் அப்பட்டமான இயலாமையை அல்லவா இவ்வசனம் உணர்த்தி நிற்

அஷ் ஷெய்க் எச். ஐ. எம். கைருல் பஷர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது. அவர்களின் ஆற்றல் பறிக்கப்பட்ட நிலையில் விடுக்கப்படும் சவால் உண்மையில் ஒரு சவாலாக இருக்க முடியாதல்லவா! இந்நிலையில் மனித இயலாமையை அற்புதமாகக் கொள்ள முடியுமா?

## அதிசய அமைப்பு :

அல்குர்ஆனின் அற்புதத்தைப் பற்றிப் பேசும் மற்றொரு சாரார் அது அல்குர்ஆனின் ஈடிணையற்ற அணியிலக்கணத்தோடு தொடர்பானது என்பர். அரபியரின் மொழிநடைக்கும் மொழிப் பிரயோகத்துக்கும் மாற்றமான, அவர்களை அதிசயிக்க வைக்கும் ஓர் அழகிய மொழிநடையை அல்குர்ஆன் கொண்டுள்ளது. ஏனைய நூல்களில் உள்ளவை போன்ற முற்றுப்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, மேற்கோள், ஆச்சரியக் குறி, கேள்விக்குறி போன்றவற்றை அல்குர்ஆனில் காண முடியாது. அல்குர்ஆனின் 'ஆயத்' என்பது ஒரு வசனம் அல்ல. சிலவேளை அது ஒரு சொல்லிலும் முடியலாம். அல்லது நீண்ட வசனங்களின் கூட்டுச் சேர்க்கையாகவும் இருக்கலாம். உதாரணமாக 'அல்பகரா' அத்தியாயத்தின் 282வது ஆயத் அல்குர்ஆனின் மிகக் கூடிய வசனங்களை உள்ளடக்கியதாகும்.

## எதிர்வு கூறல்

பிரபஞ்ச இயக்கம் பற்றியும் அதில் மனித வரலாறு பற்றியும் அல்குர்ஆன் விபரித்துள்ளது. அத்தோடு, நடக்கப் போகும் விடயங்கள் பற்றியும் அது முன்னறிவிப்புச் செய்துள்ளது. இவை அல்குர்ஆனின் தெய்வீகத் தன்மைக்கு சான்றாகும். எழுதப் படிக்கத் தெரியாத ஒருவர், முன்னைய வேதங்கள் பற்றிய அறிவைப் பெறக்கூடிய வகையில் யூத, கிறிஸ்தவர்களுடன் தொடர்புகொண்டிருக்காத ஒருவர் எவ்வாறு இத்தகைய உண்மைகளை வெளிப்படுத்தியிருக்க முடியும்?

இந்த வகையில் அல்குர்ஆனை அற்புதமாக நோக்குவோர் தமது கருத்தை நிறுவ சில ஆதாரங்களை முன்வைக்கின்றனர். அவற்றுள் சிலவற்றைக் குறிப்பிடுவது பொருத்தமாகும்.

1. நபிகளாரின் காலத்தில் வேதத்தையுடைய உரோம கிறிஸ்தவர்களுக்கும் இணைவைப்பாளர்களாகிய பாரசீக நெருப்பு வணங்கிகளுக்குமிடையில் ஒரு யுத்தம் நடைபெற்றது. இதில் கிறிஸ்தவர்கள் தோல்வியடைந்ததனால் முஸ்லிம்கள் இணைவைப்பாளரின் கரம் ஓங்குவதைப் பார்த்து கவலையடைந்தனர். மேலும் பாரசீகர்கள் "இவ்வாறுதான் நாம் உங்களையும் வெற்றிகொள்வோம்" என முஸ்லிம்களை அச்சுறுத்தினர். இச்சந்தர்ப்பத்தில் அல்லாஹ் முஸ்லிம்களின் உள்ளங்களில் மகிழ்வையும் திருப்தியையும் ஏற்படுத்தும் வகையில் அதே கிறிஸ்தவர்கள் பாரசீகத்தை வெற்றிகொள்வார்கள் என்று நன்மாராயம் கூறினான்.

*"ரோம் தோல்வியடைந்துவிட்டது. அருகிலுள்ள பூமியில்; ஆனால் அவர்கள் (ரோமர்கள்) தங்கள் தோல்விக்குப் பின் விரைவாக வெற்றியடைவார்கள்"*

*(30: 2-3)*

அவ்வாறே ஹிஜ்ரி 7ஆம் ஆண்டு அன்றைய இரு பேரரசுகளின் படைகளும் மோதிக் கொண்டன. இதில் உரோமர் பாரசீகரை வெற்றிகொண்டனர். அல்குர்ஆனின் முன்னறிவிப்பு உண்மையாகியது.

2. பத்று யுத்த களத்திலே நிராகரிப்பாளரின் தலைவன் அபூஜஹ்ல் "நாம் பெருங் கூட்டத்தினராக இருக்கிறோம்; நாமே வெற்றி பெறுவோம்" என மார்புதட்டிப் பேசினான். அப்போது அல்லாஹ் முஸ்லிம்களின் வெற்றியை நிச்சயப்படுத்தி பின்வருமாறு அறிவித்தான்:

*"அதி சீக்கிரத்தில் இக்கூட்டத்தினர் சிதறடிக்கப்பட்டு புறங்காட்டி ஓடுவர்." (54:45)*

3. ஹிஜ்ரி 6ஆம் ஆண்டு (ஹுதைபியா வருடம்) நபி (ஸல்) அவர்கள் கஃபா நோக்கிப் புறப்பட முன்னர் தாமும் தமது தோழர்களும் தலைமுடி சிரைத்தவர்களாகவும், கத்தரித்தவர்களாகவும் பாதுகாப்பாக மக்காவில் நுழைய கனவு கண்டார்கள். இது பற்றி தமது தோழர்களிடம் கூற அவர்களும் மட்டில்லா மகிழ்ச்சியுற்றனர். பின்னர் ஹிஜ்ரி 6ல் நபிகளாருடன் புறப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட ஹுதைபிய்யாவில் அவர்கள் காபிர் களால் தடுக்கப்பட்டனர். இது தோழர் களுக்கு மன வேதனையைக் கொடுத்தது. கூட இருந்த சில நயவஞ்சகர்கள் நபிகளா ரின் கனவில் சந்தேகம் கொள்ளலாயினர். அப்போது அல்லாஹ் தன் தூதருக்கு இவ் வாறு வஹி அறிவித்தான்: *"நிச்சயமாக அல்லாஹ் தன் தூதருக்கு (அவர் கண்ட) கனவை உண்மையாக்கிவிட்டான். அல் லாஹ் விரும்பினால் நிச்சயமாக நீங்கள் மஸ்ஜிதுல் ஹராமில் அச்சந் தீர்த்தவர் களாகவும், உங்கள் தலைகளைச் சிரைத் துக்கொண்டவர்களாகவும் (தலைமுடி) கத்தரித்துக் கொண்டவர்களாகவும் நுழைவீர்கள். (அப்போதும் எவருக்கும்) நீங்கள் பயப்பட மாட்டீர்கள். ஆகவே நீங் கள் அறியாதிருப்பதை அவன் அறிகி றான். (அதன் பின்னர்) இதனை அன்றி நெருங்கிய ஒரு வெற்றியையும் அவன் (உங்களுக்கு) ஆக்கிக் கொடுத்தான்." (48:27)*

இவ்வசனத்தில் அல்லாஹ் மக்கா வெற்றியையும் அதற்கு முன்னர் ஹிஜ்ரி 7ல் இடம்பெற்ற கைபர் வெற்றியையும் முஸ்லிம்களுக்கு முன்னறிவிப்புச் செய் தான். மக்கா ஹிஜ்ரி 8ல் வெற்றிகொள் ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு எதிர்கால நிகழ்வுகளை நிச்சயித்து உறுதியாகக் கூறும் மறைவா னவை பற்றிய அறிவு நபி (ஸல்) அவர் களுக்கு கிடைத்ததெனின் அது 'வஹி' எனும் தெய்வீக அறிவே அன்றி சுய அறிவாக இருக்க முடியாது. எழுதப் படிக்கத் தெரியாத ஒருவர் இவற்றை சுய மாகக் கூற எவ்வாறு துணிவு பெற்றிருக்க முடியும்?

## முன்நிகழ்வுகளும் வஹியும்

மனித வரலாற்றின் கடந்தகால நிகழ் வுகளையும் அல்லாஹ் நபி (ஸல்) அவர் களுக்கு அறிவித்தான். அவை நபிகளா ருக்கு சோதனையில் ஆறுதலையும், தமது பணியில் திட உறுதியையும் தருவனவாக அமைந்தன. தவிர, விசுவாசிகளுக்கு நல்லு ணர்ச்சி புகட்டும் போதனைகளாகவும் இருந்தன. இத்தகைய முன்னைய நபிமார் கள், சமூகங்களின் வரலாறுகளை *'மறை வானவை பற்றிய செய்திகள்'* என அல்குர் ஆன் குறிப்பிடுகின்றது. வஹியின் மூலமா கவே அன்றி நபி (ஸல்) அவர்கள் யாரிட மும் இவற்றைக் கற்றுக்கொள்ளவில்லை.

*"(நபியே! உமக்கு) இது மறைவான நிகழ்ச்சிகளில் உள்ளதாகும். நாம் இதனை உமக்கு (வஹீ மூலம்) அறிவித்தோம். நீரோ அல்லது உம்முடைய கூட்டத்தி னரோ இதற்கு முன் அதனை அறிந்திருக்க வில்லை." (11:49)*

அன்றும் இன்றும் அல்குர்ஆனின் அற்புதத் தன்மையை மறுப்போர் அல்குர் ஆன் நபிகளாரின் கருத்துக்களையும் வார்த்தைகளையும் கொண்டது என்றும், மக்களிடத்தில் தனக்கு அங்கீகாரத்தையும் செல்வாக்கையும் பெற்று அதிகாரத்தை அல்லது தலைமைத்துவத்தை அடைந்து கொள்ள அவற்றை அல்லாஹ்வுடையது எனக் கூறிக்கொண்டார் என்றும் குறிப் பிடுகின்றனர்.

உண்மையில் இறைதூதர் (ஸல்) அவர்கள் தமது தலைமைத்துவத்துக்கு ஆதரவும் அங்கீகாரமும் பெறுவதற்காக தமது சொந்த வார்த்தைகளுக்கே தெய் வீக முலாம் பூசினார்கள் எனின், மனித சமூகத்துக்கு சவாலாக அமைந்த அல்குர் ஆனை ஏன் அவர்கள் தம்முடையது எனப் பகிரங்கப்படுத்தாமல் அல்லாஹ்வு டையது எனக் கூறவேண்டும்? இதில் அவர்களுக்கு என்ன அனுகூலம் இருக் கிறது? அவர்கள் அது தமது ஆக்கமே எனப் பறைசாற்றியிருந்தால் அது ஒன்றே அவர்களின் தலைமைத்துவத்தை அங்கீ கரிப்பதற்கும் அவர்களின் அந்தஸ்தை உயர்த்துவதற்கும் போதுமானதாக இருந் திருக்காதா? பாரிய மொழித்திறன் படைத்த அரபியர் அல்குர்ஆனுக்கு முன் னால் தமது பலவீனத்தை ஏற்றுக் கொண்ட பிறகு, அல்குர்ஆன் தம்முடை யது என நபி (ஸல்) அவர்கள் கூறியிருந் தால் அது அவர்களின் தனித்துவத்தை உயர்த்தி தலைமைத்துவத் தகுதியை அவர் களுக்கு வழங்கியிருக்காதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காழ்ப்புணர்ச்சியோடு அல்குர்ஆனை நோக்குவோர் இங்கேதான் ஒரு தெளிவான உண்மையை விளங்க வேண்டும். அதாவது வஹியை மறுப்போர் குறுகிய மனப்பாங்குடைய ஒரு சாமான்ய மனிதராக நபி (ஸல்) அவர்களை நோக்குவது பிழையாகும். அவர்கள் உண்மையாளர்; நம்பிக்கையாளர் என தன் எதிரிகளால் கூடப் புகழப்பட்டவர்கள். எனவே தலைமைத்துவ வேட்கையில் அவர்கள் தமக்கு வஹி அறிவிக்கப்படுவதாகப் பொய் சொன்னார்கள் எனக் கூறுவது நியாயமானது தானா?

நபிகளாரின் சொந்த வார்த்தைகள் ஹதீஸ் என்ற பெயரில் மிகத் தூய்மையான முறையில் பல சிரமங்களுக்கு மத்தியில் பாதுகாக்கப்பட்டுள்ள நிலையில் அல்குர்ஆனை அவர்களின் வார்த்தை எனக் குறிப்பிடுவது வரலாற்றைப் பொய்ப்படுத்துவதாகவோ அல்லது வரலாற்றாசிரியர்களை அவமதிப்பதாகவோ அமையாதா?

தமது இலக்கை அடைய எத்தகைய இழிந்த சாதனங்களையும் வழிமுறைகளையும் பயன்படுத்தலாம் என்ற குறுகிய நோக்கம் கொண்ட தலைவர்களுக்கு உத்தமத் தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களை இணையாக்க மேற்கொள்ளப் பட்ட ஒரு சதியாக ஏன் இதனைக் கருத முடியாது? பொய், மோசடி மூலம் நபி (ஸல்) அவர்கள் தலைமைத்துவத்தைப் பெற முயற்சிக்கவில்லை என்பதை அன்றைய எதிரிகளே ஒப்புக்கொண்டனர்.

தனது மனைவி ஆயிஷா (றழி) அவர்கள் மீது சில நயவஞ்சகர்கள் படுதூறு சொன்னபோது தமது அந்தஸ்துக்கு இழுக்கை ஏற்படுத்தக்கூடிய அக்கொடிய துன்பத்தில் இருந்து நிவாரணம் பெற நபி (ஸல்) அவர்கள் உடனே தமது வார்த்தைகளை வஹியாக முன்வைத்து எதிரிகளை வாயடைக்கச் செய்திருக்கலாம். அவ்வாறு செய்யாமல் "ஆயிஷாவே! நீ நிரபராதி என்றால் அல்லாஹ் உன்னை நிரபராதியாக்கட்டும்" என்று கூறி அல்லாஹ்வின் தீர்ப்பை இவ்விடயத்தில் ஏன் அவர்கள் ஒரு மாதமாக எதிர்பார்த்திருந்தார்கள்?

மேற்சொன்ன கருத்தை உண்மைப் படுத்தும் வகையில் நபி (ஸல்) அவர்கள் எதையும் புனைந்துரைக்கவில்லை என்பதை அல்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது:

*"இன்னும், அவர் நம்மீது சொற்களில் (நாம் சொல்லாத) சிலவற்றை இட்டுக்கட்டி(க்கூறி)யிருப்பாரானால் திட்டமாக அவருடைய வலக்கரத்தை நாம் பலமாகப் பிடித்துக் கொண்டிருப்போம். பின்னர், அவருடைய (இதயத்தோடு சம்பந்தப்பட்ட) உயிர் நரம்பை நாம் தறித்து விடுவோம். அப்போது, உங்களில் அவரை விட்டும் (நாம் செய்யும் வேதனையை) தடுத்துவிடக்கூடியவர்கள் எவருமிலர்." (70:44-47)*

அல்குர்ஆனின் அற்புதத்தை இக் கண்ணோட்டத்தில் விளக்குகின்றபோது ஒரு பிரச்சினை எழுகின்றது. இறந்தகால, எதிர்கால, மறைவான விடயங்கள் பற்றிப் பேசாத அல்குர்ஆன் வசனங்களை இக் கருத்தின் பிரகாரம் அற்புதமாகக் கொள்ள முடியாதுள்ளது. அல்லாஹ் அல்குர்ஆனின் அனைத்து வசனங்களையுமே அற்புதமாக வைத்திருக்கும்போது இப்படிக் கருதுவது ஏற்புடையதன்று.

அல்குர்ஆன் பல்வேறு கலைகளையும் உள்ளடக்கி, தெளிவான சட்டவாக்கத்தைக் கொண்டுள்ளது. இக்கண்ணோட்டத்தில் அதனை அற்புதமாக நோக்குவோரும் உள்ளனர். இது பற்றிய விரிவான விளக்கம் ஆய்வின் பிற்பகுதியில் இடம்பெறும்.

பொதுவாக அல்குர்ஆனின் அற்புதத் தன்மையை விளக்க முனையும் எவரும் பல கண்ணோட்டங்களையும் ஒன்று சேர்த்துப் பார்க்க வேண்டும். அப்போதே அற்புதம் என்ற பதத்துக்குரிய முழுக் கருத்தையும் பிரதிபலிப்பதாக அல்குர்ஆன் பரிணமிப்பதைக் காணலாம்.

**(46ம் பக்கம் பார்க்க)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைவரும் ஏகோபித்து ஏற்றுக்கொண்டுள்ள அம்சங்களில்

## பரஸ்பரம் ஒத்துழைத்துக்கொள்ளல்

கடந்த இதழுக்கு முந்திய இதழில் இக்கட்டுரையின் முதலாம் பகுதி வெளிவந்தது. அதில் முஸ்லிம் சமூகத்தின் கொள்கைசார் வேறுபாடுகளால் உருவாகியுள்ள பாரிய பிளவுகளை, இயன்றவரையும் இல்லாதொழிக்க கலாநிதி கர்ளாவி இரு முக்கிய கருத்துக்களை முன்வைத்தார். முஸ்லிம் சமூகத்தின் ஒருமைப்பாடு ஒரு மார்க்கக்கடமை மாத்திரமல்ல அவசியத் தேவையும்கூட என்பதை அதன் உறுப்பினர்கள் ஆழமாக உணர வேண்டும் என்பதற்கான குர்ஆன், ஹதீஸ் மற்றும் நடைமுறை ஆதாரங்களை அவர் முன்வைத்தார். இந்த அடிப்படையை ஆழமாக விசுவாசிப்பதன் மூலம் ஒருமைப்பாட்டுக்கான அடித்தளம் இடப்படுகிறது. அடுத்து, இஸ்லாமிய சமூகத்தின் அற்ப பிரச்சினைகளில் கவனம் செல்லாதிருக்க அதன் பாரிய பிரச்சினைகளில் கவனத்தைத் திருப்பிவிடுவதன் மூலம் இணக்கப்பாட்டை அதிகரிக்கலாம் என அவர் கூறினார். இவ்விதழில் ஒருமைப்பாட்டுக்கு வழிவகுக்கும் மூன்றாவது காரணி பற்றிய விளக்கம் இடம்பெறுகிறது. (ஆ-ர்)

இஸ்லாமிய எழுச்சியை முன்னெடுத்துச் செல்லும் அல்லது இஸ்லாமிய பணியில் ஈடுபடும் சில தரப்பினர் *மஸாஇல் கிலாபிய்யாவில்* (கருத்து வேறுபாடுகளுக்கு உட்பட்ட விவகாரங்களில்) தீவிரமாக அக்கறை காட்டி வருகின்றனர். இரவு பகல் இருபத்து நான்கு மணித்தியாளத்தையும் இவை பற்றிய சிந்தனையிலேயே இவர்கள் கழிக்கின்றார்கள். இவற்றை மையமாக வைத்தே ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன; பாடபோதனைகள் இடம்பெறுகின்றன. அவை பற்றியே வாதப் பிரதிவாதங்கள் செய்யப்படுகின்றன; சொல்லம்புகள் வீசப்படுகின்றன.

கருத்து வேறுபாடுகளுக்குரிய மஸ்அலாக்களில் (விவகாரங்களில்) ஆய்வு செய்யப்படுவது கூடாது என்று நான் கூறவில்லை. ஆனால், அந்த ஆய்வுகள் அறிவுபூர்வமாக, இரு கருத்துக்களில் அல்லது பல கருத்துக்களில் ஒன்றைத் தெரிவு செய்யும் (தர்ஜீஹ் செய்யும்) நோக்குக் கொண்டு, ஒப்பீட்டாய்வுகளாக அமையுமாயின் நல்லது. மேலும், இப்படியான பணியில் அந்த அந்தத் துறைசார் நிபுணர்கள் ஈடுபடுவார்களாயின் அத்தகைய ஆய்வுகளை நான் வரவேற்பேன். நிபுணர்கள் எனும்போது 'ஒப்பீட்டாய்வு' எனப்படும் இத்தகைய நிதானமான அறிவுபூர்வமான பணியில் ஈடுபடுவதற்குரிய ஆழமான பிக்ஹ் ஞானமும், பக்குவமும் (வரஃ), நடுநிலைப் பண்பும் ஒருசேரப் பெற்ற உலமாக்கள் இதில் ஈடுபடுவார்களாயின் நான் அதனை வரவேற்பேன்.

ஆனால், மஸாயில் கிலாபிய்யா (கருத்துவேறுபாடுகளுக்கு உட்பட்ட விவகாரங்கள்) எமது மனதை அலைக்கழிக்கும் கவலைகளாகவும் அறிவின் இலக்குகளாகவும் அமைவதையோ, எமது கால நேரங்களையும் ஆற்றல்களையும் வளங்களையும் அவை விழுங்கிவிடுமளவுக்கு அவற்றை நாம் விகாரப்படுத்துவதையோ நான் விரும்பமாட்டேன். இத்தகைய ஆற்றல்களையும் நேரங்களையும் நாம் எமது மார்க்க, கலாசார மற்றும் நாகரீகத்தின்

அரபு மூலம் : கலாநிதி யூசுப் அல் கர்ளாவீ
தமிழில் : அஷ் ஷெய்க் எஸ். எச். எம். ஃபளீல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதைந்துபோன - தூர்ந்துபோன பகுதிகளை மீளவும் கட்டியெழுப்புவதற்காகப் பயன்படுத்த வேண்டிய தேவை இருக்கையில் நாம் ஏன் இத்தகைய சாதாரண விடயங்களில் அவற்றைப் பிரயோகிக்க வேண்டும்? எமது முழு அவதானமும் கவனமும் கருத்து வேறுபாடுகளுக்கு உட்படாத, நாம் ஏகோபித்து ஏற்றுக்கொண்ட விவகாரங்களில் செலவிடப்படாது வேறு எங்கோ செலவிடப்படுவதையே வெறுக்கின்றேன்.

'சுனனுல் பித்ரா' எனப்படும் இயற்கை வழிமுறைகளில் ஒன்றாக தாடி வைப்பது அமைந்திருக்கிறது. எனவே, முஸ்லிம் ஆண்கள் அனைவரும் தமது தாடிகளை வளர்த்து இந்த சுன்னத்தை உயிர்ப்பிப்பது நல்லதென நான் கருதுகிறேன். இமாம்களிற் சிலர் இவ்வம்சத்தை வாஜிபாகக் கருதியிருப்பதால் இத்துறையில் இடம் பெறும் வீண் வாதப் பிரதிவாதங்களை இதன் மூலம் தவிர்க்க முடியும். அதே வேளை தாடி வைக்காதிருப்பதைப் பெரும் குற்றமாகக் கருதி அது பற்றியே ஆய்வுகளைச் செய்வோருக்கு சந்தர்ப்பத்தை வழங்காதிருக்க இது வழிவகை செய்யும். மேலும், இன்னொரு வகையில் நோக்கும்போது பிற மத ஆண்களிடமிருந்து முஸ்லிம் ஆண்களைப் பிரித்தறியவும் இது வசதியாக அமையும்.

ஆனால், மக்களது முழுக் கவனமும் தாடி வைப்பது பற்றிய சர்ச்சையில் செலுத்தப்படுவதையோ அதனை வளர்க்காதவர்களைப் பாவிகள் என்று எவராவது கருதுவதையோ நான் விரும்பமாட்டேன். இந்தப் பிரச்சினை இன்று உலகெங்கிலும் காணப்படுகிறது. சில உதாரணங்களைப் பாருங்கள் :-

I. (மஸாயில் கிலாபிய்யா) கருத்து வேறுபாடுள்ள விடயங்களில் தீவிர ஈடுபாடு காட்டும் ஒருவர், முஸ்லிம்கள் தாடி வைப்பது கடமை என்றும் அதில் சிறு பகுதியை யாவது கத்தரிப்பது ஹராம் என்றும் வலியுறுத்தும் வகையில் ஒன்பது விரிவுரைகளை நிகழ்த்தியிருக்கிறார்.

II. மேலும் தீவிரப் போக்குடைய ஒருவர், "நஹ்யுஸ் சுஹ்பதி அனிஸ் நுஸூலி அலர் ருக்பா" (சுஜூதுக்குச் செல்லும் போது முழங்கால்களை முற்படுத்தாமல் கைகள் இரண்டையும் முதலில் நிலத்தில் ஊன்றிக் கொண்டே சுஜூதுக்குச் செல்ல வேண்டும்) என்ற தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதினார்.

III. மற்றுமொருவர் "அல்வாஹா ஃபீஜில்ஸதில் இஸ்திராஹா" (முதலாம் ரக்அத்தின் இரண்டாம் சுஜூதை முடித்து விட்டு இரண்டாம் ரக்அத்துக்காக எழும்ப முன்னர் அல்லது மூன்றாம் ரக்அத் முடிவில் ஒருவர் அமரும் ஓர் இருப்பு பற்றிய ஆய்வு) எனும் கட்டுரையை எழுதியுள்ளார்.

இத்தகைய தகவல்களை நம்பிக்கைக்குரிய சில வாலிபர்கள் என்னிடம் தெரிவித்த போது நான் மிகவும் கவலைப்பட்டேன். இவ்வாறு, இமாம்கள் கருத்து முரண்பாடுபட்ட விடயங்களில் கட்டுரைகள் எழுதப்பட்டு ஆய்வுகளும் விரிவுரைகளும் மேற்கொள்ளப்படுவது பற்றி என்ன கூறுவது? இமாம்கள் இந்த விவகாரங்களில் கருத்து பேதங்கொண்டனர். மறுமை நாள்வரை இவற்றில் இந்த கருத்து பேதங்கள் இருக்கவே செய்யும். அப்படியிருக்கையில் ஏன் இவற்றில் இவ்வளவு தீவிரமான கவனம் செலுத்தப்பட வேண்டும்?

இந்த மஸ்அலாக்களில் இமாம்களுக்கு மத்தியிலேயே வேறுபட்ட கருத்துக்கள் நிலவின. ஆனால், அவர்கள் மாற்றுக் கருத்துடையவர்கள் விடயமாக கடும் போக்கைக் கையாளவில்லை. இவை அசட்டை செய்யப்பட வேண்டிய பேதங்கள் என்றே கருதினர். ஆனால், இன்று இத்தகைய சாதாரண விவகாரங்களில் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருப்பவர்கள் கொடூரமாகப் பார்க்கப்படுகிறார்கள். எனவேதான், நான் இதுவிடயமாக விசனப்படுகிறேன்.

உண்மையில், கருத்து முரண்பாடு கொள்வது மனிதனின் இயல்பு. இஜ்திஹாதின் தரத்தை அடைந்த ஒருவர் கருத்து வேறுபாடுபடத்தக்க ஒரு விடயத்தில் இஜ்திஹாத் செய்யும்போது அதில் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியான முடிவைக் கண்டுகொள்ளும் பட்சத்தில் அவருக்கு இரு கூலிகள் உண்டு என்றும் கடினமான இஜ்திஹாத் முயற்சியின் பின்பு அவர் சரியான முடிவைக் காணத் தவறிவிட்டால் அவருக்கு ஒரு கூலி உண்டு என்றும் ஹதீஸில் வந்துள்ளது. எனவே, ஒரு கூலிக்கும் இரு கூலிக்கும் இடைப்பட்ட விவகாரமாக இஜ்திஹாத் அமைவதால் நாம் ஏன் அதனை இவ்வளவு பூதாகரமான பிரச்சினையாக ஆக்கிக்கொள்ள வேண்டும்? கருத்து முரண்பாட்டுக்கு இடம்பாடான மஸ்அலாக்களில் தெரிவிக்கப்படும் பல முடிவுகளில் ஒன்றை 'தர்ஜீஹ்' (தெரிவு) செய்வது என்பதுதான் இன்றைய முஸ்லிம் சமூகத்தின் ஏக பிரச்சினையும் சவாலும் என நாம் நினைப்பதே பெரும் பிழையாகும். எமது உண்மையான பிரச்சினை இது வல்ல. அனைத்து மத்ஹபு சார்ந்தவர்களாலும், வித்தியாசமான போக்குடைய அனைவராலும் ஏகோபித்து ஏற்றுக் கொள்ளப்பட்ட பல விவகாரங்கள் கவனிப்பாறற்று, புறக்கணிக்கப்பட்டிருப்பதே இன்றைய முஸ்லிம் சமூகத்தின் யதார்த்தமான பிரச்சினையாகும்.

## பெரிய பிரச்சினைகளை இனம் காண்போம்

அல்லாஹ்வின் தாத், ஸிபாத்கள் (பண்புகள்) பற்றி வந்துள்ள அல்குர்ஆன், அல்ஹதீஸ் வசனங்களுக்கு 'தஃவீல்' செய்பவர்கள் பிரச்சினைக்குரியவர்கள் அல்லர். விளக்கம் கொடுக்காது உள்ளவாறே ஏற்க வேண்டும் எனக் கூறும் ஸலபுகளுடைய போக்கே மிகப் பொருத்தமானதாகவும் ஈமானுக்குப் பாதுகாப்பானதாகவும் உள்ளது என்பது எனது கருத்தாகும். - ஆனால், இவ்வாறு விளக்கம் கொடுப்பவர்களை விடவும் 'தாத்'தையும் 'ஸிபாத்' களையும் முற்றாக மறுக்கும் - மேற்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் இறக்குமதியான சிந்தனைகளின் அடிமைகளாக இருப்பவர்களே உண்மையான பிரச்சினைக்குரியவர்களாவர் என்பதை நாம் விளங்க வேண்டும்.

'அர்ரஹ்மானு அலல் அர்ஷி இஸ்தவா' எனப்படும் வசனத்தில் வரும் 'இஸ்தவா' என்ற சொல் 'அவன் உலகை ஆட்சி செய்யலானான்' என்ற பொருளில் வந்துள்ளது என்று சிலரும், அவனது அதிகாரத்தின் மகிமையையே இது காட்டுமென்று வேறு சிலரும் கூறினர். இவர்களில் எவரும் குற்றவாளிகள் அல்லர். ஆனால், அர்ஷையும் அர்ஷின் சொந்தக்காரனையுமே மறுப்போர் எம்மில் இருக்கிறார்கள். இவர்களே முஸ்லிம்களின் மத்தியில் உள்ள பிரச்சினைக்குரியவர்கள் என்பதை நாம் புரிய வேண்டும்.

இன்று தொழுகையுடன் சம்பந்தமான பல விடயங்களில் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன. உதாரணமாக சிலர் சூரதுல் பாத்திஹா ஓத முன்னர் 'பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர் ரஹீம்' என்பதை சப்தமிட்டு ஓதுகிறார்கள். சிலர் சப்தமிடாது ஓதுகிறார்கள். வேறு சிலர் அதனை முழுமையாக ஓதாமல் விட்டு விடுகிறார்கள். சிலர் தக்பீரைக் கட்டுகிறார்கள், மற்றும் சிலர் அல்லாஹு அக்பர் என்று கூறி கைகள் இரண்டையும் கீழே தொங்கவிடுகிறார்கள். சிலர் 'ருகூஉ'விற்குப் போக முன்னரும் ருகூஉவிலிருந்து வந்த பிறகும் கைகளை உயர்த்துகிறார்கள். சிலர் இவ்விரு சந்தர்ப்பங்களிலும் கைகளை உயர்த்துவதில்லை. முஸ்லிம்களில் பிரச்சினைக்குரியவர்கள் இவர்களல்லர். இவை அனைத்தும் கருத்து பேதங்களுக்கு உட்பட்டவையாகும். ஆனால், முஸ்லிம்களில் உண்மையான பிரச்சினைக்குரியவர்கள் யாரென்றால், ஒரு நாளாவது அல்லாஹ்வுக்காகத் தமது சிரசை ஸுஜூதுக்காக தரையில் வைக்காமல் இருக்கும், தமது முதுகுகளை ருகூஉவுக்காக வளைக்காதிருப்பவர்களாவர் என்பதை நாம் உணர வேண்டும்.

ரமழானின் அல்லது ஷவ்வாலின் பிறையை உறுதிப்படுத்துவதில் அங்கீகரிக்கப்பட்ட மத்ஹப்களில் ஏதாவது ஒன்றின் கருத்திற்கிணங்க செயல்படுபவர் பிரச்சினைக்குரியவரல்லர். மாறாக, ரமழானை அடைந்தும்கூட நோன்பு பிடிக்காது, நின்று வணங்காது அதனைக் கடத்தும், அதன் பகல் காலங்களில் எவ்வித பயமோ, கூச்சமோ இன்றி அப்பட்டமாக, வேண்டுமென்றே உண்டு, குடித்து மகிழ்வோரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு முஸ்லிம்களில் பிரச்சினைக்குரியவர்கள். நாம் எவரை கடிந்துகொள்ள வேண்டும் என்பதற்கே நான் இந்த உதாரணங்களைக் கூறுகிறேன்.

மேலும் பாருங்கள், பெண்கள் திரைகளால் முகத்தையும், கையுறைகளால் கைகளையும் மூடத் தேவையில்லை என்று சில இமாம்கள் கருதுகின்றனர். ஆனால், இவர்கள் முஸ்லிம் சமூகத்திலுள்ள குழப்பவாதிகள் அல்லர். *மாறாக தலைகளையும் கழுத்துப் பாகங்களையும், முதுகுகளையும் திறந்துகொண்டு அரை குறையான, வெட்கக்கேடான - உள்ளுறுப்புக்களை வெளியே தெரியப்படுத்தும், அறியப்படுத்தும் - ஆடைகளை . . .* இது போன்ற சொல்வதற்கே வெட்கமான மட்டரகமான ஆடைகளை அணிபவர்களே இன்று எம்மத்தியிலுள்ள பிரச்சினைக்குரியவர்கள் என்பதை நாம் விளங்க வேண்டும்.

## இவைதான் பிரச்சினைகள் :

முஸ்லிம்களது உண்மையான பிரச்சினைகளை நாம் உரிய விதத்தில் இனம் காண வேண்டும். நம்பிக்கையில் பலவீனம், ஷரீஅத் சட்டங்களை உதாசீனம் செய்வது, ஒழுக்கவீழ்ச்சி, தொழுகையைக் கடைப்பிடிக்காதிருப்பது, ஸகாத் கொடுக்காதிருப்பது, மனோ இச்சைகளுக்கு வழிப்படுவது, மானக்கேடான செயல்கள் பல்கிப் பெருகியிருப்பது, பொறுப்புக்கள் வீணடிக்கப்படுவது, நிருவாகச் சீர்கேடு, அடிப்படையான கடமைகளை விட்டு விடுவது, ஷரீஅத்தின் திட்டவட்டமான தடையுத்தரவுக்கு உள்ளாக்கப்பட்ட கருமங்களில் ஈடுபடுவது, அல்லாஹ்வினதும் ரசூலினதும் முஃமின்களதும் எதிரிகளுக்கு விசுவாசமாக நடப்பது போன்றவைதான் இன்றுள்ள உண்மையான சவால்களும் பிரச்சினைகளுமாகும்.

மேலும், முஸ்லிம்களது பிரச்சினைகள் இவைமட்டுமா? பலர் பகுத்தறிவின் வாயிலை மூடி, சிந்தனையைத் தேங்க வைத்து, மனிதனது நாட்ட சக்திக்கு போதையூட்டி, மனித சுதந்திரத்திற்கே உலைவைத்திருக்கிறார்கள். உரிமைகள் ஒழிக்கப்பட்டுள்ளன. கடமைகள் மறக்கப்பட்டுள்ளன. சுயநலம் தாண்டவமாடுகிறது. பிரபஞ்சத்திலும் மனித சமூகத்திலும் அல்லாஹ் உண்டுபண்ணியுள்ள அவனது நியதிகள் உதாசீனம் செய்யப்பட்டுள்ளன. குடிமக்களின் தரத்தை விட உயர் இடத்தில் ஆட்சியாளர்கள் வைக்கப்பட்டுள்ளனர். பலம் என்பதற்கு சத்தியத்தை விடவும், பயன் என்பதற்குக் கடமையை விடவும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

முஸ்லிம்கள் இன்று இஸ்லாத்தின் தூண்களையும் ஈமானின் அடிப்படைகளையும் இஹ்ஸானின் அஸ்திவாரங்களையும் பாழ்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இஸ்லாம், ஈமான், இஹ்ஸான் எனும் மூன்று பற்றியும் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் கேள்வி கேட்டது சம்பந்தமாக பிரபலமான, ஸஹீஹான ஒரு ஹதீஸில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இம்மூன்று அடிப்படைகளிலும் மார்க்கத்தின் நம்பிக்கைக் கோட்பாடுகளதும் நடைமுறைகளதும் வெளிரங்கமான, உள்ரங்கமான அம்சங்களும் உள்ளடங்கியுள்ளன. *இன்றியமையாத இந்த மூன்று அடிப்படைகளையும் ஸ்திரப்படுத்தாமல் இருப்பதே இன்று நாம் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினையாகும்.*

எனவே உண்மையைக் கிரகிக்கும் தன்மைகொண்ட இஸ்லாத்தின் பிரசாரகர்கள் என்ன செய்ய வேண்டும்? எல்லாவற்றிற்கும் முன்பதாக சமூகம் கருத்தொற்றுமையோடு அங்கீகரித்துள்ள விடயங்களில் அவர்கள் தமது கவனத்தைக் குவிப்பது கடமையாகும். *"நாம் அனைவரும் ஏகோபித்து ஏற்றுக்கொண்டுள்ள விடயங்களில் பரஸ்பரக் கூட்டுறவுடன் செயல்படுவோம்"* என்ற கோஷத்தை எழுப்புவது அவசியமாகும். ஏனெனில், இந்த வகையிலான பரஸ்பர ஒத்துழைப்பு ஒரு மார்க்கக் கடமையும், நடைமுறைத் தேவையுமாகும்.

எனது கருத்துப்படி நாம் கருத்தொற்றுமையுடன் ஏற்றுக்கொண்டிருக்கும் விடயங்கள் கொஞ்சநஞ்சமல்ல;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரணமானவையுமல்ல. அவற்றை நிலைநிறுத்த வேண்டுமாயின் நாம் இடைவிடாது முயற்சி செய்ய வேண்டும். சளைப்பை அறியாத செயற்பாடுகள் தேவை. பலவீனத்தைக் காணாத நாட்ட சக்தி பிரயோகிக்கப்பட வேண்டும். அதற்காக புத்திக்கூர்மையுள்ள அறிவாளிகளும், திடமான எண்ணம் படைத்தவர்களும், அசத்தியத்திற்குத் தலைசாய்க்காத உள்ளங்களும், சமூகத்தைக் கட்டியெழுப்பும் ஆற்றல் படைத்தவர்களும் எம்மிலிருந்து இப்பணிக்காக முன்வரவேண்டிய தேவை இருக்கிறது.

## எமது கருத்தொற்றுமை

நாம் எத்தனையோ அம்சங்களில் கருத்தொருமித்தவர்களாக இருக்கிறோமே என்பதை நாம் சற்று ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது.

1. அல்குர்ஆன் அல்லாஹ்வின் ‘கலாம்’ என்பதிலும் முஹம்மத் (ஸல்) அவனது ‘றசூல்’ என்பதிலும் நாம் ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கவில்லையா?

2. அல்லாஹ் ஏகன்; ஒருவன்; அவன் பெறவுமில்லை; பெற்றப்படவுமில்லை. அவனுக்கு நிகராக எவரும் இல்லை என நாம் அனைவரும் ஏகோபித்து ஏற்றுக் கொள்ளவில்லையா?

3. அல்லாஹ் அனைத்துவிதமான பரிபூரணத்துவப் பண்புகளைப் பெற்றுள்ளான்; அனைத்துவிதமான குறைபாடுகளை விட்டும் பரிசுத்தமானவன் என நாம் அனைவரும் ஏற்றிருக்கிறோமல்லவா?

4. அல்லாஹ் ஜல்லஜலாலுஹூவுக்கு உரியவை என அல்குர்ஆன் வர்ணித்துள்ள அனைத்து ‘அஸ்மாஉல் ஹுஸ்னா’க்களையும் நாம் கருத்தொருமித்து அங்கீகரிக்கவில்லையா?

எனவே, வளர்ந்துவரும் இளம் பரம்பரையினதும், இளைஞர்கள், யுவதிகளதும் உள்ளங்களில் அல்குர்ஆன் கூறும் அழகிய ஈமானியக் கருத்துக்களை விதைக்க நாம் பரஸ்பரம் ஒத்துழைப்போமாக! இவ்வாறு விதைக்கையில் தத்துவார்த்த சிந்தனைகளாலும், இறையியல் வாதப்பிரதிவாதங்களாலும் எமது அகீதாவில் திணிக்கப்பட்ட இடைச்செருக்கல்களிலிருந்தும், பிழையான ஏனைய கொள்கை கோட்பாடுகளுடன் நாம் ஒன்றித்துவிட்டதால் உருவாகிய பிழையான நம்பிக்கைகளிலிருந்தும் விலகியிருப்போமாக! துரதிஷ்டவசமாக வரலாற்றில் நிகழ்ந்த குதர்க்கவாதங்களும் உருவாகிய பிழையான மதப் போக்குகளுமே முஸ்லிம் சமூகத்தை சின்னாபின்னப்படுத்தி பல குழுக்கள் உருவாக வழிவகுத்தன என்பதை நாம் நினை விற்கொள்ள வேண்டும்.

5. முழு மனித சமூகத்தினதும் மதிக்கத்தக்க பெறுமானங்களுக்கெதிரான அச்சுறுத்தலாக **நாஸ்திகவாதம்** அமைந்திருப்பதை நாம் அனைவரும் ஏற்றிருக்கிறோமல்லவா? எனவே, இந்த நாஸ்திக நோய் எமது இளைஞர்களைத் தொற்றிக்கொள்ளாதிருக்க நாம் அவர்களுக்கு ஈமானிய அரணை அமைத்துக் கொடுக்க வேண்டும். இதற்காக நாம் பரஸ்பரம் ஒத்துழைப்போமாக! அகீதாவை ஆட்டங்காணச் செய்யவும் சிந்தனையைக் களங்கப்படுத்தவும் நாஸ்திகத்தின் ஆரம்பப் படித்தரங்களாக சந்தேகங்களும், ஐயங்களும் உண்டுபண்ணப்படுகின்றன. இவற்றிலிருந்து நாம் இளைய பரம்பரையைப் பாதுகாக்க வேண்டும். அந்த வகையில் அல்லாஹ் பற்றிய அடிப்படையான, மகத்துவமான உண்மைகளை எடுத்துக்காட்டி ஈமானிய தீபங்களை நாம் அவர்களது உள்ளங்களில் சுடர்விடச் செய்வோமாக! அதாவது, படைத்து, சீரமைத்து நிர்ணயம் செய்து வழிகாட்டல்களையும் வழங்கும் மகோன்னதம் மிக்க ‘ரப்பு’ இருக்கிறான் என்பதற்கான சான்றுகளை தெட்டத் தெளிவாக நாம் முன்வைக்க வேண்டும். இதற்காக நாம் நவீன விஞ்ஞானத்தின் ஆய்வு முடிவுகளைத் துணையாகக் கொள்ளலாம். உண்மையில் நவீன அறிவியல் முடிவுகள் மூலம் அல்லாஹ் தனது படைப்புக்களைத் திட்ப நுட்பமாக அமைத்திருக்கும் பாணியை கண்கூடாகக் கண்டு, அவனது ஆற்றல்களை எங்குமே தரிசிக்க முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. மறுமை வாழ்க்கை உண்டென்றும் அங்கு நீதியான கூலி வழங்கப்படுமென்றும் சுவர்க்கமும் நரகமும் மக்களுக்காக தயார்பண்ணப்பட்டுள்ளன என்றும் நம்புவது வானுலக மதங்கள் அனைத்திலுமுள்ள அடிப்படையான அம்சம் என்று நாம் ஏகோபித்து ஏற்றிருக்கின்றோமல்லவா?

அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்வதன் மூலம் ஏற்படும் தாக்கத்தைப் போலவே மறுமை நம்பிக்கையும் மனித வாழ்வில் கணிசமான தாக்கத்தை உண்டுபண்ணுகிறது. மனிதன் அனைத்து விதமான நற்கருமங்களையும் செய்வதற்கான தூண்டுதலை அந்த நம்பிக்கை வழங்குவதுடன், அனைத்துவித பாவங்களிலிருந்தும் அவனை விலக்கி வைக்கிறது; மனிதன் உளரீதியாகப் பலவீனப்படும் சந்தர்ப்பங்களில் அவனை தைரியப்படுத்தி வைக்கிறது; அவநம்பிக்கை அவனை ஆட்கொள்ளும் வேளைகளில் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை அவனில் உண்டுபண்ணுகிறது.

எனவே, இவ்வளவு தூரம் முக்கியத்துவம் வாய்ந்த அந்த நம்பிக்கையைப் பலப்படுத்தவும், உரமூட்டவும், மறுமையில் நீதியான கூலி கிட்டும் எனும் விசுவாசத்தை ஸ்திரப்படுத்தவும் நாம் *பரஸ்பரம் ஒத்துழைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது*. இந்த மகத்தான நம்பிக்கையில் சந்தேகத்தை உண்டுபண்ண மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கும், அற்ப உலக லாபங்களைக் கவர்ச்சியாகக் காட்டி மக்களை மறுமை நம்பிக்கையிலிருந்து திசை திருப்பிவிடும் மனோ இச்சைகளது செல்வாக்குக்கும் முடிவுகட்ட நாம் கங்கணங்கட்டிச் செயல்பட வேண்டியிருக்கிறது.

7. இஸ்லாத்தின் ஐந்து தூண்களாகிய **ஐங்கடமைகள்** விடயத்தில் நாம் கருத்தொற்றுமை கொண்டிருக்கிறோமல்லவா? அப்படியாயின் அவற்றை சீரிய முறையில் போதிப்பதற்கும் அல்லது கற்றுக் கொடுப்பதற்கும் அவற்றின்பால் மக்களை அழைப்பு விடுக்கவும் ஆசையூட்டவும் ஞாபகமூட்டவும் சிறந்த ஊடகங்களையும் வழிமுறைகளையும் கையாள்வதில் நாம் ஏன் *பரஸ்பரம் ஒத்துழைத்துக் கொள்ளக் கூடாது?* இதற்காக நவீன ஒலி, ஒளி சாதனங்களை நாம் பயன்படுத்தலாமல்லவா?

8. **ஈமானின் ஆறு அடிப்படைகளான** அல்லாஹ், மலக்குகள், வேதங்கள், ரசூல்மார்கள், மறுமை, கழாகத்ர் என்பவற்றை நாம் அனைவரும் விசுவாசித்திருக்கிறோமல்லவா? அப்படியாயின் அவற்றை அப்பழுக்கற்ற விதத்தில் முன்வைக்கவும் அவற்றின் மீதுள்ள மக்களது நம்பிக்கையை ஸ்திரப்படுத்தவும் நாம் ஏன் *கூட்டுறவுடன் பாடுபடக் கூடாது?* முஸ்லிம்களது சிந்தனைகளையும் ஆத்மாக்களையும் அவை சென்று தொட - இஸ்லாத்தின் இலகு தன்மையுடன் இயைந்து போகும் வகையில் - இலகு வழிகளை ஏன் நாம் பரஸ்பர ஒத்துழைப்புடன் கையாளக் கூடாது? இந்த ஈமானிய அடிப்படைகளை குர்ஆன் முன்வைக்கும் பாணி மகத்தானதாகும். ஒரு விடயத்தை மக்களுக்குத் தெளிவுபடுத்தவும் புரிய வைக்கவும் நவ உலகம் பல உத்திகளையெல்லாம் கையாண்டு வருகிறது. இவற்றை நாமும் பின்பற்ற முடியும். ஆனால் ஈமானைப் பற்றிப் பேசும் நாம் எமது முன்னோர்கள் மேற்கொண்ட குதர்க்க வாதங்கள் மற்றும் கருத்து மோதல்களையும் நவயுகத்தில் நவீன கால மனிதர்கள் கிளறிவிட்டுள்ள சர்ச்சைகளையும் தவிர்த்து ஒதுக்கி, குர்ஆன் நிலைநிறுத்தியவற்றை நாமும் நிலைநிறுத்தி, அது மறுத்தவற்றை நாமும் மறுத்து முஸ்லிம்களது மனதில் ஈமானிய விருட்சத்தை இலகுவாக வளர்க்க பரஸ்பரம் ஒத்துழைக்கலாமே?

9. நபி (ஸல்) எந்த **பண்பாட்டு விழுமியங்களைப்** பரிபூரணப்படுத்த மண்ணுலகுக்கு அனுப்பப்பட்டார்களோ, எத்தகைய ஒழுக்கங்களது நடைமுறை உருவமாகத் திகழ்ந்தார்களோ அவை விடயமாக எமக்குள் எந்த கருத்து முரண்பாடுகளும் இல்லை தானே.

ஒழுக்கங்கள் எனும்போது இறைவனுடன் மனிதன் கொள்ளும் தொடர்பின் போது கைக்கொள்ளப்படுபவைகளான அவன்மீது 'தவக்குல்' வைப்பது, அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருபா கடாட்சங்களுக்காக நன்றி பாராட்டுவது, அவன் புறத்தே இருந்து வரும் சோதனைகளின் போது பொறுமையைக் கைக்கொள்வது, அவனது ஏற்பாடுகளை மன விருப்பத்தோடு ஏற்றுக் கொள்வது (ரிளா), அவனது அருளை எதிர்பார்த்து வாழ்வது (ரஜாஉ), அவனது தண்டணையைப் பயப்படுவது (கஷ்யா), அவனுக்காக அனைத்தையும் செய்வதும் அல்லது விடுவதும் (இக்லாஸ்), அவன் பால் பேராவல் கொள்வது (ஷவ்க்), அவனுக்காகவே ஒருவரை விரும்புவது, அவனை திக்ர் செய்வதில் நிம்மதி காண்பது போன்றவையாக இருக்கலாம்; அல்லது மனிதர்களுடன் கொள்ளும் தொடர்புகளின் போது பேணப்படும் ஒழுக்கங்களான உண்மை பேசுவது, பொறுப்புக்களை நிறைவு செய்வது, வாக்குறுதியைப் பேணுவது, உடன்படிக்கையைப் பாதுகாப்பது, வீரம், கொடை கொடுப்பது, நாணம், பணிவு, ஒழுங்கமைந்த வாழ்வு, பரஸ்பர ஒத்துழைப்பு ...போன்றவையாக இருக்கலாம், - இவை அனைத்தைப் பற்றியும் கருத்தொருமைப்பட்டிருக்கிறோமல்லவா?

எனவே, இவற்றைப் பரவலாகத் தோற்றுவிப்பதிலும் சிறியோர் முதல் முதியோர் வரையுள்ள அனைவரிடத்திலும் இப்பெறுமானங்களை வேரூண்ட வைப்பதிலும் நாம் கூட்டுறவுடன் செயற்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும். இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் அழிப்பவை (முஹ்லிகாத்) எனப் பெயரிட்டுள்ள - இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்களுக்கு முரணான, தனிமனிதனைச் சீரழித்து, சமூக அமைப்பை சுக்குநூறாக சிதைத்து விடும் - தீய ஒழுக்கங்களுக்கெதிராக நாம் போர்க்கொடி தூக்கினாலென்ன?

10. 'முஹ்கம்' ஆன நேரடியான, தெட்டத் தெளிவான பொருள்களைத் தரும் அல் குர்ஆன் வசனங்களின் மூலம் நிறுவப்பட்டுள்ள **ஷரீஆவின் உறுதியான திட்டவட்டமான விதிகள் - சட்டங்கள்** ஏராளம் இருக்கின்றன. முஸ்லிம் உம்மத்தும் அவற்றை கருத்தொருமித்து ஏற்றிருக்கிறது. அதனது சிந்தனைகள், உணர்வுகள், மற்றும் செயல்களது ஒருமைப்பாட்டுக்கு இந்த சட்டங்கள் வழி வகுத்துள்ளன. அப்படியான சட்ட விதிகள் பற்றி எம்மிடம் கருத்து பேதங்கள் எதுவுமில்லையே! அப்படியாயின் அவற்றைப் பேணிப் பாதுகாப்பதிலும் கச்சிதமாக நடைமுறைப்படுத்துவதிலும் நாம் ஏன் பரஸ்பரம் ஒத்துழைத்துக்கொள்ளக் கூடாது? திட்டவட்டமாக நிறுவப்பட்ட (கத்இய்யாத்) சட்டங்களை, ஐயத்திற்கிடமான (ளன்னியாத்)களாகவும் 'முஹ்கமாத்'களானவற்றை 'முதஷாபிஹாத்' களாகவும் மாற்றிவிட சில விஷமிகள் எத்தணிக்கிறார்கள். இந்த 'கத்இய்யாத்'களையும், 'முஹ்கமாத்'களையும் இவர்களது கையாடல்களிலிருந்து பாதுகாக்க நாம் ஏன் அணிதிரளக் கூடாது? இவர்கள் தமது மனோ இச்சைகளுக்கும் குறை மதிகளுக்கும் இசைவாக தீனை அமைத்துக்கொள்ள அல்லது ஆட்சியாளர்களது அபிலாஷைகளையும் சைத்தான்களது வேணவாக்களையும் பூர்த்தி செய்யும் விதத்தில் அதனை குழைத்த மாவு உருண்டையைப் போல் ஆக்கிக்கொள்ள முயற்சிக்கின்றனர். இந்நிலையிலிருந்து அச்சட்டங்களை பாதுகாக்க நாம் கைகோர்த்துக் கொள்ள முடியுமல்லவா?

11. இன்றைய காலகட்டத்தில் சியோனிஸம் என்பது ஒரு பேராபத்து என்று நாம் அனைவரும் ஏற்றிருக்கிறோம். அது மதரீதியானதும், ராணுவ ரீதியானதும், பொருளாதார, அரசியல், சமூகவியல், பண்பாட்டு, கலாசார, நாகரீக ரீதியானதுமான பேராபத்தாக இருக்கிறது. சியோனிஸ்டுகள் மஸ்ஜிதுல் அக்ஸாவை நிர்மூலமாக்கிவிட்டு அவ்விடத்தில் தமது தேவாலயத்தை (ஹைகல்) நிர்மாணிக்க விழைகிறார்கள்; அதுமட்டுமல்ல மதீனாவிலும் கைபரிலும் தமது கண்களை வைத்திருக்கிறார்கள்; அவற்றை அடையும் நாளை எதிர்பார்த்திருக்கிறார்கள். அவர்கள் திட்டமிடுகிறார்கள்; செயலாற்றுகிறார்கள். இறுதியில் அவர்கள் நினைப்பதை அடைவார்கள். நாம் இவ்வாறு கூறக்காரணம் என்னவெனில், ஒரு காலத்தில் எம்மில் சிலர் சியோனிஸ்ட்களது திட்டங்கள் சிலவற்றைப் பார்த்து இவை வெறும் மனக்கோட்டைகள் என்றனர். ஆனால், இவை யதார்த்தமாக நடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைக்கு வந்திருக்கின்றனவே. எமது பூமிகளை அவர்கள் கபளீகரம் செய்து அங்கிருந்த பூர்வீகக் குடிகளைத் துரத்தியடித்தனர். அவர்களது ஆக்கிரமிப்பு இன்னும் தொடர்கிறது. அவர்களது போராட்டத்தை அவர்கள் முழுக்கவும் தமது மதத்தின் நிலைக்களனிலிருந்தே மேற்கொள்கிறார்கள். யூதர்கள் தவ்ராத்திலும் தல்மூதிலும், இந்த வெற்றிகள் பற்றிய தமது நபிமார்களது முன்னறிவிப்புக்களிலும் கொண்ட நம்பிக்கையாலும் உந்தப்பட்டே இவ்வளவு ஊக்கமாக இருக்கிறார்கள். இவற்றை நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம்.

அப்படியாயின், அவர்கள் எமக்கெதிராகப் போராடுவதற்கு எதனை ஆயுதமாகப் பயன்படுத்துகிறார்களோ அது போன்றதோர் ஆயுதத்தை நாமும் பயன்படுத்துவதில் ஏன் ஒன்றிணையக் கூடாது? அல்லாஹ்வால் ரத்துச் செய்யப்பட்டு விட்ட அவர்களிடமிருக்கும் யூத மதத்தை நாம் எமது நிரந்தரமான இஸ்லாத்தின் மூலம் ஏன் எதிர்கொள்ளக் கூடாது? திரிபுபடுத்தப்பட்ட அவர்களது தௌராத்திற்கெதிராக, பவித்திரமாகப் பாதுகாக்கப்பட்ட எமது குர்ஆனின் மூலம் ஏன் நாம் போர் தொடுக்கக்கூடாது? பொய் புரட்டுக்களால் நிறைந்து காணப்படும் அவர்களது தல்மூதுக்கெதிராக யதார்த்த உண்மைகளையே உள்ளடக்கியுள்ள சுன்னாவின் முதுசொம்புகளையும் கருத்துக்களையும் பயன்படுத்தி ஏன் நாம் யுத்தம் தொடுக்கக் கூடாது?

ஆசிய, ஆபிரிக்கக் கண்டங்களிலுள்ள முஸ்லிம் நாடுகளிலும் அல்லது முஸ்லிம்களைப் பெரும்பான்மையினராகக் கொண்டிருக்கும் நாடுகளிலும் வஞ்சக நோக்குடன் பல்வேறு சூழ்ச்சி வலைகளைப் பின்னிக்கொண்டு ஊடுருவியிருக்கும் யூத மதத்தின் நடவடிக்கைகளின் அபாயத்தை நாம் உணர வேண்டும். அதன் ஆகர்ஷத்திலிருந்தும் தாக்கத்திலிருந்தும் விடுபட நாம் ஒரே குடையின் கீழ் நின்று ஏன் உழைக்காதிருக்கிறோம்?

(தொடரும்...)

**(38ம் பக்கத் தொடர்ச்சி)**

சொற் பிரயோகம், வசனநடை இரண்டிலும் புனித மறை அல்குர்ஆன் அற்புதமானது. சொற்களை உருவாக்குவதில் அல்குர்ஆனின் ஒரு எழுத்து அது அமைய வேண்டிய இடத்தில் அமைந்திருப்பது அற்புதமாகும். வசனங்களை வடிப்பதில் அல்குர்ஆனின் ஒரு சொல் அதற்குரிய இடத்தில் அமையப் பெற்றுள்ளது அற்புதமாகும். ஓர் ஆயத்தை உருவாக்குவதில் ஒரு வசனம் அதற்குரிய இடத்தில் அமைந்திருப்பது அற்புதமாகும். இவை ஒவ்வொன்றுக்கும் பகரமாக வேறு ஒரு எழுத்தோ அல்லது ஒரு சொல்லோ அல்லது ஒரு வசனமோ இடம்பெற முடியாது.

இறுதி வேதம் அல்குர்ஆன் அது வழங்கும் போதனைகளிலும் அவற்றை ஒழுங்குற முன்வைப்பதிலும் அற்புதமானது. அதைப் படிக்கும் ஒருவன் வாழ்க்கை, பிரபஞ்சம், மனிதன் ஆகிய மூன்றுக்குமிடையிலான உயிரோட்ட மிக்க தொடர்பைக் காண்பான். பிரபஞ்சத்தில் மனிதனின் யதார்த்த நிலைப்பாட்டையும் அவனது உன்னத பணியையும் பிரத்தியட்சமாக விளக்கும் அல்குர்ஆனின் கருத்துக்களும் அற்புதமானவை.

நவீன விஞ்ஞானம் வெளிக்கொணர்ந்த பல மறைவான உண்மைகளை எப்போதோ அல்குர்ஆன் நிறுவியிருப்பது அதன் அறிவியல் அற்புதத்துக்கு எடுத்துக்காட்டாகும். தவிர, மனித வாழ்வின் மேம்பாட்டுக்கான சட்டங்களை வழங்கி மனித உரிமைகளை மதித்து பாதுகாத்திருக்கும் அல்குர்ஆன் அனைவராலும் போற்றப்படும் ஒரு முன்மாதிரியான சமூகத்தை உருவாக்கியதும் அதன் அற்புதங்களின் ஒன்றாகும். இடையர்களாகவும் நாடோடிகளாகவும் மனோ இச்சைக்கு வழிப்பட்டவர்களாகவும் வாழ்ந்த பல துறைகளிலும் பிற்போக்கான ஒரு சமூகத்தினரை நாடாளு மன்னர்களாகவும் முன்னோடிகளாகவும் ஆக்கிய பெருமை அல்குர்ஆனுக்கு மாத்திமே உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைப் பேழை

**கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி**

1982ம் ஆண்டு ஜாமிஆவின் முதல் பட்டமளிப்பு விழாவுக்குப் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ள வருகை தந்திருந்த பேரறிஞர் ஸெய்யத் அபுல் ஹஸன் அலி நத்வி ஜாமிஆவில் எனது உத்தியோகத்த வாசஸ்தலத்தில், என்னுடன் கழித்த ஒரு வாரகாலம் பற்றிய நினைவுகள் இன்னும் பசுமையாக உள்ளத்தில் அப்படியே பதிந்துள்ளன.

ஒரு பேரறிஞனின்–'ஆலிம் அர்–ரப்பானி' என்ற சிறப்புப் பெயருக்கே பொருத்தமான ஆத்மிக ஆளுமை அமையப் பெற்ற ஒரு பெரியாரின் வாழ்வினை ஒரு வார காலம் மிக நெருங்கிய நோக்கில் அவதானிக்கும் வாய்ப்புக் கிடைத்தமையை இன்றும் ஒரு பெரும் அருட்பேறாகவே கருதுகின்றேன். பகல் முழுவதும் ஓய்வின்றி நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு அவர்களைச் சந்திக்க வரும் மனிதர் களை முகம்மலர வரவேற்று உரையாடி–இரவு களைத்துப் பலவீனமான நிலையில் உறங்கியும் . . . இரவு 3.30 மணியளவில் தஹஜ்ஜத் தொழுகையில் மெய்மறந்த நிலையில் நீண்ட நேரம் ஸுஜூதில் சிரம் சாய்த்து நிற்கும் அந்த பக்திபூர்வமான தோற்றம்–ஸுபஹுத் தொழுகையின் பின்னர் அல்குர்ஆனை மெய்மறந்த நிலையில் அழகிய ஒலியில் ஓதும் அந்த கணீரென்ற உணர்ச்சி தோய்ந்த குரல்–நபி (ஸல்) அவர்களின் பெயரைக் கூறிய மாத்திரத்திலேயே நீரை வருவிக்கும் கண்களைக் கொண்ட கணிந்த உள்ளம்–கருத்தாளம் மிக்க உரையாடல்களின் போது ஆழமான அறிவையும், தர்க்க நோக்கையும், வரலாற்றுப் பார்வையையும் புலப்படுத்தும் நாவன்மை.

"யா ஹய்யு யா கய்யூம் பிரஹ்மதிக அஸ்தஸ்" என்ற வார்த்தைகளை அடிக்கடி உச்சரித்து நிம்மதியும் நிறைவும் காணும் அமைதி பூத்த உள்ளம். ஸலபுஸ்ஸாலிஹீன்கள் என்னும் நன்நெறிசார்ந்தோர்கள் இப்படித்தான் இருந்திருப்பார்களோ என அவர்களைக் காணும்போது நான் அடிக்கடி சிந்திப்பதுண்டு.

ஒரு நாள் மாலைப்பொழுது அஸர் தொழுகையின் பின்னர் மௌலானா அவர்கள் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள். ஜாமிஆவின் விரிவுரையாளர்களுக்கான அவர்களது சொற்பொழிவு நடைபெற இன்னும் அரை மணித்தியாலங்கள் இருந்தன.

வீட்டில் நானும், அவரது மருமகன் ஸல்மான் நத்வியும் மௌலானா அவர்களும் அமர்ந் திருந்தோம். அத்தகைய சந்தர்ப்பங்களை அவர்களிடமிருந்து பல விடயங்களைத் தெரிந்துகொள்ளப் பயன்படுத்திக் கொள்வேன். அப்போது ஷாஹ் வலியுல்லாஹ்வின் ஹுஜ்ஜதுல்லாஹ் அல்–பாலிகாவிலுள்ள சில விடயங்கள் பற்றி அவர்களது கருத்தைக் கேட்டேன். அவர்கள் அது பற்றி விளக்க ஆரம்பிக்கும்போது, அவர்களைச் சந்திக்கப் பலர் வந்தனர். எமது உரையாடல் தடைப்பட்டது. சொற்பொழிவுகளின் நேரமும் நெருங்கிவிட்டது. அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல்–சந்திப்புகள்–இரவு உணவு–இப்படியே சங்கிலிக் கோர்வை போன்ற பல நிகழ்வுகள்.

இரவு 11.30 மணி நானும் ஸல்மான் நத்வியும் அவர்களை அறைக்கு அழைத்துச் சென்று அமைதியாகத் தூங்கும்படி கூறிவிட்டு எங்களது அறைகளுக்கு வந்துவிட்டோம். அதற்கு அரை மணித்தியாலங்கட்குப் பிறகு ஷெய்க் நத்வி அவர்கள் அறைக்கு என்னை அழைப்பதாகக் கூறி ஸல்மான் நத்வி எனது கதவைத் தட்டினார். ஏதாவது அவசரமான முக்கிய விடயமாக இருக்குமென எண்ணி தயக்கத்துடன் சென்றேன். அப்போது அல்லாமா நத்வி அவர்கள் என்னை நோக்கி "ஷாஹ் வலியுல்லாஹ்" பற்றிய விளக்கத்தை ஆரம்பித்த உடனேயே தடைப்பட்டு விட்டதே! உங்களுக்குத் தூக்கமில்லையே, அது பற்றிப் பேசலாமா? என்றார்கள். இஸ்லாமிய அறிவுப் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும்–உலகமே அமைதியடைந்த வேளையில் அறிவையும், அறிஞர்கள் பற்றியும் சிந்திக்கும் அந்த மாமனிதரை நோக்கினேன். அவர்கள் பேச ஆரம்பித்தார்கள்–ஷாஹ் வலியுல்லாஹ் அவர்கள் என் கண்முன்னே இருப்பது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது.

அவரது நூல்கள் மூலம் நாம் கற்றதைவிட அவர்களுடைய ஆத்மிக ஆளுமையின் ஸ்பரிசத்தால் பெற்ற உணர்வுகளை பெரிதாக மதிக்கின்றேன். அந்த இனிய உணர்வுகளையும் நினைவுகளையும் எனது சிந்தனைப் பேழையில் இன்னும் பாதுகாத்து வருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜாமிஆ செய்திகள்

தொகுப்பு : அபூ ஷைமா

17-01-2000

ஜாமிஆவின் புதிய கல்வியாண்டின் முதலாம் தவணை ஆரம்பமானது.

29-01-2000

முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களமும், ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனமும் இணைந்து நடாத்திய மஸ்ஜித் நிர்வாகம் தொடர்பான தேசிய மட்டக் கருத்தரங்கில், ஜாமிஆவின் பணிப்பாளர் கலாநிதி M. A. M. சுக்ரி - **முஸ்லிம் சமூகப் புனரமைப்பில் மஸ் ஜித்களின் பங்கு** - எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். இக்கருத்தரங்கு கொழும்பு ஸாஹிராக் கல்லூரியில் இடம்பெற்றது.

01-02-2000

அண்மையில் காலஞ்சென்ற இஸ்லாமிய உலகின் தலைசிறந்த அறிஞரான மௌலானா சையித் அபுல் ஹஸன் அலீ நத்வி அவர்களை நினைவுகூறும் வகையில், **மௌலானா சையித் அபுல் ஹஸன் அலீ நத்வி - ஆளுமையும் சிந்தனைப் பங்களிப்பும்** - எனும் தலைப்பில் ஜாமிஆவின் பணிப்பாளர் கலாநிதி M. A. M. சுக்ரி அவர்களால் ஜாமிஆ மாநாட்டு மண்டபத்தில் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது.

03-02-2000

ஜாமிஆவின் பழைய மாணவர்கள், ஆதரவாளர்கள், அதன் வளர்ச்சியில் அக்கறையுள்ள வர்கள் தற்போது தமக்கிடையே சர்வதேச ரீதியில் தகவல் தொடர்பு, கருத்துப் பரிமாற்றம் என்பவற்றை மேற்கொள்வதற்கு இலகுவாக, **அன்ஸாருந் நளீமிய்யா** என்ற E-mail செய்தித் தொடர்பு வலைப்பின்னல் அமைப்பு இயங்கி வருகின்றது. இதனை அஷ்-ஷெய்க் S. அலவி ஷரீப்தீன் அவுஸ்திரேலியா, மெல்பர்ன் நகரினூடாக நடத்தி வருகின்றார். இதில் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்புபவர்கள் **ansarun-naleemiah@egroups.com** என்ற E-mail முகவரியுடன் தொடர்புகொள்ள முடியும்.

13-02-2000

ஜாமிஆ பரிபாலன சபையினரின் வருடாந்தப் பொதுக் கூட்டம் ஸ்தாபகத் தலைவர் அல்ஹாஜ் M. I. M. நளீம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

## முக்கிய அறிவித்தல்

சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகங்களது சம்மேளனத்தின் அனுசரணையுடன் ஜாமிஆவுக்கு, கல்வியாண்டு 2000 / 2001 இற்கான அறபு மொழி மற்றும் இஸ்லாமிய கற்கை நெறிகள் சார்ந்த B. A., M. A., M. Phil, Ph D ஆகியவற்றிற்கான புலமைப்பரிசில் வாய்ப்புகள் Jordan, U. K., Uganda, Iran, Bahrain, Tunisia, Saudi Arabia, Egypt, Somalia, Iraq, Palestine, Lebanon, Malaysia, Libya, Niger, Yemen, India போன்ற நாடுகளிலுள்ள முக்கியமான பல்கலைக்கழகங்களினால் வழங்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

Secretary – Foreign Relations — Tel / Fax 034 76339



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது விற்பனை முகவர்கள்

| | | |
|---|---|---|
| இஸ்லாமிக் புக் ஹவுஸ் | – | 77, சிறீ வஜிரஞான மாவத்தை, தெமட்டகொட வீதி, கொழும்பு–09. |
| ஹாதி புக் டிபொட் | – | 79, தெமட்டகொட வீதி, கொழும்பு–09. |
| இஸ்லாமிய புத்தக நிலையம் | – | (பாம் லீஃப் முஸ்லிம் ஹோட்டல்) 211/1,ஒல்கொட் மாவத்தை, கொழும்பு–11. |
| இஸ்லாமியக் கல்வி நிலையம் | – | ரோஹினி ரோட், வெள்ளவத்தை. |
| றிசானா புத்தக நிலையம் | – | அப்துல்லா ஷொப்பிங் கொம்ளக்ஸ், 20/14–7 1வது மாடி, சிமென்ஸ் றோட், மருதானை, கொழும்பு–10. |
| அல்–ஹிக்மா புக் சென்ரர் | – | 122, மன்னார் வீதி, புத்தளம். |
| பஜ்ரியாஸ் | – | 126/A, அஸ்னா சுப்பர் மார்கட், அக்குரண. |
| நிவ் மெக்ஸன்ஸ் | – | 218, டி. எஸ். சேனநாயக்க வீதி, கண்டி. |
| ஸில்மியா பாமஸி | – | வித்தியாலய வீதி, கிண்ணியா–04. |
| பத்ரியாஸ் | – | 5, பிரதான வீதி, பலாங்கொட. |
| சொயிஸ் பலஸ் | – | 67, பிரதான வீதி, கல்முனை. |
| அறிவு நூல் நிலையம் | – | 4, புன்னக்குடா வீதி, ஏறாவூர்–03. |
| எம். ஜே. ஏ. நஸீர் (ஆசிரியர்) | – | P/கன்தல்குளிய முஸ்லிம் மகா வித்தியாலயம், கன்தல்குளிய. |
| ஏ. எஸ். எம். ஹுசைன்தீன் (ஆசிரியர்) | – | KG/ஸாஹிரா தேசிய கல்லூரி, மாவனல்லை. |
| எம். எஸ். புக் சென்ரர் | – | இல. 01, கடுகன்னாவ வீதி, (நிவ் பஸார்) கம்பளை |
| எம். எச். எம். தாஹா (நளீமி) | – | மடிகே மித்யால மு.ம.வி., பண்டாரகொஸ்வத்த. |
| எம். ஏ. பௌசுர் ரஹ்மான் | – | நிவ் பிரிட்ஜ் வீதி, அட்டாளச்சேனை–10. |
| எம். எம். ரஸ்வி | – | 24, தரலன்த வீதி, மாத்தளை. |
| எம். ஐ. எம். ஜுனைட் (ஆசிரியர்) | – | 'ஹினாயா மன்ஸில்', கோட்டே கொட, ஹெம்மாதகம. |
| ஏ. ஜீ. முஜீப் | – | தாரிக் வீதி, மூதூர்–01. |
| எம். பீ. எம். அன்ஸார் (ஆசிரியர்) | – | 440, ஹிஜ்ரா மாவத்த, திஹாரிய. |
| பீ. ஏ. ஷிஹாப்தீன் | – | 'நுஸ்ரத்', 22/6, கெப்பிட்டி பொல வீதி, பிங்கராவ, பதுளை. |
| ரோயல் புத்தக நிலையம் | – | பிரதான வீதி, அக்கரைப்பற்று. |
| நெஷனல் குரோஸரீஸ் | – | 44, பிரதான வீதி, மாவனல்லை. |
| எஸ். எம். ஹம்ஸி (நளீமி) | – | டெல் வெஸ்ட், சில்மியாபுர, நுவரெலியா. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது விற்பனை முகவர்கள்

| | | |
|---|---|---|
| யூ. முஹமட் அலி & கோ | – | 'ஸமீம் ஸ்டோர்ஸ்', 64, பஸார் வீதி, சம்மாந்துறை. |
| எம். என். எம். ஜவ்பர் (நளீமி) | – | 269, தெல்கஹவத்த, அட்டுளுகம, பண்டாரகம. |
| அஸ்–ஸலபியா புக் சென்ரர் | – | கண்டி வீதி, பரகஹதெனிய. |
| றஸ்ஸாகியா புக் சென்ரர் | – | 131, மூர் ஸ்ரீட், திருகோணமலை. |
| ஜலீல் ஸ்டோர்ஸ் | – | மார்க்கட் பஸார், நிந்தவூர். |
| எம். எச். எம். நியாஸ் | – | 78, மனபொட, உக்குவல. |
| ஏ. ஆர். எம். முபாரக் | – | அப்துல்லாஹ் அன் கோ, சுப்பர் மார்கட், நாவலபிட்டி |
| எம். எம். ஆதம்பாவா (உதவி அதிபர்) | – | அல்–அஸ்ஹர் வித்தியாலயம், கல்லால்ல, பொலன்னறுவை. |
| இஸ்லமிக் புக் சென்டர் | – | எம். பி. ஸீ. எஸ். வீதி, மாவடிச்சேனை, வாழைச்சேனை. |
| எம். எஸ். எம். பூஸரி (ஆசிரியர்) | – | அல்–பத்ரியா மஹாவித்தியாலயம். கஹட்டோவிட, வெயாங்கொட. |
| எம். எஸ். எம். தாலிப் (ஆசிரியர்) | – | KG/M/W/பத்ரியா மத்திய கல்லூரி, மாவனல்லை. |
| எம். எச். எஸ். மொஹமட் (அதிபர்) | – | அஹதியா வீதி, மள்வானை. |
| ஸதன் ஸ்டோர்ஸ் | – | ஏ. ஜே. எம். சவ்துதீன் (ஆசிரியர்) பொரல ரோட், வெலிகம. |
| ஏ. ரீ. நிஜாம்டீன் | – | 17, சிங்ஹபுர வீதி, சிலாபம். |
| ஸபிய்யா பவுன்டேசன் | – | ஸபிய்யா கல்வி ஆய்வு நிறுவனம், மாவனல்லை. |
| எச். எம். ஸைபுல்லாஹ் | – | இஸ்லாஹியா அரபிக் கல்லூரி, மாதம்பை. |
| ஏ. ஏ. எம். ஜின்னா | – | 143/2, 'இர்சாட் மன்ஸில்', மெடிகிகில்ல, தெல்தொட்ட. |
| ஏ. எம். ஏ. ரஹ்மான் | – | 209/7, ஸாஹுல் ஹமீத் ஹாஜியார் லேன், பழைய வீதி, காத்தான்குடி. |
| ஐ. இஸட். ஏ. ஆப்தீன் (அமீனி) | – | ஸவுதி மாவத்தை, பண்ணவ, கொபெய்கன. |
| எம். அப்துஸ்ஸலாம் | – | 327, கலபிட்டியகம, நிகவரட்டிய. |
| எம். யூ. பவ்சுல் அமீர் (ஆசிரியர்) | – | அலுகொல்ல, போகஹகும்புர. |
| எம். ஆர். எம். இர்பான் | – | 11, முதலாம் ஒழுங்கை, ஸ்பில் றோட், புத்தளம். |
| எம். ஆர். எம். றம்ஸி அலி | – | "றஸீனா விழா", மத்தமகொட, கன்னதொட்ட. |
| எம். எல். எம். ஹகீம் | – | இஸ்லாஹிய்யா அரபிக் கல்லூரி, மாதம்பை. |
| எம். பீ. இஸ்மாயில் | – | ஸிராஜ் அரபிக் கல்லூரி, ஒட்டமாவடி. |

Published by Naleemiah Bureau of Islamic Publications, P.O. Box: 01, Beruwala.
Offset: A. J. Prints, No. 44, Station Road, Dehiwela.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org